# திட்டம்

## மாத இதழ்

மலர் 50

இதழ் 11

ஜூலை 2018

ஆஷாத - ஷ்ரவண 1939



முதன்மை ஆசிரியர்

**தீபிகா கச்சல்**

இணை ஆசிரியர்

**ஆ. இளங்கோவன்**

துணை ஆசிரியர்

**சஞ்சய் கோஷ்**


கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துக்களும் அரசின் கருத்துக்களை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டங்களால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.


**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| சிறப்பிதழ் | ... | ரூ. 30.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ. 610.00 |

**சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :**

உதவி இயக்குநர்

**திட்டம்**

வெளியீட்டுப்பிரிவு

A Wing இராஜாஜி பவன்

பெசன்ட் நகர்

சென்னை -600 090

தொலைபேசி : 044-2446 5382


## உள்ளடக்கம்


- தலையங்கம்
- சிக்கனமான செலவில் வீட்டு வசதி குடியிருக்க வீடு கிடைப்பதை உறுதிப்படுத்துதல்
  - ஹர்தீப் எஸ்.பூரி
- ஆயிரம் நாள்களில் அனைத்து கிராமங்களுக்கும் மின்வசதி - ஒரு சாதனைப் பயணம்
  - ஏ.கே.பல்லா
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் விரிவாக்கத்திட்டம் 2022
  - மனோஜ்குமார் உபாத்யாய்,
  - அபினவ் திரிவேதி
- இளைஞர்களும் சமூகத்தொடர்பும்
  - அமரேந்திர குமார் துபே
- விவசாயிகள் நலன் : பொறுப்பான முன்னுரிமை
  - ஜக்தீப் சக்சேனா
- இந்தியப்பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் பங்கு
  - எஸ். சிவஞானம்
- காவேரி மேலாண்மை வாரியத்தின் முக்கியத்துவம்
  - எஸ்.ரங்கநாதன்
- கிராமப்புறங்களுக்கு புத்துயிரூட்ட இந்திய அரசின் முயற்சிகள்
  - எம்.சின்னதுரை
  - கே.ஆர்.அஷோக்
- சென்னையில் நீடித்த போக்குவரத்து புதியதொரு முன்னுதாரணத்தை நோக்கி
  - சாய்ரத்னா சைதன்யா குருகுபெல்லி
- குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் ஒரு அறிமுகம்
  - வே. அமுதவல்லி
- இந்தியாவின் சிறு நகரங்களுக்கு விமானச்சேவை உதான் திட்டம்
  - சிந்து பட்டாச்சாரியா
- செய்தித்துளிகள்




Log on to **http://publicationsdivision.nic.in/**

*in collaboration with* **bharatkosh.gov.in**

# வளர்ச்சி இலக்குகள்

வளர்ச்சி என்பது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில் பொருள்படும். உணவு, உடை, உறையுள் என்பது மட்டுமே ஒரு சிலருக்கு வளர்ச்சி என்பதைக் குறிப்பதாக இருக்கும். மற்ற சிலருக்கோ அதை விடவும் மேலாக, உணவு என்பது உணவுப் பாதுகாப்பையும், உடை என்பது தங்கள் அடையாளத்தை வெளிப்படுத்திக்கொள்ளும் ஒரு வழியையும், உறையுள் என்பது வெறும் மேற்கூரை மட்டுமின்றி, விளையாடுவதற்கும், உடற்பயிற்சிக்குமான இடத்துடன் கூடிய விசாலமான வீட்டையும் , தரமான வாழ்க்கையையும் குறிப்பதாகவும் இருக்கும். எனினும், உணவுப்பாதுகாப்பைப் பற்றிப் பேசும்போது அதை உறுதிப்படுத்துவதில் மிக முக்கியமானவர் விவசாயிதான். மிக முக்கியமான உணவுச் சங்கிலியில் இவர் தான் முதல் மனிதர். அவர் உணவு வழங்கும் மக்களுக்கோ, கொள்கைகளை வகுப்பவர்களுக்கோ விவசாயிகளின் நலன்கள் பற்றிய அக்கறை முதன்மையானதாக இருப்பதில்லை. இந்த நிலைமையைப் புரிந்துகொண்டு விவசாயிகளின் நலனுக்கு அளிக்கவேண்டிய முக்கியத்துவத்தை அளிக்கவும், 2020 வாக்கில் விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக்கவும் அரசாங்கம் பலவிதமான முன் முயற்சிகளை எடுத்துள்ளது. இவைதவிர, விவசாயிகளுக்கு அடிக்கடி கேடுபயக்கும் இயற்கை இடர்பாடுகளுக்கு எதிரான பாதுகாப்பை மண்வள அட்டை, பிரதம




மந்திரியின் பயிர்க்கடன் திட்டம் போன்றவை வழங்குகின்றன. வேளாண் பொருள்களைப் பதப்படுத்துவதை மேம்படுத்தும் பிரதம மந்திரி கிசான் சம்பதா யோஜனா (Pradhan Mantri Kisan Sampada Yojana - PMKSY) திட்டம் விவசாயப் பொருள்களைப் பதப்படுத்துவதற்கும், மதிப்புக்கூட்டுவதற்குமான முன்னோடித்திட்டம் ஆகும். இது தவிர விவசாய உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதற்கான ஆதரவையும், e-Nam மூலம் விவசாயி தனது உற்பத்திப் பொருளுக்கு சரியான விலையைப் பெறுவதையும் அரசாங்கம் உறுதி

செய்திருக்கிறது. பொருத்தமான கொள்கைத் திட்டங்களின் மூலமும், செயல்படுத்தக்கூடிய திட்டங்களின் மூலமும், பொருத்தமான நிதி ஒதுக்கீடுகள் மூலமும் விவசாயிகளின் நலன்களை அரசாங்கம் உறுதிப்படுத்துகிறது.

பிரதம மந்திரியின் அனைவருக்கும் வீடு திட்டம் 2022 வாக்கில் அனைவருக்கும் வீட்டு வசதியை அளித்து, நாடு சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைவதற்குள் அனைவருக்கும் உறையுள் அமைவதை உறுதிப்படுத்த இருக்கிறது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் தண்ணீர் இணைப்பு, மின்சார வசதி, கழிப்பறை வசதி ஆகியவற்றோடு கூடிய பக்கா வீடுகளைக் கிடைக்கச்செய்வது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

அணுகல் என்பது வளர்ச்சியின் இன்னொரு முக்கியமான பகுதியாகும். குண்டும் குழியும் இல்லாத சிறப்பான சாலைகளைத் தான் ஒவ்வொரு நாள் காலையிலும் வீடுகளைவிட்டு வேலைக்காக வெளியே செல்லும் ஒவ்வொருவரும் விரும்புகின்றனர். சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலை அமைச்சகம் மார்ச் 2019க்குள் 300 திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முன் வந்துள்ளது. 127 தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களும், 153 அமைச்சகத்திட்டங்களும் ஜூன் 2019க்குள் முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதோடு கூட, இன்னும் 100 திட்டங்கள் டிசம்பர் 2018க்குள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. 2018-19 ஆம் ஆண்டிற்கான சாலை அமைக்கும் இலக்கு 5058 கிலோமீட்டரிலிருந்து 6000 கிலோமீட்டராக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் சிறு நகரங்களை தேசியத்தின் முதன்மை நீரோட்டத்தோடு இணைக்கும் உதான் விமானச் சேவையை அரசு தொடங்கியுள்ளது.

அடுத்த 1000 நாள்களில் அனைத்து கிராமங்களுக்கும் மின் இணைப்பு வழங்கப்படும் என்று ஆகஸ்ட் 15, 2015 அன்று தில்லி செங்கோட்டையிலிருந்து பிரதமர் அறிவித்தார். ஆற்றல் அமைச்சகம் இதனை சாதிக்க முயற்சிக்கிறது.

தீன்தயாள் உபாத்யாயா கிராம ஜோதி யோஜனா (DDUGJY) திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்தத்திட்டம் அறிவிக்கப்பட்ட 1000 நாள்களுக்குள் 18ஆயிரத்திற்கும் அதிகமான கிராமங்கள் மின் இணைப்பைப் பெற்றன. இளைஞர்களின் சக்தியைப் பயன்படுத்திகொள்வது என்பது வளர்ச்சியின் பாதையில் இருக்கும் எந்த தேசத்திற்கும் முக்கியமானதாகும். அரசாங்கம் இளைஞர்களை நேரு யுவ கேந்திரா மூலமும், தேசிய சேவைத்திட்டம் (NSS) வாயிலாகவும் சமூக சேவையில் ஈடுபடுத்திவருகிறது. திறன் இந்தியா, தொழில் தொடங்கிடு இந்தியா, தேசிய இளந்தலைவர்கள் திட்டம், முத்ரா ஆகிய அனைத்தும் நமது நாட்டு இளைஞர்களின் பூரண வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டுள்ளன. தேசத்தின் வளர்ச்சிக்கான செயல்திட்டங்கள் பலவகைப்பட்டவை. இதில் ஒவ்வொரு கூறும் முக்கியமானது. இவை ஒன்றோடு ஒன்று இணைத்து செயல்படுத்தப்பட்டால்தான் ஒட்டுமொத்த வளர்ச்சி இலக்கை அடையமுடியும். அரசாங்கத்தின் அண்மைகால முன்முயற்சிகள் யாவும் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான இலக்கை சாதிப்பதற்கு முயன்று வருகின்றன.

**ஆசிரியர்**

# சிக்கனமான செலவில் வீட்டு வசதி
# குடியிருக்க ஒரு வீடு கிடைப்பதை உறுதிப்படுத்துதல்

- ஹர்தீப் எஸ்.பூரி

**அறிமுகம்:**

பதவியேற்ற ஒரு மாதத்திலேயே அதாவது ஜுலை 2014இல், பிரதம மந்திரி நாடாளுமன்றத்தின் கூட்டு அமர்வில் உரையாற்றிய போது, “சுதந்திரத்திற்குப் பிறகு 75 ஆண்டுகளை தேசம் பூர்த்தி செய்கின்ற நேரத்தில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் குடிநீர் இணைப்பு, கழிப்பறை வசதிகள், 24X7 நேரமும் மின்சார விநியோகம் ஆகியவை கொண்ட ஒரு பக்கா வீடு தரப்பட்டு இருக்கும்” என்றார்.

i. இந்தத் தொலைநோக்கு இலக்கை அடைவதற்காக பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்டத்தை (PMAY), அதாவது அனைவருக்கும் கட்டுப்படி ஆகக்கூடிய செலவில் வீடு வழங்குதல் இயக்கத்தை பிரதம மந்திரி தொடங்கி வைத்துள்ளார். இந்த இயக்கம் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது - பிரதம மந்திரி வீட்டு வசதித்திட்டம் (கிராமம்) [PMAY (Rural)] என்ற



பிரிவு ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் கீழும் பிரதம மந்திரி வீட்டு வசதித்திட்டம் (நகரம்) [PMAY (Urban)] என்ற பிரிவு நகர்ப்புற உறவுகள் அமைச்சகத்தின் கீழும் வருகின்றன. ஜுன் 2015இல் தொடங்கப்பட்ட பிரதம மந்திரி வீட்டு வசதித்திட்டம் (நகரம்) திட்டத்தின் இலக்கு என்பது 2022ஆம் ஆண்டுக்குள் நகரப் பகுதிகளில் சிக்கனமான செலவில் தோராயமாக 1.2 கோடி வீடுகள் கட்டுவதே ஆகும்.

ii. இந்த அரசின் நான்கு ஆண்டுகால ஆட்சியில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற உறவுகள் அமைச்சகம் 47.5 இலட்சம் வீடுகளைச் சிக்கனமான செலவில் கட்டுவதற்கு ஏற்கனவே அனுமதி அளித்திருக்கிறது. எட்டு இலட்சத்துக்கும் அதிகமான வீடுகள் முழுமையாகக் கட்டப்பட்டு சம்பந்தப்பட்ட பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 2004ஆம் ஆண்டுக்கும், 2014ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வெறும் 13.46 இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு அதில் 5.65 இலட்சம் வீடுகளில் மட்டுமே பயனாளிகள் குடியேறினர். ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக இந்த விவரம் தரப்படுகிறது. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் (JNNURM) தொடங்கப்பட்ட போது இதுதான் இந்தியாவின் மிகப் பெரிய நகர்ப்புற அபிவிருத்தித் திட்டமாகப் பார்க்கப்பட்டது. ஆனால் தற்போதைய இதற்கு முந்தைய ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் (JNNURM) 10 ஆண்டுகளோடு ஒப்பிட, இந்த அரசு 4 ஆண்டுகளில் நான்கு மடங்கு அளவில் வீடுகள் கட்டுவதற்கு அனுமதி அளித்துள்ளது.

**நகர்மயமாதலை வரவேற்றல்**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்

(நகரம்) [PMAY (U)] வெற்றியைப் புரிந்து கொள்ள இந்தியாவில் அதிலும் குறிப்பாக நகரமய மாதலில் ஏற்பட்டு வரும் தத்துவார்த்தமான மாற்றத்தைப் புரிந்து கொள்ளவேண்டியது மிக அவசியமானதாகும். நாட்டின் வரலாற்றில் முதன் முறையாக மத்திய அரசாங்கம் நகர்மயமாதல் என்ற கருத்தாக்கத்தை வரவேற்று அரவணைத்துள்ளது. சுதந்திரத்திற்குப் பிறகான வரலாற்றில் பெரும்பாலும் இந்தியநாடு நகர்மயமாக்குதலுக்குத் "தயங்குகின்ற" நாடாகவே முத்திரை குத்தப்பட்டிருந்தது. இந்தியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விவசாயம் இருக்கிறது என்ற உண்மைதான் இந்தத் தயக்கத்துக்கான காரணமாக இருக்கிறது. வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு என்ற இரண்டிலும் விவசாயம் முக்கியமானதாக இருக்கிறது. இந்திய உழைப்பாளர் எண்ணிக்கையில் விவசாயம் 40 சதவிகிதத்திற்கும் அதிகமான உழைப்பாளர்களை இன்று தனக்குள் கொண்டிருந்தாலும் கூட, இந்தியாவின் ஒட்டுமொத்த மதிப்புக்கூட்டுக்கான அதன் பங்களிப்பு 16.4 சதவிகிதம் எனக் குறைந்துள்ளது. இதற்கு எதிர்மாறாக, சேவைத்துறைகளின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. இது தற்போது 55.2 சதவிகிதமாக உள்ளது. அதன் இன்றியமையாத இயல்புத் தன்மையால் சேவைத்துறைகள் நகரப் பகுதிகளில்தான் செயல் படுகின்றன. இந்தியக் குடிமக்களின் அதிகரித்துவரும் ஆசைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் அவர்கள் சேவைத் துறையில் வேலை தேடுகின்றார்கள் என்பது இயல்பான ஒன்றாகவே தோன்றும். அதனால் அவர்கள் நகரப்பகுதிகளையே தேடுகின்றார்கள். 2030ஆம் ஆண்டுக்குள் சுமார் 600 மில்லியன் இந்தியர்கள் அல்லது இந்திய மக்கள் தொகையில் 40 சதவிகிதம் நபர்கள் இந்திய நகரங்களில் வசிப்பவர்களாக இருப்பார்கள்.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள இந்தக் குடிமையியல் வளர்ச்சியைச் சுட்டிக்காட்டி பிரதம மந்திரி நகரமயமாக்குதலை வரவேற்றுள்ளார். அனைவருக்குமான வாய்ப்பு, பாதுகாப்பு, தகவமைப்பு மற்றும் நிலைத்தன்மை உடையதாக "நகரங்கள் மற்றும் மனிதர் குடியிருக்கும் பகுதிகளை ஆக்குதல் என்பது நிலைத்த நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளில் 11ஆம் இலக்காக உள்ளது. இதன் உள்கூறுகள் நீடித்த வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals - SDG) அறிவிக்கப்படும். முன்னரே இந்தியா தனது வளர்ச்சிக்கான திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளில் சேர்த்துக் கொண்டுவிட்டது. 2030 வளர்ச்சிக்கான செயல்நிரல் திட்டத்தை ஐக்கியநாடுகள் சபை முறையாக 2015இல்தான் ஏற்றுக்கொண்டது. பிரதம மந்திரி வீட்டு வசதித்திட்டம் (நகரம்) அதற்கு முன்பே அறிவிக்கப்பட்டுவிட்டது ஒரு உதாரணம் ஆகும். இந்த இயக்கத்தை அரசு ஜுன் 2015இல் தொடங்கியது. ஆனால் இதை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற தனது ஆசையை அரசு ஜுலை 2014லேயே அறிவித்து இருந்தது. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள் தங்களது குறிக்கோள்களை 2030க்குள் அடைய வேண்டும் என்ற காலக்கெடு இருக்கும் போது, பிரதம மந்திரி வீட்டு வசதித்திட்டம் (நகரம்) ஒவ்வொரு இந்தியருக்கும் 2022க்குள் ஒரு வீடு என்பதை உறுதி செய்துள்ளது. அதாவது தேசத்தின் 75ஆவது சுதந்திர ஆண்டுக் கொண்டாட்டத்தின் போது இந்த இலக்கு எட்டப்பட்டுவிடும்.

பெருவாரியாக நகர அபிவிருத்தி தொடர்பான சிந்தனையில் ஏற்பட்ட தத்துவார்த்தமான மாற்றத்தின் தொடர்விளைவாக, கட்டுபடியாகக் கூடிய செலவிலான வீட்டுவசதி குறித்த சிந்தனையிலும் மாற்றத்தைத் தூண்டி விட்டுள்ளது. பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், ஒரு சிக்கன செலவிலான வீடு என்பது செங்கல் மற்றும் சிமெண்ட் பயன்படுத்தி கட்டப்படும் நான்கு சுவர்கள் என்பதைத் தாண்டிச் செல்வதாக உள்ளது பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம் வெறும் வீடுகளைக் கட்ட விரும்பவில்லை; மாறாக இல்லங்களை உருவாக்கித்தர முனைகிறது, பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின் படி இல்லம் என்பது கழிப்பறை, மின்சார இணைப்பு, குடிநீர்க் குழாய் இணைப்பு, வீடு வீடாகச் சென்று குப்பை சேகரிக்கும் வசதி ஆகியவற்றைப் பெற்றிருக்க வேண்டும். மிக முக்கியமாக பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின் இல்லம் அந்த வீட்டின் பெண்மணியின் பெயரில் அல்லது கூட்டாகப் பதிவு செய்யப்படும். இதன் விளைவாக குடும்பங்கள் இந்தத்திட்டதின் மூலம் தங்களது தலைக்கு

மேலாக ஒரு கூரையை மட்டும் பெற்றிருக்கவில்லை. மாறாக மரியாதையான, பாதுகாப்பான மற்றும் வளமான வாழ்க்கையை அவர்கள் முன்னெடுக்க உதவும் வகையிலான அனைத்து வசதிகளையும் சேர்த்தே பெறுகிறார்கள்.

### அரசின் பங்கேற்பை மறுவரையறை செய்தல்

ஒரு அரசின் முதன்மைப் பொறுப்பு என்பது சரக்குகள் மற்றும் சேவைகளை வழங்குவதில்தான் உள்ளது. தத்துவ விவாதங்கள் மூலமாக சரக்குகள் மற்றும் சேவைகளை விநியோகித்துவிட முடியாது. நடைமுறைப்படுத்துதல் என்ற அம்சம் வெற்றி பெறுவதற்கு தேவை. இதில் தொடர்ச்சியான மற்றும் நிலையான கண்காணிப்பும் மதிப்பீடும் அடங்கும்.

பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது நான்கு தூண்களின் வழியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவை குடிசைப்பகுதி மறுநிர்மாணம்; பங்குதாரருடன் சேர்ந்து சிக்கனச் செலவிலான வீட்டுவசதி ஏற்படுத்துதல் (ஏ.ஹெச்.பி); கடனோடு சேர்ந்த மானியத்திட்டம் (சி.எல்.எஸ்.எஸ்) மற்றும் பயனாளி முன்னெடுத்துச் செய்யும் கட்டுமானம் (பி.எல்.சி) ஆகியவையாகும். இந்தத் தூண்களின் வழியாக, இந்த இயக்கம் சிக்கனச் செலவில் வீடு கட்டும் திட்டத்துக்கான அனைத்து அம்சங்களையும் நிறைவு செய்கின்றது. மனிதர் வசிக்க இயலாத நிலைமைகள் இருக்கும் குடிசைப் பகுதிகளில் வசிப்பவர் முதல் தம்மால் திருப்பிக் கட்ட முடிந்த அளவில் வங்கி நிதி தேவைப்படுகின்ற, பொருளாதார ரீதியில் பின் தங்கியுள்ளவர்கள் மற்றும் மத்திய வருவாய் பிரிவினர் வரை; சிறிதளவு நிலம் உரிமையாக இருந்து தங்களுக்கான வீடு கட்ட கூடுதல் நிதி தேவைப்படுவோர் வரை அனைவருக்கும் இந்த இயக்கமானது உதவுவதாக உள்ளது. தேர்ந்தெடுப்பதற்கான நிறைய வாய்ப்புகளை பயனாளிக்குத் தருவதன் மூலம் பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம் (நகரம்) இயக்கம் இதற்கு முந்தைய மேலிருந்து கீழ் என்ற மாதிரிகளில் இருந்து குறிப்பிடத்தக்க அளவில் வித்தியாசப்பட்டிருக்கிறது. தனது சொந்தத் தேவைகளுக்கு ஏற்ப பயனாளி மிகப் பொருத்தமான முடிவை எடுக்க முடியும் என்று இந்த இயக்கம் நம்புகிறது.

2014ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பிறகு மக்களவையில் ஆற்றிய முதல் உரையில் கூட்டாட்சி முறையின் தேவையை பிரதம மந்திரி வலியுறுத்தினார். ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக மக்களுக்குச் சேவை ஆற்றியிருந்ததால், அவருக்கு புதுதில்லியில் இருந்துகொண்டு இந்தியாவை ஆள்வதில் உள்ள உள்ளார்ந்த கட்டுப்பாடுகள் குறித்த விழிப்புணர்வு இருந்தது. தேசியத் தலைநகரில் இருந்து கொண்டு கருத்தாக்க ரீதியில் உருவாக்கப் பட்டு நடைமுறைப்படுத்தப்படும் இயக்கங்கள் தடம் மாறி விடுகின்றன. ஏனெனில் மாநில அரசுகள் அவற்றை முன் வரிசைக்குக் கொண்டு வந்து நடைமுறைப்படுத்த முயல்வதில்லை. பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம் என்பது அரசின் பல முன்னோடித் திட்டங்களில் ஒன்றாகும். இது கூட்டாட்சி முறைமை என்ற மாதிரியில் உருவாக்கப்பட்டு செழுமைப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதற்கு முந்தைய வீட்டு வசதித் திட்டங்களில் மாநில அரசுகள் தங்களது செயல்திட்டங்களுக்காக மத்திய அரசிடம் அனுமதி வாங்கவேண்டிய தேவை இருந்தது. பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் மாநிலஅரசுகள் தங்களுக்குத் தாங்களாகவே இத்தகைய அனுமதிகளை வழங்கிக் கொள்ளலாம். சிறிய அளவில் பரிந்துரைகள் ஏதேனும் இருந்தால். அவை மத்திய அளவில் மேற் கொள்ளப்படும்.

முந்தைய செயல் சட்டகங்களில் இருந்து விலகி மாறுபட்டு இருப்பதால், இந்த இயக்கத்தில் மத்திய அரசு ஒரு ஊக்குநர் பங்கை மட்டுமே வகிக்கவேண்டும் என்று முடிவெடுத்துள்ளது. 2017-18ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் சிக்கனச் செலவில் வீட்டுவசதிக்கு உள்கட்டமைப்பு வசதி VII என்ற தகுதிநிலை தரப்பட்டுள்ளது. 2018-19ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டானது சிக்கனச் செலவிலான வீட்டுவசதி நிதியத்தை தேசிய வீட்டுவசதி வங்கியின் வசதி VIII கீழ் கொண்டு வந்து நிறுவனமயப்படுத்தியுள்ளது. இதன் மூலம் வீட்டு வசதிப்பிரிவில் நிதி கிடைப்பது அதிகரிக்கும். இத்தகைய நடவடிக்கைகளுடன் கூடுதலான நடவடிக்கையாக வருமான வரிச்சட்டம் பிரிவு 801பி சிக்கனச் செலவு வீட்டுவசதி செயல் திட்டங்களுக்கு 100 சதவிகித இலாபக் கழிவை இப்போது வழங்குகிறது. இது இந்த இயக்கத்தில் தனியார் பங்கேற்பை ஊக்கப்படுத்தும்.

அளவிலும் எண்ணிக்கையிலும் பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதித்திட்டம் போன்று

உள்ள எந்த ஒரு இயக்கமானாலும் அது தடங்கல் இல்லாமல் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த போதுமான நெறிமுறைகளைக் கொண்ட செயல் சட்டகங்கள் இருப்பது அவசியமானதாகும். அதிலும் பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம் என்ற இந்த இயக்கம் ரியல் எஸ்டேட் என்று செய்கிறது. அவர்களது வரையறைகளின்படி ஒரு வீடு வாங்க நினைக்கும் தனிநபர் ஊழல் நடைமுறைகளில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுகிறார். இதற்குப் பிறகும்கூட வாங்கப்பட்ட சொத்து அதன் உண்மையான உரிமையாளர் கைகளுக்குப் போய்ச் சேருமா என்பதற்கும் எந்த உத்திரவாதமும் இல்லை. இந்தக் கொடுமையான பாதுகாக்கப்படும். இந்த ஊழல் அமைப்புதான் இந்தியாவின் சட்ட செயல்வரைவை தந்திரமாக மீறுவதாகவும், குறைத்து மதிப்பிடுவதாகவும் இருந்து வந்துள்ளது. நொடித்துப் போதல் மற்றும் திவால் ஆதல் சட்டமானது உள்நோக்கத்துடன் கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்கள் தீர்மானத்திட்டத்தை முன்வைப்



பரவலாக வரையறுக்கப்படும் பிரிவின் கீழ் வருவதால் நெறிமுறைகளின் செயல் சட்டகத் தேவை மிகவும் அத்தியா வசியமாகிறது.

இந்தியாவில் வரலாற்று ரீதியில் ரியல் எஸ்டேட் பிரிவானது நேர்மையற்ற நடத்தை மட்டுமே மதிக்கப்படக்கூடிய, நியாயம் தண்டிக்கப்படும் குணாம்சங்கள் நிறைந்ததாக உள்ளது. அரசியல்வாதி - அதிகாரவர்க்கம் - கட்டுமானம் மேற்கொள்பவர் என்ற வலைப்பின்னலே விளை யாட்டின் விதிகளை நிர்ணயம் கலாச்சாரத்திற்கு ஒரு முடிவுகட்ட அரசாங்கம் ரியல் எஸ்டேட் (நெறிமுறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாட்டுத் தளர்வு) சட்டம் 2016 அல்லது RERA என்பதைக் கொண்டுவந்தது. 70 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக நம் நாட்டில் RERA என்ற சட்டம் ரியல் எஸ்டேட் பிரிவுக்கு நெறிமுறைகளை உருவாக்கியுள்ளது. நாடாளு மன்றத்தின் இந்தச் சட்டத்தின் பயனாக, வீடு வாங்குபவர்கள் கஷ்டப்பட்டு உழைத்துச் சேர்த்த சேமிப்பு, இனி ஊழல் அமைப்பின் கைகளுக்குப் போகாமல் பதைத் தடுக்கிறது. வீடு வாங்குபவரை பணம் கடன் கொடுத்தவர் பக்கம் இந்தச் சட்டமானது நிறுத்துகிறது. மேலும் இந்தப் பிரிவில் ஊழல் போர்வழிகளைக் களை எடுக்க ஊக்கப்படுத்துகிறது.

**முடிவுரை**

இந்தியா தனது நகரத் தேவைகளை நிறைவு செய்ய, 2030ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் 700 முதல் 900 மில்லியன் சதுர மீட்டர்களுக்கு குடியிருப்பு மற்றும் வர்த்தகக் கட்டடங்களை கட்டியாகவேண்டும்

என்று மதிப்பீட்டு அறிக்கைகள் பரிந்துரைக்கின்றன. இந்தப் புள்ளி விவரத்தைக் காட்சி




ரீதியாகப் புரிந்து கொள்ள "இந்தியா இப்போது முதல் 2030ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் ஒரு புதிய சிக்காகோ நகரத்தைக் கட்ட வேண்டும்" எனக் கூறலாம். அதாவது நகர வாழ்க்கைக்கான குடிமக்கள் தேவையை நிறைவு செய்ய வேண்டுமானால் இந்தச் செயல் கட்டாயமாக மேற்கொள்ளப்பட்டாக வேண்டும்.

இந்தப் பின்னணியில், நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட நகரமய மாக்குதலின் ஒட்டுமொத்த வரம்புக்கு உட்பட்டு பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின் வெற்றியானது பார்க்கப்பட வேண்டும். ஸ்வச் பாரத் அல்லது தூய்மை இந்தியா இயக்கமானது இன்று ஒரு ஜன் அந்தோலன் அல்லது சமூக இயக்கமாக பரிணமித்துள்ளது. திறந்த வெளியில் மலம் கழிக்கக் கூடாது என்ற அம்சத்துக்கு தூய்மை இந்தியா இயக்கம் முக்கியத்துவம் தருகிறது. இதனால் தேவைப்படும் எண்ணிக்கையில் கழிப்பறைகள் கட்டுவது மட்டுமின்றி நாட்டில் நடத்தை மாற்றத்தைக் கொண்டு வருவதும் முக்கியமானதாக உள்ளது. 57 இலட்சம் தனிநபர் கழிப்பறைகள் மற்றும் 3.38 இலட்சம் சமுதாயக் கழிப்பறைகள் கட்டுவது பூர்த்தியாகிவிட்டது. பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் கட்டப்படும் சிக்கனச் செலவிலான வீடுகள் ஒவ்வொன்றிலும் 47.5 இலட்சம் கழிப்பறைகள் கட்டப்படும். மேலும் அம்ருத் எனப்படும் புதுப்பித்தல் மற்றும் நகர உருமாற்றத்திற்கான அடல் இயக்கத்தின் கீழ் 500 நகரங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இவற்றில் அனைவருக்கும் குடிநீர் விநியோக வசதியும் கழிவுநீர் நீக்கும் வசதியும் கிடைக்கும். இவை சிக்கனச் செலவில் கட்டப்படும் வீடுகளில் வசிப்போரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும். பொலிவுறு நகரங்கள் இயக்கத்தின கீழ் 99 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த இயக்கத்தில் குடிமக்களின் பங்கேற்புக்கு மிகப் பெரிய வாய்ப்புகள் உள்ளன. எனவே சிக்கனச் செலவில் கட்டப்படும் வீடுகளில் வசிப்போருக்கு தங்கள் நகரங்களின் மேம்பாடு குறித்து கருத்து சொல்வதற்கும் வாய்ப்பு உள்ளது.

நமது நகர மையங்களில் ஏற்பட்டு வரும் பேரளவு மடைமாற்றங்களை பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம் உருவகப்படுத்துகிறது. எடுக்கப் பட்டு வரும் முயற்சிகள் இந்திய நகரங்களை சிறப்பானவையாக மாற்றி வருகின்றன. "சிரமம் இல்லாமல் வாழ்தல்'' என்பதை இந்தியர்களுக்கு வழங்கவேண்டும் என்ற பிரதம மந்திரியின் வாக்களிப்பானது செம்மைப் படுத்தப்படுகிறது. இது சப்கா சாத், சப்கா விகாஸ் அல்லது அனைவருக்குமான மேம்பாடு என்பதில் வெளிப்படுகிறது. மேலும் இது இந்த அரசாங்கத்தின் பண்பாட்டு வெளிப்பாடாகவும் உள்ளது. பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்படும் சாதனையின் அளவு உலகின் எந்த ஒரு நாட்டின் அனுபவத் தோடும் ஒப்பிட முடியாததாக இருக்கும். இதன் விளைவாக, கட்டுப்படியாகும் செலவில் வீட்டு வசதி என்ற இந்திய மாதிரியின் வெற்றி, இனி உலகம் முழுவதும் எதிர்கால நகர அபிவிருத்தியை நிர்ணயிக்கும். கோட்பாடுஎன்ற நிலையிலும், நடைமுறையிலும் இந்திய மாதிரியின் வெற்றித் தாக்கத்தை ஏற்படுத்தும்.


- **ஹர்தீப் எஸ் பூரி**, இந்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற உறவுகள் அமைச்சகத்தின் இணையமைச்சராக (தனி அதிகாரம்) உள்ளார். ●

# ஆயிரம் நாள்களில் அனைத்து கிராமங்களுக்கும் மின்வசதி - ஒரு சாதனைப் பயணம்

- ஏ.கே.பல்லா

இன்றைய நிலையில் மின்சார வசதி நாட்டில் உள்ள அனைவருக்கும் அடிப்படைத் தேவையாகும். 21ஆம் நூற்றாண்டில் மின்சாரம் இல்லாமல் வாழ்க்கை நடத்தினால் எப்படி இருக்கும் என்பதை கற்பனை செய்துபாருங்கள். இந்தியாவில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் மின்சார வசதியை உறுதி செய்யவேண்டும் என்பதுதான் இந்திய அரசின் உன்னதமான இலட்சியமாக இருந்தது. இந்த இலட்சியத்தை எட்டுவதற்காக ஏராளமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2015ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதி இந்திய விடுதலை நாளையொட்டி, செங்கோட்டை கொத்தளத்திலிருந்து நாட்டு மக்களிடம் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவில் மின்சார வசதி இல்லாத 18,500 க்கும் கூடுதலான கிராமங்களுக்கு அடுத்த 1000 நாட்களில் மின்சார வசதி ஏற்படுத்தித் தரப்படும் என்று அறிவித்தார். அதைத் தொடர்ந்து குறிப்பிட்ட கால வரையறைக்குள் மின்சார வசதி இல்லாத அனைத்து கிராமங்களுக்கும் மின்வசதியை ஏற்படுத்தித்தரும் பணி மத்திய எரிசக்தி அமைச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இதுபோன்ற சவாலான பணிகளை மேற்கொள்ளும்போது, இதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் என்னென்ன என்பதை அளவீடு செய்வதுதான் முதல் பணியாகும். மேலாண்மையைப் பொறுத்தவரை, "நீங்கள் செய்யவிருக்கும் பணியை உங்களால் அளவிட முடியாவிட்டால், அதை உங்களால் மேலாண்மை செய்யமுடியாது" என்றொரு பொன்மொழி உண்டு. ஊரகப்பகுதிகளைப் பொறுத்தவரை அங்கீகரிக்கப்பட்ட நிர்வாகப் பகுதி என்பது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு கிராமமாகும். எனவே, அனைத்து, அதாவது 100% மக்கள்தொகை கிராமங்களுக்கும் மின்சார வசதி கிடைப்பதை உறுதி செய்வதுதான் இலக்காகத் தீர்மானிக்கப்பட்டது. அனைத்து கிராமங்களுக்கும் மின்வசதியை ஏற்படுத்தி தரும் பயணத்தின் முதல் அடியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கிராமங்களுக்கு மின்சார வசதியை ஏற்படுத்தித்தருவதைத் தவிர, தரமான, எல்லா நேரமும் கிடைக்கக்கூடிய, அதிலும் குறிப்பாக கிராமப்புறங்களுக்கு மின்விநியோகத்தை உறுதி செய்வதுதான் மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதற்கான முக்கியமான நடவடிக்கையாகும். எனவே, கிராமப்புறங்களுக்கு மின்சார விநியோகம் செய்வது தொடர்பான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு, தீனதயாள் உபாத்யாயா கிராம ஜோதி யோஜனா என்று பெயரிடப்பட்டு தொடங்கப்பட்டது.

### தீனதயாள் உபாத்யாயா கிராம ஜோதி யோஜனா

தீனதயாள் உபாத்யாயா கிராம ஜோதி திட்டத்தில் 1. மின்வசதி வழங்கப்படாத கிராமங்களுக்கு மின்சார இணைப்பு வழங்குதல். 2. ஏற்கெனவே மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ள கிராமங்களில் அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்குவதற்காக தீவிர மின்மயமாக்கல் பணிகளை மேற்கொள்ளுதல். 3.மின் விநியோகத்தின் தரத்தையும், நம்பகத்தன்மையையும் அதிகரிப்பதற்காக மின்விநியோகக் கட்டமைப்பை வலுப்படுத்தி மேம்படுத்துதல். 4. விவசாயிகளுக்கு உறுதி செய்யப்பட்ட மின்சாரம் வழங்குவதற்காக தனி வழியை ஏற்படுத்துதல். 5.மின்சாரம் கொண்டு செல்லும் கம்பிகள், மின்மாற்றிகள் மற்றும் நுகர்வோரின் வீடுகளில் மின்பயன்பாடு குறித்த தணிக்கை செய்வதற்காகவும், மின்சார இழப்பை குறைப்பதற்காகவும் மின்மீட்டர்களை பொருத்துதல் ஆகிய முக்கிய அம்சங்கள் அடங்கியுள்ளன. ஏற்கெனவே செயல்பாட்டில் இருந்த கிராமப்புற மின்மயமாக்கல் திட்டம் தீனதயாள் உபாத்யாயா கிராம ஜோதி திட்டத்தில் இணைக்கப்பட்டு,

அதன் ஒரு தனிப்பிரிவாக செயல்பட்டு வருகிறது.

தீனதயாள் உபாத்யாயா கிராம ஜோதி திட்டத்திற்கு ரூ.75,893 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், ரூ.63,027 கோடியை பட்ஜெட் ஆதரவாக மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட பல்வேறு மின்திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.

### 100% கிராமப்புற மின் மயமாக்கலுக்கான திட்டமிடல் மற்றும் உத்திகள்

மின்சார வசதி வழங்கப் படாத அனைத்து கிராமங்களையும் மின்மயமாக்கும் பணி தீனதயாள் உபாத்யாயா கிராம ஜோதி திட்டத்தின்கீழ் போர்க்கால அடிப்படையில் மேற் கொள்ளப்படும். 2015-16ஆம் ஆண்டிற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் கிராமப்புறங்களுக்கு மின் இணைப்பு வழங்கும் பணிகள் மிகவும் தாமதமாகவே நடைபெற்றன. 2012-13ஆம் ஆண்டில் 2,587 கிராமங்கள், 2013-14ஆம் ஆண்டில் 1,197 கிராமங்கள், 2014-15ஆம் ஆண்டில் 1,405 கிராமங்கள் என்ற அளவில்தான் மின்மயமாக்கல் பணிகள் மிகவும் மந்தமாக நடைபெற்றன. இதே வேகத்தில் மின்மயமாக்கல் பணிகள் நடைபெற்றிருந்தால், இந்தியாவில் உள்ள அனைத்து கிராமங் களுக்கும் மின்சார இணைப்பு வழங்க இன்னும் 10 ஆண்டுகள் ஆகக்கூடும். அனைத்து கிராமங் களுக்கும் விரைவாக மின்சார



சேவை வழங்கவேண்டும் என்பதால் தற்போதைய சூழல், மின்மயமாக்கலுக்குத் தேவையான வளங்களின் இருப்பு, மின் இணைப்பு வழங்கும் பணியை விரைவுபடுத்துவதற்கான மாற்று நடவடிக்கைகள், கண்காணிப்புக் கட்டமைப்பு ஆகியவை குறித்து புரிந்துகொள்வதற்காக இதில் சம்பந்தப்பட்ட அனைவருடனும் விரிவான கலந்தாலோசனைகள் நடத்தப்பட்டன. அதன் பயனாக, புதிய சிந்தனைகள், உத்தி, புதிய அணுகுமுறை ஆகியவை அதிக அளவில் கிடைத்தன. அவை குறித்த விவரங்கள் வருமாறு:

1. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புக் குறியீட்டின் அடிப்படையில் கிராமங்களை முறைப்படி அடையாளப்படுத்துதல்: 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்களில் அடிப்படையில், மின் இணைப்பு பெறாத கிராமங்களை அடையாளம் கண்டு, அவற்றின் பெயர், பூகோள இருப்பிடம், மக்கள்தொகை ஆகியவை குறித்த விவரங்களுடன் வழங்கும்படி மாநில அரசுகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. துல்லியமான திட்டமிடலுக் காகவே இவ்வாறு செய்யப் பட்டது. இதற்கு முன் மின் இணைப்பு வழங்குவது குறித்த பணிகளில் ஏற்பட்ட முன் னேற்றம் என்பது கிராமங்களின் எண்ணிக்கையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது.

2. தொலைதூர / எளிதில் அணுகமுடியாத கிராமங் களுக்கு மின்தொகுப்புடன் இணைக்கப்படாத சூரிய ஒளி மின்சக்தி:

மின்சார இணைப்பு வழங்கப்படாத கிராமங்களில் பெரும்பாலானவை தொலை தூரத்திலும், பனிபடர்ந்த மலைப்பகுதியில் அல்லது அடர்ந்த காடுகளிலும், இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் அமைந்துள்ளன என்பது கண்டறியப்பட்டது. இந்தப் பகுதிகளைச் சென்றடைதல், மின்சாரக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்குத் தேவையான தளவாடங்களை கொண்டு சென்று பொருத்துதல் ஆகியவை மிகப்பெரிய

சவால்களாக அமைந்திருந்தன. எனவே, மின்தொகுப்பில் இருந்து இந்த கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவது சாத்திய மற்றதாகவோ, அல்லது அதிக செலவு பிடிப்பதாகவே இருந்தால், அந்த கிராமங்களில் மட்டும் சூரிய ஒளித்தகட்டின் மூலம் தனியாக மின்சாரம் வழங்குவது என தீர்மானிக்கப் பட்டது. அதன் படி தீனதயாள் உபாத்யாயா கிராம ஜோதி திட்டத்தின் கீழ் சூரிய ஒளியைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரித்து வழங்குவதற்காக தனியாக திட்டங்கள் வழங்கப் பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டன.

3. தரப்படுத்தப்பட்ட ஏல ஆவணங்கள் உருவாக்கப்பட்டு மின்னணு ஏலம் மூலம் பணிகளை ஒதுக்குவதில் கவனம் செலுத்தப்பட்டது.

4. புதுமையான முறையில் நிதிஒதுக்கீடு: கிராமப் புறங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான பணிகள் விரைவுபடுத்தப்பட்ட நிலையில், அதற்கேற்றவாறு அதிக நிதி தேவைப்பட்டது. இதற்காக நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மட்டுமின்றி, வெளிச்சந்தையில் இருந்து மின் நிதிக் கழகம், ஊரக மின்மயமாக்கல் கழகம் ஆகியவற்றின் மூலம் நிதி திரட்ட மின்துறை அமைச் சகத்திற்கு மத்திய அரசு அனுமதி அளித்தது. இவ்வாறு செய்வதன் மூலம் விரைவான மின்மயமாக்கல் பணிகளுக்கு போதிய நிதி திரட்டமுடியும் என்ற நம்பிக்கையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. இதைப் பயன்படுத்தி கடந்த இரண்டு நிதி ஆண்டு களில் மட்டும் ரூ.9,000 கோடி நிதி கூடுதல் பட்ஜெட் ஆதாரமாகத் திரட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

5. பணிகளை மேற்கொள்வதில் மாநிலங்களிடம் நெகிழ்வான அணுகுமுறை:

   மிகவும் கடினமான பூகோள அமைப்பு, மக்கள்தொகை என பல்வேறு மாறுபட்ட சூழல்களை கிராமங்கள் கொண்டிருக்கும் நிலையில், அனைத்து மாநிலங் களிலும் ஒரே மாதிரியான அணுகுமுறையைக் கடை பிடிப்பது சாத்தியமல்ல என்பதை மத்திய அரசு உணர்ந்தது. அதனால், திட்டங்களைச் செயல்படுத்தி அரசிடம் ஒப்படைத்தல், ஓரளவு செயல்படுத்தி அரசிடம் ஒப்படைத்தல், துறை மூலம் செயல்படுத்துதல் என ஒவ்வொரு மாநிலத்திலும் நிலவும் சூழலுக்கு ஏற்ற வகையில் செயல்படுத்திக் கொள்ளலாம் என்று சலுகை வழங்கப்பட்டது.

6. மாநிலங்கள் / மின்விநியோக நிறுவனங்களுக்கு உதவுதல்:

   கிராமப்புறங்களுக்கு மின்சார இணைப்பு வழங்கும் விசயத்தில் மாநிலங்களுக்கும், மின்விநியோக நிறுவனங் களுக்கும் தேவையான அளவு உதவிகள் வழங்கப்பட்டன. இதற்கான பொறுப்பு வகிக்கும் முகமையின் அலுவலகங்கள் அனைத்து மாநிலங்களிலும் தொடங்கப்பட்டன. இந்தப் பணிகளை விரைந்து முடிப்பதற்கு வசதியாகவும், சம்பந்தப்பட்ட மாநில அரசு அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதற்காகவும், முகமையின் மூத்த அதிகாரிகள் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். மாநில மின் நிறுவனங்கள் / எரிசக்தித்துறை ஆகியவற்றை வலுப்படுத்துதற்கும், திறன் மேம்பாடு செய்வதற்கும் வசதியாக, வட்டார / மாவட்ட அளவில் கிராம வித்யூத் அதியந்த்தாஸ் எனப்படும் அதிகாரிகளை ஊரக மின்மயமாக்கல் கழகம் நியமித்தது. திட்டப் பணிகளைக் கண்காணித்தல், விரைவு படுத்துதல் ஆகிய நடவடிக்கை களில் இந்த அதிகாரிகள் உதவிகரமாக இருந்தனர். கிராம வித்யூத் அதியன்தாஸ் எனப்படுபவர்கள், உள்ளூர் பொறியியல் பட்டதாரிகள் ஆவர். இவர்கள் கள அளவிலான கண்காணிப்பில் மின்விநியோக நிறுவனங் களுக்கு பெருமளவில் உதவி செய்தனர்.

7. மைல்கல் அளவிலான கண்காணிப்பு: கிராமப் புறங்களில் மின்இணைப்பு வழங்குவதற்கான ஒட்டுமொத்த நடைமுறையும் 12 கட்டங்கள் / மைல் கற்களாக பிரிக்கப் பட்டன. ஒவ்வொரு கட்டத்திலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை அறியவும், கண்காணிக்கவும் காலவரையறை நிர்ணயிக்கப் பட்டது. பணிகளுக்கான ஒப்பந்தங்கள் வழங்குதல், சர்வே செய்தல், தேவையான

தளவாடங்களைக் கொள்முதல் செய்தல், கொள்முதல் செய்யப்பட்ட பொருள்கள், பணிடத்திற்கு வந்து சேர்தல். தளவாடங்களை நிறுவி செயல் பாட்டுக்குக் கொண்டுவருதல். மின்சாரம் வழங்குதல் ஆகிய ஒவ்வொன்றும் ஒவ்வொரு மைல்கற்களாக கருதப்பட்டன. மின்மயமாக்கல் பணிகள் குறித்த காலத்தில் முடிவடை வதையும், கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதையும் உறுதி செய்வதற்காக திட்ட மேலாண்மைக் கருவிகள் தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டன.

8. வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை: மின் மயமாக்கல் திட்ட நடை முறைகள், மின்சாரம் வழங்கும் பணிகளில் ஏற்படும் முன்னேற்றம் ஆகியவை குறித்த தகவல்கள் பொதுமக்களுக்கு குறித்த காலத்தில் சென்றடை வதை உறுதி செய்வதற்காக கார்வ் (GARV) எனப்படும் செயலி உருவாக்கப்பட்டது. இதுகுறித்த தகவல்கள் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப் பட்டதன் பயனாக மின் மயமாக்கல் நடைமுறையில் பொறுப்புடைமையை அதிகரிப் பதற்கு ஏற்ற சூழல் உருவானது.

9. குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு மற்றும் கண்காணிப்பு:

 குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு மற்றும் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள் வதற்காக மத்திய அரசு நிலையிலும், மாநில அரசு நிலையிலும், மின்விநியோக நிறுவனங்கள் அளவிலும் ஆய்வு மற்றும் கண்காணிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப் பட்டன. சிறப்பான ஒத்துழைப்பு மற்றும் திட்ட மேலாண்மையை மேம்படுத்துவதற்காக மண்டல அளவில் ஆய்வுக்கூட்டங்கள் அடிக்கடி நடத்தப்பட்டன. திட்டப்பணிகளின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் அம்சங்கள் குறித்து இந்தக் கூட்டங்களில் தெரிவிக்கப்படும். அவை வெகுவிரைவாகத் தீர்க்கப்பட்டு மின்மயமாக்கல் பணிகள் விரைவுபடுத்தப்படும்.

## முன்னேற்றம்

மேற்குறிப்பிடப்பட்ட உத்திகளின் அடிப்படையில் கிராமப் புறங்களுக்கு மின்சார இணைப்பு வழங்கும் திட்டத்தை மாநில அரசுகள் செயல்படுத்தத் தொடங்கின. அடுத்த ஆண்டிலேயே கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட திட்டமிடல் மற்றும் உத்திகளுக்குப் பயன் கிடைத்தது. 2015-16ஆம் ஆண்டில், அதற்கு முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது அதிக எண்ணிக் கையிலான கிராமங்கள் மின் மயமாக்கப்பட்டிருந்தன. அந்த ஆண்டில் 7,108 கிராமங்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. அதற்கு முந்தைய ஆண்டுகளில் இந்தப் பணி மிகவும் மந்தமாகவே நடைபெற்றது. 2012-13ஆம் ஆண்டில் 2,587 கிராமங்கள், 2013-14ஆம் ஆண்டில் 1,197 கிராமங்கள், 2014-15ஆம் ஆண்டில் 1,405 கிராமங்கள் என்ற அளவில்தான் மின்மயமாக்கல் பணிகள் மிகவும் மந்தமாகவே நடைபெற்றன.

கிராமப்புறங்களுக்கு மின் இணைப்பு வழங்குவதில் கால வாரியாக எட்டப்பட்ட முன்னேற்றம் குறித்த விவரங்கள் பின்வருமாறு:

| அறிவிப்பு வெளியானதற்குப் பிந்தைய நாட்கள் | மின்மயமாக் கப்பட்ட கிராமங்கள் |
|---|---|
| 200 | 6021 |
| 400 | 10,233 |
| 600 | 13,174 |
| 800 | 14,701 |
| 1000 | 18,452* |

- 1,271 கிராமங்கள் மனிதர்கள் வசிக்காத அல்லது கால்நடைகளுக்கான மேய்ச்சல் பகுதிகளாக கண்டறியப் பட்டுள்ளன.

## செயல்படுத்துவதில் ஏற்பட்ட சவால்கள் மற்றும் சமாளிப்பு நடவடிக்கைகள்:

மின்இணைப்பு வழங்கப் படாத கிராமங்களில் பெரும் பாலானவை தொலைதூரங்கள் மற்றும் எளிதில் அணுகமுடியாத கடினமான மலைப்பகுதிகள், அடர்ந்த வனப்பகுதிகள், இடதுசாரி பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் ஆகியவற்றில் அமைந்துள்ளன என்பதை இங்கு குறிப்பிடுவது மிகவும் முக்கிய மானதாகும். கிராமப்புற மின்மயமாக்கல் திட்டத்தில் மிக முக்கியமான அம்சம் என்ன வென்றால், இந்தியா விடுதலை அடைந்து இவ்வளவு நாட்களுக்குப் பிறகு ஏழை மக்களுக்கு மின்சாரம் வழங்குவதில் பெரும் தடையாக இருந்த இத்தகைய சவால்களை சமாளித்து எட்டப்பட்ட முன் னேற்றமாகும். மின்மயமாக்கல் பணிகளில் முன்னேற்றம் ஏற்பட

ஏற்பட, சவால்களின் அளவும் அதிகரித்து வந்தது. மின்மய மாக்கல் பணியில் சம்பந்தப்பட்ட பெரிய அளவிலான சவால்களின் விவரம் வருமாறு:

- எளிதில் அணுகமுடியாத, மின்தொகுப்புடன் இணைக்க முடியாத கிராமங்கள்: 2762 கிராமங்கள்
- கடினமான மலைப்பகுதிகள்: 245 கிராமங்கள் (ஜம்மு காஷ்மீர் 54, அருணாச்சலப் பிரதேசம் 182, மேகாலயா 9).
- மின்மயமாக்கலுக்குத் தேவை யான பொருள்களை தலைச் சுமையாக ஒன்று முதல் பத்து நாட்களுக்கு சுமந்து செல்ல வேண்டியிருந்த கிராமங்கள் 102 (அருணாச்சலப் பிரதேசம் 90, மணிப்பூர் 12).
- ஹெலிகாப்டர்கள் மூலம் கட்டுமானப்பொருள்கள் கொண்டு செல்லப்பட்ட கிராமங்கள்: 51 கிராமங்கள் (ஜம்முகாஷ்மீர் 35, அருணாச்சலப்பிரதேசம் 16).



- இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள்: 7,614 கிராமங்கள் (பீகார் 1044, ஜார்க்கண்ட் 2,478, சத்தீஷ்கர் 1051, மத்தியப்பிரதேசம் 14, ஒடிசா 3,027).
- வனத்துறை அனுமதி பெற வேண்டியிருந்த கிராமங்கள்: 415 (ஜார்க்கண்ட் 155, உத்தரகாண்ட் 23, ஒடிசா 45, அசாம் 32, மத்தியப்பிரதேசம் 160).
- தொடர்வண்டித்துறை அனுமதி தரவேண்டியிருந்த கிராமங்கள்: 38 (பீகார் 37, அசாம் - 1).

தொலைதூர மற்றும் எளிதில் அணுகமுடியாத கிராமங் களில் மின்மயமாக்கல் பணிகளை மேற்கொள்வதற்காக எதிர்கொண்ட சவால்கள் மிக அதிகம்.

கிராமப்புறங்களுக்கு மின் இணைப்பு வழங்கும் பணிகள் எவ்வளவு விறுவிறுப்பாக நடை பெற்று முடிந்தன என்பதற்கு ஒரு உதாரணத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மின்மயமாக்கல் பணிகளின் போது 9 மாநிலங்கள் தங்களது எல்லையில் உள்ள 1,227 மக்கள் தொகைக் கணக் கெடுப்பு கிராமங்களில் மின்சார வசதி வழங்கப்படவில்லை என்று தெரிவித்தன. இதையடுத்து, அந்தக் கிராமங்களுக்கும் உடனுடக்குடன் மின் இணைப்பு வழங்கப்பட்டது. அவற்றில் 1,393 கிராமங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. மீதமுள்ள 34 கிராமங்களில் மக்கள் வசிக்க வில்லை என்று கண்டறியப் பட்டுள்ளது.

இவ்வாறாக, மாநில அரசுகள், மின்விநியோக நிறுவனங்கள், ஒப்பந்ததாரர்கள், வணிகர்கள், கருவி தயாரிப் பாளர்கள், சம்பந்தப்பட்ட மாநிலங் களைச் சேர்ந்த மக்கள் ஆகியோரின் ஆதரவுடன் கிராமங் களுக்கு மின் இணைப்பு வழங்கும் பணியை இந்தியப் பிரதமரால் நிர்ணயிக்கப்பட்ட 1000 நாட்கள் அவகாசத்திற்குள்ளாகவே நாங்கள் சாதித்துக் காட்டியிருக் கிறோம்.

எனினும், மக்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கான மின்துறை அமைச்சகத்தின் பணிகள் இன்னும் தொடர்கின்றன. நாட்டில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் மின்சார இணைப்பு வழங்குவதுதான் எங்களின் அடுத்த இலக்கு ஆகும். இதற்காக பிரதம மந்திரியின் அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் (Pradhan Mantri Sahaj Bijli Har Ghar Yojana' Saubhagya) என்ற பெயரிலான புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டு மார்ச் 31ம் தேதிக்குள் இந்தியாவின் கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் மின்சார இணைப்பு வழங்குவதுதான் இந்தத்திட்டத்தின் நோக்கமாகும்.

- **ஏ.கே.பல்லா**, செயலாளர், எரிசக்தித்துறை, இந்திய அரசு.

# புதுப்பிக்கத்தக்க ஆற்றல் விரிவாக்கத் திட்டம் 2022

- மனோஜ்குமார் உபாத்யாய்,
- அபினவ் திரிவேதி

நாட்டின் ஆற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்ய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறை ஒரு முக்கியமான வழிகாட்டியாக அமைந்துள்ளது. 2022க்குள் 175GW அளவுக்கு புதுப்பிக்கப் படக்கூடிய ஆற்றலை உற்பத்தி செய்யவேண்டும் என்ற இலக்கை அடைவதற்காக கடந்த சில ஆண்டுகளாக இந்திய ஆற்றல் உற்பத்தித்துறையில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முயற்சிகள் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

எதிர்காலத்தில் சுத்தமான ஆற்றல்களை உற்பத்தி செய்வதற்காக உலகளவிலேயே மிகப்பெரிய கொள்திறன் மேம்பாட்டை, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையில் இந்திய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம் எடுத்துள்ளது. மே 2014லிருந்து மார்ச் 2018வரையிலான காலகட்டத்தில், 37.33GW அளவுக்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித்திறன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களின் மொத்த உற்பத்தித்திறன் 69GW அளவாகும். 2022ஆம் ஆண்டுக்குள் 175GW புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உருவாக்கும் இலக்கை அடைய, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம் காற்று மற்றும் சூரிய வெப்ப புதிய ஆற்றல் மின்சார திட்டங்களையும், நிலம்சார் காற்றாலைத் திட்டங்களையும் உயிரி மற்றும் கழிவுப் பொருட்களிலிருந்து உருவாக்கப்படும் எரிசக்தியையும், பயோ கேஸ் திட்டங்களையும், சூரிய ஒளி பூங்காக்களையும் மிகப்பெரிய அளவிலான சூரிய ஒளி மின்சார உற்பத்தித் திட்டங்களையும் இவற்றால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை பொது மின் தொடர்போடு இணைக்கும் வழிகளையும், பொது மின்தொகுப்புடன் இணைக்கப்படக் கூடிய பயோகேஸ் உற்பத்தி நிலையங்களையும் உருவாக்கி உள்ளது.

இந்தத் திட்டங்களில் எல்லாம் மிகவும் முதன்மையானது, தேசிய சூரிய ஒளி மின்சாரத் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் மூலம் நிலக்கரி மற்றும் எரிவாயுசார்ந்த மின்சார உற்பத்திக்கு இணையான விலையில் சூரிய ஒளி மின்சார உற்பத்தி (1யூனிட் ரூ.2.44) மற்றும் காற்றாலை மின்சார உற்பத்தி (1யூனிட் ரூ.2.64) என்ற அளவில் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு வெளிப் படையான ஏலத்தின் மூலம் நிறைவு பெற்றுள்ளது. இந்தத் திட்டம் மூலம் சமீபத்தில் சூரிய சக்தி மின்சாரத்தின் உற்பத்தி விலை குறைந்து வருவதை கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம்.

| வ. எண் | காலம் | திறன் அளவு | குறைந்தபட்ச விலை(ரூ.) 1கிலோ.வாட்க்கு | திட்டம் | மாநிலம் |
|---|---|---|---|---|---|
| 1. | பிப்ரவரி 2017 | 750 MW | 3.30 | மாநில அரசுத் திட்டம் | மத்திய பிரதேசம் (REWA சோலார் பார்க்) |
| 2. | மே 2017 | 250 MW | 2.62 | VGF திட்டம் | ராஜஸ்தான் (Bhadla IV சோலார் பார்க்) |
| 3. | மே 2017 | 500 MW | 2.44 | VGF திட்டம் | ராஜஸ்தான் (Bhadla III சோலார் பார்க்) |
| 4. | ஆகஸ்டு 2017 | 500 MW | 2.65 | மாநில அரசுத் திட்டம் | குஜராத் (சோலார் அல்லாத பார்க்) |

ஆதாரம் : புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம்

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியை ஊக்குவிக்க உற்பத்தி சார்ந்த ஊக்கங்களாக மூலதனம் மற்றும் வட்டிக்கான மானியங்கள், தொழில் துவங்கத் தேவைப்படும் பற்றாக்குறை நிதி, சலுகை வட்டியில் நிதிஉதவி, நிதிசார் ஊக்குவிப்புகள், ஆகிய நிதி உதவிகளை மத்திய அரசு செய்கிறது. இது அல்லாமல், புது மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம், மின்சாரச் சட்டம் மற்றும் கட்டண விகிதக் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியையும் அதனால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தையும் வாங்குவதற்கான ஒப்பந்தங்களைச் செயல்படுத்தவும், உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தைப் பசுமை முறையில் மின் விநியோக அமைப்புக்கு கொண்டுவரவும், மின்சாரத்தை வழங்கும் இந்த நிறுவனங்களை உருவாக்கவும், இப்படி உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை மின் விநியோக அமைப்புக்கு செலுத்தி அதிலிருந்து பெறப்படும் மின்சாரத்தைக் கழித்து, மீதமுள்ளதைக் கணக்கிடும் கருவிகளை நிறுவுவது, இந்தத் திட்டங்களுக்கான நிதியை தொடர்புடைய மற்ற நாடுகளிலிருந்தும், உலகச் சந்தையிலிருந்தும், பசுமைப் பருவநிலை நிதியத்திடமிருந்து பெறுவது ஆகியவற்றை செயல்படுத்துகிறது.

**புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகத்தின் பெரும் முயற்சிகள்**

**சூரிய மின் உற்பத்தி** :

- சூரியசக்திப் பூங்காக்கள், மிகப் பெரிய சூரியசக்தி உற்பத்தித் திட்டங்களின் திறன் அளவு 20GW லிருந்து 40GW ஆக உயர்வு.
- குறிப்பிட்ட அளவு கட்டிடங்களின் கூரையில் சூரிய மின்சார அமைப்புகளைப் பொறுத்துவதற்கான சட்டங்கள், நெறிமுறைகள் திருத்தப் பட்டுள்ளன.
- வங்கிகளிடமிருந்து வீடு கட்ட கடன் வாங்குபவர்களுக்கும் இது பொருந்தும்.
- பொலிவுறு நகரங்கள் அமைப்புத் திட்டத்தின்கீழ் கட்டிடக்கூரைகளில் சூரியசக்தி மின்சார உற்பத்தி சாதனங்கள் அமைத்தல் மற்றும் உபயோகத்தில் குறைந்தபட்சம் 10 சதவிகிதம் சூரிய ஒளி மின்சாரம் தயாரிப்பு கட்டாயம்.



- சூரிய ஒளி மின்சாரத் திட்டங்களை அமைக்கத் தேவையான, நிதி திரட்ட வரியில்லா பங்குகள் வெளியீடு.
- சூரியஒளி மின்சாரத்தை வாங்க விலை சார்ந்த ஏல நடவடிக்கை.
- வீடுகள், நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறைகளில் கூரையில் சூரிய ஒளி மின்சார சாதனங்களை அமைக்க 30 சதவிகித மானியம். சிறப்புத்துறைகளில் இந்த மானியம் 70 சதவிகிதம் வரை அனுமதிக்கப்படும்.
- சூரிய மித்ரா திட்டத்தின்கீழ் இந்த செயல்பாட்டிற்குத் தேவையான தகுதிபெற்ற தொழில்நுட்பப் பணியாளர்களை உருவாக்க திட்டம் துவங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, 11,000 பேருக்குமேல் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



**காற்றாலை மின்சாரம்**

- காற்றாலை மின்சார உற்பத்தியில் சீனா, அமெரிக்கா மற்றும் ஜெர்மனியை அடுத்து உலகளவில் இந்தியா 4வது இடத்தில் உள்ளது.
- காற்றாலை ஆற்றலுக்கான தேசிய கழகம், நம் நாட்டின் காற்றாலை மின்சார உற்பத்தி மொத்தத்திறன் 100 மீட்டர்

உயரத்தில் அமைக்கப்படும் காற்றாலைகளிலிருந்த 302GW என்று கணக்கிட்டுள்ளது.

- இந்தியாவுக்கு மிக நீண்ட கடற்கரைப் பகுதி உள்ளதால் அதை ஒட்டி கடல் பகுதியில் காற்றாலை மின்சாரம் தயாரிக்க நல்ல வாய்ப்பு உள்ளது. கடல்சார் காற்றாலை மின் உற்பத்தி பற்றிய தேசிய கொள்கைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- தமிழ்நாட்டின் காற்றாலை மின் உற்பத்தி அனுபவத்தின் அடிப்படையில் தேசிய காற்றாலை ஆற்றல் கழகம் குஜராத் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற் கொண்டுள்ளது.
- காற்றாலை கோபுரங்கள் பொதுவாக 100 மீட்டருக்கு மேல் உள்ளதால் 120 மீட்டர் உயரத்தில் காற்றுத் தன்மை எப்படி உள்ளது என்ற வரை படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**உயிரி மின்சக்தி**

- உயிரி மற்றும் கழிவுப் பொருட்களிலிருந்து எரிவாயு மற்றும் மின்சாரம் தயாரிப் பதற்கு மத்திய அரசின் நிதி உதவி அளிக்கப்படுகிறது.
- பொதுத் தொகுப்புக்கு அல்லாமல் தாங்களே பயன் படுத்திக் கொள்ளும் உயிரி எரிவாயு மின் உற்பத்தித் திட்டங்கள் ஊக்குவிக்கப் படுகின்றன.
- தேசிய உயிரி எரிவாயு மற்றும் இயற்கை உர மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏற்ற அளவில் கிராமப்பகுதிகளிலும் புறநகர்ப் பகுதிகளிலும் உயிரி எரிவாயு மின்சார உற்பத்தியை அமைக்க உதவி வழங்கப்படுகிறது.

**புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஊக்குவிக்க கொள்முதல் கொள்கையில் மாற்றங்கள்**

- மார்ச் 2022க்குள் புதுப்பிக் கத்தக்க மின்சக்தி உற்பத்தி கொள்முதல் உறுதி ஏற்பு 8 சதவிகிதத்திற்கு உயர்த்தப் பட்டுள்ளது.
- புதிதாக துவக்கப்படும் நிலக்கரி மற்றும் லிக்னைட் சார்ந்த அனல்மின் உற்பத்தி நிலை யங்கள், புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியையும் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் அறிமுகம்.



- அனைத்து வகையான புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியையும் இணைத்து, புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை மக்கள் வாங்கும் அளவிற்கு உருவாக்கல்.
- சூரிய மற்றும் காற்றாலை மின் உற்பத்தியை ஒரு மாநிலத்திடமிருந்து இன்னொரு மாநிலத்திற்கு வழங்கும் போது, அதற்கான கட்டணங்கள் வசூலிக்கப்படமாட்டாது.
- புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தியை தொடர்ந்து ஊக்குவிக்க எரிசக்தி அமைச்சகம் 2016-17, 2017-18 மற்றும் 2018-19ஆம் ஆண்டுகளுக்கான வாங்கும் விலை அறிவிப்பு.




| தொலைநோக்கு அணுகுமுறை | 2016-17 | 2017-18 | 2018-19 |
|---|---|---|---|
| சூரிய எரிசக்தி அல்லாதவை | 8.75% | 9.50% | 10.25% |
| சூரிய எரிசக்தி | 2.75% | 4.75% | 6.75% |
| மொத்தம் | 11.50% | 14.25% | 17.00% |

**பசுமை எரிசக்திப் பாதை**

தமிழ்நாடு, ராஜஸ்தான், கர்நாடகா, ஆந்திரபிரதேசம், மகாராஷ்டிரா, குஜராத், ஹிமாச்சல பிரதேசம் மற்றும் மத்திய பிரதேச மாநிலங்களுக்கிடையே சுமார் 20,000 மொகாவாட் அளவிற்கு சூரிய மின்சக்தியை எடுத்துச் செல்ல மாநிலங்களுக் கிடையேயான மின்சார வழித்தடம் அமைக்கப்படுகிறது. இந்த வழித்தடத்திற்கும், மின்மாற்று அமைப்புகளுக்குமாக ரூ.10141 கோடியில் திட்டம் அமைக்கப் பட்டுள்ளது.

**பிற முயற்சிகள்**

- 2017 டிசம்பரில் பன்னாட்டு சூரிய ஒளி மின்சக்தி கூட்டமைப்பு சட்டபூர்வமாக அமைந்தபிறகு, இந்தியா பிரான்சுடன் இணைந்து, இந்தியாவை தலைமையிடமாகக் கொண்ட பன்னாட்டு புதுப்பிக்கத்தக்க மின்சக்தி அமைப்பை உருவாக்கியுள்ளது. இதில், 121 நாடுகள் இணைந்துள்ளன.
- சூரியசக்தி மின்சார ஜெனரேட்டர்கள், உயிரி மற்றும் கழிவு பொருள்கள்சார் மின் உற்பத்தி ஜெனரேட்டர்கள், காற்றாலைகள், குறு நீர் மின்சாரத் திட்டங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தியை வழங்கும் அமைப்புகளான தெரு விளக்கு அமைப்புகள் மற்றும் தொலைதூர கிராம மின் வழங்கு அமைப்புகள் ஆகியவற்றிற்கு ரூ.15,000 கோடி வரை வங்கிக்கடன் வழங்கப்படும். குடும்பங்களுக்கு கடன் அளவு 10,00,000 இலட்சம் ரூபாய் வரை இருக்கும்.
- புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி மற்றும் திட்டங்களுக்கு மின் சாரச் சட்டம் 2003க்கு உட்பட்டு, அந்நிய நேரடி முதலீடு 100 சதவிகிதம் உடனடி வழங்கு முறையில் வழங்கப்படும்.

---

- **மனோஜ்குமார் உபாத்யாய்,** உதவி ஆலோசகர், நிதி ஆயோக்,

Dr. **அபினவ் திரிவேதி,** இளம் செயல் அலுவலர், நிதி ஆயோக். இந்திய அரசின் நிதி ஆயோக்கில் ஆற்றல், பருவநிலை மாற்றம் மற்றும் வெளிநாடுகளுடன் தொடர்பு துறைகளில் பணியாற்றுகின்றனர்.

# இளைஞர்களும் சமூகத்தொடர்பும்

- அமரேந்திர குமார் துபே

தேசிய இளைஞர் கொள்கை 2014இன் படி இளைஞர் எனப் படுபவர் 15லிருந்து 29 வயதிற்கு உட்பட்டவர் என்று விளக்கப் பட்டுள்ளது. ஆனால், இளைஞர்கள் ஒரே மாதிரியானவர்கள் என்று கூறமுடியாது. அவர்கள் பலதரப் பட்டவர்களாகவே இருப்பார்கள். அதற்கு முக்கிய காரணம் சமுதாய சூழ்நிலைகள், அவர் களுடைய பண்பாட்டுப் பின்னணி, சமூகப்பொருளாதார நிலைமை, கல்வி, அவர்கள் வசிக்கும் பகுதி, அவர்களுடைய எண்ணங்கள், ஆசைகள் ஆகியவையாகும்.

இளைஞர்கள் என்று கூறும் போது, மூன்று வகையான தன்மைகளை அது விளக்குகிறது முதலாவதாக, அவர்களுடைய வயது வரம்பு. இரண்டாவதாக, கல்வி முடித்து வேலை தேடு பவர்களாக இருப்பவர்கள். மூன்றாவதாக, அவர்களின் வாழ்க் கையில் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய தனிவகையான ஒரு சமூக, பண்பாட்டு, உளவியல் மனநிலை கொண்டவர்களாக அவர்கள் இருப்பார்கள்.

ஒரு வயது வரம்பிற்குள் இருப்பதால் மட்டுமே ஒருவருக்கு சிறப்பு சேராது. இந்த வயதினர், பதின்ம வயதிலிருந்து வயது வந்தவர்களாகவும், கல்வி மற்றும் திறமை பெற்று வேலைக்கு செல்லும் நிலைமையிலும் இருப்பார்கள். இந்த வயதினர், தங்களுடைய எண்ணங்களையும், கனவுகளையும் நிவர்த்தி செய்ய வழிகளை ஆராய்ந்து கொண்டிருப் பவர்கள். அவர்கள், வேலை தேடுபவர்களாகவும், சமுதாய பொதுநலத்தொண்டில் ஈடுபடுபவர் களாகவும், சுயமான தொழில் செய்பவர்களாகவும் இருக்கலாம். தான் விரும்பும் துறையில் திறனும் கல்வியும் பெற்று அந்தத்துறையில் தன் வாழ்வாதாரத்தை அமைத்துக் கொள்ள விரும்பலாம். தன்னுடைய துறையில் கடுமையாக உழைத்து முன்னேற விரும்பலாம். இந்தத் தருணத்தில்தான் அவர்கள் சமுதாயப்பண்பாட்டு அம்சங்களும், உளவியல் காரணங்களும், அவர்களுடைய வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைகின்றன. அவர்களுடைய அனுபவங்கள் பரவலாகவும், ஏற்றத்தாழ்வுகள் கொண்டதாகவும் இருக்கலாம்.

### இந்தக்குழுவின் முக்கிய பகுதிகள்

இளைஞர்களின் இந்த நிலைமையைத்தான் இந்திய அரசு, தேசிய இளைஞர் கொள்கை 2014இல் ஏற்றுக்கொண்டுள்ளது. அந்தக்கொள்கையின் நோக்கங்களும், முன்னுரிமைப் பகுதிகளும் கீழ்க்கண்டவாறு விளக்கப் பட்டுள்ளன.

| நோக்கங்கள் | முன்னுரிமைப் பகுதிகள் |
|---|---|
| 1. இந்தியாவின் பொருளாதார மேம்பாட்டிற்கு நிலைத்து நின்று பயனளிக்கும் திறன்மிகு பணியாட்களை உருவாக்குதல். | கல்வி, வேலைவாய்ப்பு, திறன் மேம்பாடு, தொழில் முனைவு. |
| 2. எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் வண்ணம் வலுவான வளம்மிக்க சந்ததியினரை உருவாக்குதல். | உடல்நலம், நலம்மிகுந்த வாழ்வு முறை. விளையாட்டு. |
| 3. தேசிய உணர்வை போற்றும் சமுதாய பண்புகள் மற்றும் சமூக சேவையை உருவாக்குதல். | சமூகப்பண்புகளை வளர்த்தல். சமுதாய இணைப்பு. |
| 4. ஆளுமையின் அனைத்து மட்டங்களிலும் மக்கள் பங்கேற்பும், ஈடுபாடும். | அரசியல் மற்றும் ஆளுமையில் பங்கேற்பு. |
| 5. பாதிப்புக்குள்ளாகும் இளைஞர்களுக்கு ஆதரவு. பாதிக்கப்பட்ட விளிம்பு நிலையில் உள்ள இளைஞர்கள் அனைவருக்கும் சமத்துவ வாய்ப்புகள். | எல்லோருக்கும் வாய்ப்பு, சமூகநீதி. |

இளைஞர்களின் முழுமையான, முற்போக்கான வளர்ச்சிக்கு மேற்கூறப்பட்ட அனைத்து முன்னுரிமைப் பகுதிகளும் மிகவும் அவசியமாகும். அவற்றை செயல்படுத்தியாக வேண்டும். அவர்களுக்குத் தேவையான கல்வி, வேலைவாய்ப்பு, உடல்நலம், விளையாட்டுத் துறைகளைப் பற்றி அதிகம் எழுதப்பட்டுள்ளது. இன்னும் எழுதிக் கொண்டிருக்கிறோம். இந்தக் கட்டுரையில் இரண்டு முன்னுரிமைப் பகுதிகளைப் பற்றி கவனிப்போம்.


i. சமூகப்பண்புகளை வளர்த்தல்.

ii. சமுதாயப்பங்கேற்பு.

மேற்கண்ட அட்டவணையில் "தேசிய உணர்வைப் போற்றும் சமுதாயப் பண்புகள் மற்றும் சமூகசேவையை உருவாக்குதல்" என்ற தலைப்பில் இந்த இரண்டு முன்னுரிமைப் பகுதிகள் இருப்பதைக் காணலாம்.

**சமுதாயப்பண்புகளை வளர்த்தல்**

இளைஞர்கள் அனுபவம் மிக்க திறன்மிகு பணியாளர்களாக இருந்து அவர்களுடைய வாழ்க்கைத் துறையில் தலைவர்களாக வரத்தக்கவர்களாக உள்ளனர். இந்திய மக்கள் பண்பாடு, இனம், மொழி, சமுதாயம் மற்றும் மதரீதியில் பலதரப்பட்டவர்கள். இந்திய நாடு, பூகோள ரிதியிலும் பலதரப்பட்ட நிலைமைகளைக் கொண்டதாகும். மக்களும், அவர்கள் வாழும் பூகோள சவால்களை எதிர்கொண்டு தங்கள் வாழ்வு முறைகளை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல மாறுதல்களைக் கொண்ட மக்களிடையே பொது



வான நிலைமைகளும் உண்டு. இதற்கு ஒரு முக்கிய உதாரணமாக மகாபாரதத்தையும், இராமாயணத் தையும் கூறலாம். இந்த இரண்டு காப்பியங்களும் பல மொழிகளில் உருவாக்கப் பட்டிருந்தாலும் கதை அம்சம் ஒன்றுதான். இவைகளில் வரும் சிறு சிறு கதைகள் மட்டும் சற்று மாறு பட்டிருக்கும். சமீப காலங்களில் தகவல் தொழில்நுட்பப் பயன் பாடாகட்டும், இளைஞர்களின் பார்வையாக இருக்கட்டும் நாடெங்கிலும் அவை ஒரே மாதிரிதான் உள்ளன. நாடெங்கிலும் உள்ள இளைஞர்கள் வெவ்வேறு வகையினராக இருந் தாலும், அவர்கள் அனைவரும் மேம்பாடு, தொடர்பு, ஈடுபாடு, தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புகள் ஆகியவை பற்றி ஒரே வகையான கருத்துக்களைத் தான் வெளிப் படுத்துகிறார்கள். இதற்கு முக்கிய காரணம், இந்தியாவிற்கென்ற ஒரு தனி பண்பாடு உண்டு. அது, சமுதாயப்பண்பாக பல தலை முறைகளாக, பல நூற்றாண்டுகளாக வழி வழியாக வந்ததாகும். இந்த சமுதாயப் பண்பாடுகள்தான் இந்திய சமுதாயத்தை ஒருங்கிணைக்கும் அம்சமாகும். இது பொதுவாக எல்லோருக்கும், குறிப்பாக இளைஞர்களுக்கும் பொருந்தும்.

**சமுதாய இணைப்பு**

இரண்டாவது, முன்னுரிமைப் பகுதியாக இளைஞர்களின் சமுதாய இணைப்பை நாம் பார்த்தோம். ஒரு சமுதாயத்தின் சமூகப்பண்புகள், சமூகப் பொருளாதார நிலைகளிலிருந்து உருவாகிறது. இந்த சமூக ஈடுபாடு என்பது ஒரு சமுதாயத்தின் பல செயல்பாடுகளில் உருவாக்க முடியும் என்பதை தேசிய சேவை இயக்கம் மற்றும் நேரு இளைஞர் சேவை மையங்கள் ஆகியவை விளக்குகின்றன. சமூக சேவைகளுக்கு திரட்டப்படக்கூடிய ஒரு மிகப்பெரிய சக்தியாக இளைஞர்கள் கருதப்படுகிறார்கள்.

இளைஞர் நலத்துறையின் கீழ் இரண்டு முக்கிய அமைப்புகள் உள்ளன நேரு இளைஞர்நல அமைப்பு மற்றும் தேசிய சேவைத்திட்டம் ஆகியன. இவை மூலம் இளைஞர்கள் தாங்களாகவே முன்வந்து, சமுதாயப் பணிகளில் ஈடுபடுகின்றனர். இளைஞர்கள் தாங்களாகவே முன்வருவதை இது வெளிக்காட்டுகிறது. இப்படி

இளைஞர்கள் தானாகவே முன்வந்து, சமுதாயப்பணிகளில் வெற்றிகரமாக ஈடுவடுவது பல நிலைகளில் உறுதி செய்யப் பட்டுள்ளது. தேசிய சேவை அமைப்பு மற்றும் நேரு இளைஞர் நல மேம்பாட்டு அமைப்புகள் மூலமாக இவர்கள், பல புதிய துறைகளில் பணிகளை மேற் கொண்டுள்ளனர். இப்படி பணி செய்வதன் மூலம்தான் சமுதாயப் பண்புகளும், சமூக இணைப்புகளும் வெளிப் படுகின்றன.

**நேரு, இளைஞர் நல அமைப்பு**

1972ஆம் ஆண்டு துவக்கப் பட்ட நேரு இளைஞர் நல அமைப்பு உலகத்திலேயே மிகப்பெரிய ஒன்றாகும். இதில், 87,00,000 இளைஞர்கள் 1.29 இலட்சம் இளைஞர் குழுக்கள் மூலம் இணைந்துள்ளன. நேரு இளைஞர் அமைப்புகள் மூலம் 623 மாவட்டங்களில் இது செயல்படுகிறது. இதன் முக்கிய நோக்கம், இளைஞர்களுக்கு தலைமைஏற்றல் போன்ற சிறப்புப் பண்புகளை அளித்து, அவர்களை நாட்டு மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடுத்துவதாகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட இளைஞர் ஒருங்கிணைப்பாளரும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இரண்டு தேசிய இளைஞர் தன்னார்வலர்களும், இருப்பார்கள். நேரு இளைஞர் நலக்குழுவிற்கு, மாநில அளவில் 29 வட்டார அலுவலகங்களும், தேசிய அளவில் புது டெல்லியில் தலைமையகமும் உண்டு.

இந்த அமைப்பு மேற் கொள்ளும் சில நடவடிக்கைகள் இங்கே விளக்கப்பட்டுள்ளன :

**I. இளைஞர் தலைமைப்பண்பு மற்றும் சமுதாய மேம்பாடு சார்ந்த பயிற்சி**

இந்தத்திட்டத்தின் கீழ், இளைஞர்களுக்கு தலைமைப் பொறுப்பு ஏற்கும் திறன்கள், வழங்கப்பட்டு, அவர்கள் மற்றவர் களுக்கு சிறப்பான வாழ்க்கை அளிக்கவும், தேசிய மேம்பாட்டு பணிகளில் ஈடுபடவும் திறன்கள் வழங்கப்படுகின்றன. இது ஐந்து நாள் திட்டமாகும். 2017-18இல் இப்படி நடைபெற்ற 450க்கும் மேற்பட்ட பயிற்சிகளில் 19000க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஈடுபட்டனர்.

**II. இளைஞர்கள் மாநாடு :**

நேரு இளைஞர்கள் அமைப்பால் மேற்கொள்ளப்படும் இந்த ஆண்டுக்கூட்டத்தில், தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தவும், மற்றவர்க ளோடு தங்களுடைய அனுபவங் களைப் பகிர்ந்து கொள்ளவும், இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான செயல்களை தெளிவுபடுத்தவும் வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. 2017-18இல் 300க்கும் மேற்பட்ட இப்படிப்பட்ட செயல்பாட்டில் 2,06,000க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்றனர்.

**III. இளைஞர்களின் மாதிரி கிராம மேம்பாட்டுத்திட்டம் :**

ஒவ்வொரு மாவட்டத்திலும், இளைஞர்களால் இளைஞர் களுக்காக மேம்படுத்தப்படும் ஒரு மாதிரி கிராமம் உருவாக்கப் படுகிறது. இந்த கிராமத்தில், யாரும் வெட்டவெளியில் கழிக்காமல் இருப்பது, எல்லோருக்கும் தடுப்பூசிகள் போடுவது, எல்லாக் குழந்தை களையும் ஆரம்பப்பள்ளியில் சேர்ப்பது, சுத்தம், நோய்கள் வராமல் தடுக்கும் முயற்சிகள், அரசின் முதன்மைத் திட்டங்களைப் பிரபலபடுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும். இந்தத்திட்டம், ஆண்டு முழுவதும் செயல்படும். 31 டிசம்பர் 2017வரை 2017-18 ஆம் ஆண்டின் இந்தத்திட்டம், தேர்ந்தெடுக்கப்பட்டு 78 மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டது.

**IV. பழங்குடியின இளைஞர்கள் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் சென்று பார்வையிடும் திட்டம் :**

இந்தத்திட்டம், மத்திய உள்துறை அமைச்சகத்தின் நிதிஉதவியுடன், ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தப்படுகிறது. இந்தத்திட்டத்தின்கீழ் இடதுசாரி தீவிரவாதிகள் செயல்பாடுகள் உள்ள பகுதியிலுள்ள பழங்குடி மக்களைச் சேர்ந்த இளைஞர்கள் நாட்டின் பிற பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு நம் நாட்டின் பழம்பெரும் பண்பாடு, வளர்ச்சிப் பணிகள் போன்ற வற்றைக் காண்பித்து அவர்களுக்கு நாட்டின் பிற மக்களோடு இணைப்பு ஏற்படுத்தப்படுகிறது. 2017-18இல் இதைப்போன்ற 10 திட்டங்களில் 2000க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பயன்பெற்றனர்.

**V. ஒரு மாநிலத்தில் உள்ள இளைஞர்கள் மற்ற மாநிலங்களில் செயல்படும் உன்னத பாரத திட்டம் :**

சர்தார் வல்லபாய் பட்டேலின் 140வது பிறந்த ஆண்டை ஒட்டி 31 அக்டோபர்

2015இல் பிரதமர் ஒரே பாரதம், உன்னத பாரதம் என்ற திட்டத்ததை துவக்கினார். இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம், பலதரப்பட்ட இந்தியாவின் சிறப்புத்தன்மையைப் போற்றுவதும், காலம் காலமாக நீடித்துவரும் மக்களின் பாரம்பரிய நட்பை வளர்க்கவும் செயல்படுத்தப்படும் திட்டங்களாகும். எல்லா மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள மக்களை இணைத்து தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் திட்டங்கள் ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத்திட்டங்கள் மூலம், ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள பண்பாடு, பழக்கவழக்கங்கள், பாரம்பரியங்கள் பிற பகுதியினருக்கு விளக்கப்படுகின்றன. இந்தத் திட்டம், மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

2017-18இல் நேரு இளைஞர் அமைப்புகள் 15 இரட்டை மாநிலங்களில், அதாவது தெலுங்கானா, ஹரியானா, கேரளா, ஹிமாச்சலபிரதேசம், தமிழ்நாடு, ஜம்மு காஷ்மீர், ஒடிசா, மஹாராஷ்டிரா, ஜார்க்கண்ட், கோவா, கர்நாடகா, உத்தராகண்ட், மேகாலயா, உத்திரப்பிரதேசம், சிக்கிம், டெல்லி, மணிப்பூர், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற திட்டத்தின் கீழ் பரஸ்பர இளைஞர் பயணத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## VI. பிற நடவடிக்கைகள்

பிற அமைச்சகங்களோடு இணைந்து மரங்கள் நடுதல், இரத்ததான முகாம்களை நடத்துதல், இரத்ததானம் செய்வோரை ஊக்குவித்தல், குழந்தைகள், தாய்மார்கள், மற்றவர்களுக்கு தடுப்பூசிகளைப் போடுதல், உலக யோகா தினம் அனுசரித்தல் போன்ற நடவடிக்கைகளையும் நேரு இளைஞர் நல அமைப்புகள் மேற்கொள்கின்றன. சமீபத்தில் இவர்கள் மேற்கொண்ட முக்கிய பணி குடிநீர் வடிகால் அமைச்சகத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சுத்தமான பாரத, கோடைக்காலப் பணிகளாகும். இந்தத்திட்டத்தின் கீழ் சுத்தம் மற்றும் சுகாதாரம் சம்மந்தப்பட்ட தானே முன்வந்து மேற்கொள்ளும் தன்னார்வப் பணிகளில் 100 மணி நேரத்திற்கு மேல் பங்கேற்பு. இதைப்போலவே, நீர்வள அமைச்சகத்தின் உதவியோடு, நேரு இளைஞர் அமைப்புகள் கங்கையை சுத்தப்படுத்தும் திட்டப் பணிகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

## தேசிய சேவை திட்டம்

மாணவ இளைஞர்கள், தன்னார்வ சமுதாயத் தொண்டுகள் செய்வதன் மூலம் தங்கள் திறமைகளையும் நற்பண்புகளையும் வளர்த்துக்கொள்ளும் அடிப்படை நோக்கத்துடன் தேசிய சேவைத்திட்டம் 1969இல் துவக்கப்பட்டது. "சேவையின் மூலம் கல்வி" என்பதே தேசிய சேவைத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மகாத்மா காந்தியின் எண்ணங்களின் அடிப்படையில் உருவாக்கப் பட்டதே தேசிய சேவைத்திட்டமாகும். தேசிய சேவைத் திட்டத்தின் குறிக்கோள்; "நான் அல்ல நீங்கள் தான்" என்பதாகும். 1969இல் 37 பல்கலைக்கழகங்களில் 40,000 தன்னார்வலர்களைக் கொண்டு இந்தத்திட்டம் துவக்கப் பட்டது. தற்போது, 391 பல்கலைக் கழகங்கள், 16,278 மேல்நிலை வகுப்புகளில் உள்ள 36,60,000 மாணவர்கள் இதில் உள்ளனர்.

## அடிப்படை அமைப்பு மற்றும் திட்டங்கள்

தேசிய சேவைத் திட்டத்தின் படி ஒவ்வொரு கல்வி நிலையத்திலும் 100 மாணவர்களைக் கொண்ட ஒரு பகுதி இயங்கும். அதை வழி நடத்தும் ஆசிரியர் திட்ட அலுவலர் என்ற பெயரில் செயல்படுவார். ஒவ்வொரு பிரிவும் ஒரு கிராமத்தைத் தத்தெடுத்து அங்கு சேவைகள் செய்யும். இந்த அமைப்பில் உள்ள ஒவ்வொரு தன்னார்வ மாணவரும் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 120 மணி நேரங்கள் என்ற அடிப்படையில் 2 ஆண்டுகளுக்கு 240 மணி நேரங்களுக்கு குறைவில்லாமல் சேவை செய்வார். இது அல்லாமல், ஒவ்வொரு தன்னார்வலரும் இந்த அமைப்பு ஏற்று நடத்தும் சிறப்பு முகாம்களில் ஏழு நாட்கள் செயல்படுவார்.

## தேசிய சேவை அமைப்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

தேசிய சேவை அமைப்பில் அடிப்படை செயல்பாடு சமூக சேவையாகும். ஒவ்வொரு சமூகத்துக்கும் ஏற்றவாறு பணிகள் மேற்கொள்ளப்படும். தேசியசேவை அமைப்பு தன்னார்வலர்கள் மேற்கொள்ளும் சில பணிகளாவன: கல்வி, உடல்நலம், குடும்பநலம், சுகாதாரம், சுற்றுசூழல் பாதுகாப்பு, சமூகசேவைத் திட்டங்கள், பெண்களின் நிலைமையை

உயர்த்தும் திட்டங்கள், உற்பத்தி சார்ந்த திட்டங்கள், பேரிடர் காலங்களில் பாதுகாப்பு மற்றும் புனரமைப்புத் திட்டங்கள்



ஆகியனவாகும். இது அல்லாமல், தேசிய சேவை அமைப்பின் தன்னார்வலர்கள், குடியரசு தினக் கொண்டாட்ட முகாம்கள், சாகச நிகழ்வுசார் முகாம்கள், தேசிய ஒருங்கிணைப்பு முகாம்கள், வடகிழக்கு மாநில தேசிய சேவை அமைப்புக் கொண்டாட்டங்கள் மற்றும் தேசிய இளைஞர் கொண்டாட்டம் சார்ந்த மாநாடு களில் கலந்துகொள்வர்.

## தன்னார்வ ஈடுபாடுகள்

தன்னார்வ சமுதாய நிகழ்வுகள், வியப்பூட்டும் பலன்களைத் தரக்கூடியவை. அதனால் இளைஞர்கள் சமுதாயத் தையும் அதன் சுற்றியுள்ள பிரச்சினைகளையும், சாதகங் களையும் புரிந்து கொள்ள உதவுகிறது. இதனால், ஒரு நிலைமையில் உள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து, மற்ற நிலைமைகளோடு ஒப்பிட்டுப் பெறும் அனுபவம் அவர்களுக்குக் கிடைக்கிறது. நடைமுறைப் பிரச்சினைகளைப் புரிந்துகொண்ட இளைஞர்களுக்கு நிலைமையைப் பற்றிய பரவலான அனுபவம் கிடைக்கிறது. இதனால், அவர் தெளிவாகவும், நியாய மாகவும் நடந்து கொள்ளமுடியும். தான் பார்க்கும் ஒரு நிலைமை, மற்றொரு நிலைமைக்கு நேர் எதிராக இருப்பதையும் அவரால் உணரமுடியும். இதனால், மற்றவர்களுடைய எண்ணங் களையும் அவரால் புரிந்து கொள்ளமுடியும். இது மட்டு மல்லாமல், பதின்ம வயதினர் அந்த நிலைமையைத் தாண்டும் போது ஏற்படும் மாற்றங்களை அவர்கள் எளிதாகப் புரிந்து கொண்டு செயல்படுவார்கள். நேரு இளைஞர் அமைப்பு மற்றும் தேசிய சேவை அமைப்பு தன்னார்வலர்கள் மேற்கொள்ளும் பின்வரும் சில செயல்பாடுகளிலிருந்து இதை நாம் புரிந்து கொள்ளலாம்.

(i) **கிரிவிகாஸ் திட்டம்** : கல்வி மற்றும் எழுத்தறிவினால் பழங்குடி மக்கள் தேசிய நீரோட்டத்தில் எளிதாகக் கலந்து வளம் பெற முடியும் என்பதை உணர்ந்து நேரு இளைஞர் அமைப்பு கிரிவிகாஸ் திட்டத்தை பரிக்ஷார்த்த முறையில் கேரளாவில் பாலக்காடு மாவட்ட நிர்வாக ஆதரவோடு துவக்கியது. அங்கு, 1.5 ஏக்கர் நிலத்தில், கல்வி மற்றும் நிர்வாக அலுவலகங்கள், பெண்களுக்கும், ஆண்களுக்குமான தங்கும் விடுதிகள் கொண்ட கிரிவிகாஸ் கட்டமைப்பு பாலக்காட்டின் மலம்புழா கிராமத்தில் அமைக்கப் பட்டது. இதற்கு கேரள மாநில பழங்குடி மக்கள் மேம்பாட்டுத்துறை ஆதரவு அளித்தது.

இந்தத்திட்டத்தில், மாணவர்களுக்கு சுமுகமாக கல்வி கற்கும் சூழ்நிலையும், கல்வி மற்றும் பிற செயல் பாட்டிற்கான வசதிகளும் உருவாக்கப்பட்டு 10ஆம் வகுப்பு, பிளஸ்டு வகுப்பில் தோல்வி யடைந்த பழங்குடி மக்களுக்கு தேர்வில் மீண்டும் வெற்றிபெற 10 மாதம் தங்கிப்படிக்கும் கல்வி அளிக்கப்படுகிறது. இங்கு, பழங்குடி மக்களிடையே உள்ள தாழ்வு மனப்பான்மை நீக்கப்பட்டு சுகாதாரம், கட்டுப்பாடு, கடின உழைப்பு ஆகியவை கற்றுக் கொடுக்கப்பட்டு சிறந்த மக்களாக உருவாக்கப்படுகிறார்கள்.

முறையான பத்தாம் வகுப்புப் பாடத்திட்டங்கள் மட்டு மல்லாமல், அவர்களுக்கு ஆங்கிலம், கணினிசார் கல்வி, யோகா, விளையாட்டு மற்றும் கலைகள் சார்ந்த கல்விகள் அளிக்கப்படுகின்றன. அவர்களுக்கு சுகாதாரம் மற்றும் சமூகப் பிரச்சினைகள் சார்ந்த விழிப்புணர்வு அளிக்கப்பட்டு சமுதாய சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், அரசியல் தலைவர்கள், அலுவலர்கள், ஆகியோருடன் கலந்துரையாடும் வாய்ப்புகளும் அளிக்கப் படுகின்றன. இந்த கிரிவிகாஸ் திட்டத்தால், ஆண், பெண்,

பழங்குடி மாணவர்கள் பத்தாம் வகுப்பு தேர்வில் சிறப்பாக 88 சதவிகிதம் பேர் வெற்றி பெற்றுள்ளனர்.

**(ii) போதைப்பொருள்கள் மற்றும் மதுவுக்கு எதிரான நேரு இளைஞர் அமைப்பின் செயல்திட்டங்கள் :**

போதைப் பொருள்கள் மதுபழக்கங்களால் ஏற்படும் விளைவுகளைத் தடுக்க விழிப்புணர்வு இயக்கம் ஒன்றை ஆண்டு முழுக்க நேரு இளைஞர் அமைப்பு, சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் நிதி உதவியோடு மேற்கொண்டது. இந்தத்திட்டம், பஞ்சாப் மாநிலத்தில் 10 மாவட்டங்களில், 75 ஊராட்சி ஒன்றியங்களில் 3000 கிராமங்களிலும், மணிப்பூரில் 7 மாவட்டங்களில், 25 ஊராட்சி ஒன்றியங்களில், 750 கிராமங்களிலும் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத்திட்டம், பதின்ம வயதினருக்கும், இளைஞர் களுக்கும், போதைப் பொருட்கள் மற்றும் மதுவால் பாதிக்கப்படக் கூடிய உயர்பாதிப்பு மக்களுக்கும், அவர்கள் குடும்பத்தினருக்கும் சமுதாய உறுப்பினர்களுக்குமாக மேற்கொள்ளப்பட்டது. இவர்க ளோடு சம்மந்தப்பட்ட சங்கங்கள், மகளிர் அமைப்புகள், கிராமப்பஞ் சாயத்து, உள்ளூர் அரசியல் மற்றும் ஆன்மீகத்தலைவர்கள், கிராமத்திலுள்ள முக்கியஸ்தர்கள், அங்கு சேவைகளை வழங்குவோர், ஆகியோர் இந்த இயக்கத்தில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்தத்திட்டத்தின் முக்கிய நோக்கம், பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு போதை பொருள்கள் மற்றும் மதுவால் விளையும் தீங்குகள் பற்றி விழிப்புணர்வு அளிக்கப்பட்டு அந்தப் பழக்கத்தில் இருப்பவர்களுக்கு அவற்றை விட்டு வெளியே வர சிகிச்சைகளும் அளிக்கப்படுகின்றன.

இந்தத்திட்டத்தின் மூலமாக, நேரடித்தொடர்பு மற்றும் முன்னோடிக் கல்வித் திட்ட அமைப்பைச் சேர்ந்த 37500 கிராம இளைஞர்கள் 3,75,000 இளைஞர்களுக்கு விழ்ப்புணர்வை ஏற்படுத்தி 62654 பேர் போதைப் பொருள்கள், மதுப்பழக்கத்தால் பாதிக்கப் பட்டிருப்பதைக் கண்டுபிடித்தனர். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க கிராமமக்கள் அனைவரையும் திரட்டி அவர்களுக்கு தகவல் மற்றும் கல்வி அளித்து விழிப் புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**(iii) நேரு இளைஞர் அமைப்பின் நமாமி கங்கை அமைப்புத்திட்டம்**

கங்கை நதி மாசுபடுவதைத் தடுத்து, அதற்குப் புத்துயிர் ஊட்ட நேரு இளைஞர் அமைப்பு சுத்தமான கங்கை தேசிய இயக்கத்தோடு ஜூன் 8 2015இல் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டு "நமாமி கங்கைத்திட்டத்தில் இளைஞர்களின் ஈடுபாடு" என்ற திட்டத்தைச் செயல்படுத்தியது.

இந்தத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆர்வமிக்க உள்ளூர் இளைஞர்களைத் திரட்டி பயிற்சி அளித்து கங்கை நதி மாசுபடுவது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த அனைத்து தரப்பு மக்களுக்கும் அரசாங்கம் செயல்படுத்தும் திட்டங்கள் பற்றிய தகவல், விழிப்புணர்வு ஆகியவை அளிக்கப்படுகின்றன. தற்போது இந்தத்திட்டம், உத்தராகண்ட், உத்திரபிரதேசம், பிஹார், மேற்கு வங்கம் சார்ந்த 29 கங்கைக் கரையோர மாவட்டங்களைச் சேர்ந்த 2336 கிராமங்களை உள்ளடக்கிய 1203 கிராமப்பஞ் சாயத்துக்களில் செயல்படுத்தப் படுகிறது. கங்கைக்கரையோரத்தில் உள்ள கிராமங்களில் 2426 இளைஞர் குழுக்கள் அமைக்கப் பட்டு 13000 மேற்பட்ட கங்கைத் தூதுவர்கள் இந்தத்திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**iv. நீர்த்தரம் சார்ந்த பிரச்சினைகள் கரிம் சிட்டி காலேஜ் குழு (தேசிய சேவை அமைப்பு):**

ஜார்கண்டின் ஜாம்ஷெட்பூரில் உள்ள கரிம் நகர கல்லூரி தேசிய சேவை அமைப்புத் தன்னார்வலர்கள், அவர்கள் சேவை செய்யும் கிராமங்களில் குடிப்பதற்கும், மற்ற தேவை களுக்கும் பயன்படும் நீர் ஆதாரங்களிலிருந்து நீரை எடுத்து சோதனை செய்யும் முயற்சியை மேற்கொண்டனர். இந்த ஆய்வுகள், கல்லூரியின் வேதியியல் ஆய்வுக்கூடத்தில் மேற்கொள்ளப்பட்டன. அதன் அறிக்கை, மாவட்ட நிர்வாகத்துக்கு அளிக்கப்பட்டது. மாவட்ட நிர்வாகம், மேற்கொண்டு இந்த நீர்வளத்தை சோதனை செய்து அங்கு மாசு அடைவதைக் குறைத்து கிராம மக்களுக்குப் பாதுகாப்பான நீரை வழங்கியது.


**v. அழகப்ப செட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில் நுட்பக்கல்லூரி, காரைக்குடி, தமிழ்நாடு (தேசிய சேவை அமைப்பு)**

இந்தக் கல்லூரியின் தேசிய சேவை அமைப்புக் குழு

பழவங்குடி கிராமத்தில் உள்ள அனைத்து நீர் ஆதாரங்களையும், அவைகளில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளையும் ஆய்வு செய்து நீர் ஆதாரங்களை இணைக்கும் வாய்ப்பை பரிசீலித்தது. கட்டிடப்பொறியியல் துறையின் உதவியோடு பழவங் குடி கிராமத்தின் நிலஅமைப்பை வரைந்தது. உள்ளூர் மக்களின் உதவியோடு நீர்வளங்களை ஆழப்படுத்தும் பணிகளையும் குப்பைகளையும், ஆக்கிரமிப்பு களையும் அகற்றும் பணிகளையும் மேற்கொண்டது. இதனால் நல்ல பயன் ஏற்பட்டு, மழைக்காலங்களில் குளங்கள் நிரம்பின. இப்போது அனைத்து நீர் ஆதாரங்களும் சமமாக்கப்பட்டு நீரோட்டம் நிலைத்துள்ளது. இதனால், மழை நீர் சேகரிக்கப்பட்டு கிராமத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப் பட்டுள்ளன. (தினமணி பத்திரிகையின் மதுரை பதிப்பில் வெளியிடப்பட்டுள்ளது.)

**vi. சித்தி மேம்பாட்டுத் திட்டம் (தேசிய சேவை அமைப்பு):**

சித்தி இஸ்லாமிய சமூகம், அகமதாபாத் நகரின் சித்தி குடிசைப்பகுதியில் வாழும் மக்களாவர். சரசாப்பூரிலுள்ள கலை வணிகக்கல்லூரியின் தேசிய சேவை அமைப்பு இந்த சித்தி குடிசைப்பகுதியை ஏற்றுக்கொண்டது. அந்தப்பகுதி, குப்பை மேடாக பல வருடங்களாக இருந்ததால் அங்கு வாழ்வது மிகவும் கடினமாக இருந்தது. சரசாப்பூர் கல்லூரி தேசிய சேவை தன்னார்வல மாணவர்கள் அங்குள்ள குப்பைக் கூளங்களை நீக்கி, அந்தப்பகுதியை சுத்தமாக வைத்துக்கொள்ளும் இயக்கத்தைத் தொடங்கினர். இவர்கள் நான்கு வருடங்களாக தொடர்ந்து மேற்கொண்ட முயற்சியால் அந்தப்பகுதி, குப்பை அற்ற பகுதியாக மாறியது. இதனால், அங்கு வாழும் 300க்கும் மேற்பட்ட மக்களும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள 2000 மாணவர்களும் பயன் பெற்றனர். தேசிய சேவை அமைப்பு தன்னார்வல மாணவர்கள், இந்தக்



குடிசைப்பகுதி மக்களின் வீடுகளை சுத்தப்படுத்தி வண்ண மயமாக்கினர், கழிவறைகளை சுத்தப்படுத்தி உபயோகப் படுத்தும்படி சீர்செய்தனர். இது அல்லாமல், இந்த மக்களின் “சித்தி தாமல்” என்ற நாட்டியத்தை ஊக்குவித்தனர், மக்கள் வாழும் குடிசையிலேயே 200க்கும் மேற் பட்ட சித்தி பெண் குழந்தைகளுக்கு வேடிக்கையாக கற்கும் முறையில் கணிணி கல்வி வழங்கினர். இதனால், சித்தி பெண் குழந்தை களும் மகளிரும் விளையாட்டு பண்பாட்டு செயல்கள் மூலம் கல்வி கற்றனர்.

**vii. எல்.இ.டி பல்புகள் வழங்கல் (தேசிய சேவை அமைப்பு) :**

கேரளாவின் 14 மாவட்டங்களில் தேசிய சேவை அமைப்புக் குழுக்கள், தொழில்வழி, உயர் நிலைக்கல்வி, இயக்குநரகத்தோடு இணைந்து இரண்டு நாள் கோடைக்கால முகாம்களை 308 இடங்களில் நடத்தினர். அவற்றின் மூலம் எல்இடி பல்புகள் உற்பத்தி செய்தல், வீடுகளில் பயன்படுத்தப் பட்டுப் பழுதான எல்இடி பல்புகளை சேகரித்து பழுதுநீக்குதல், சமூக, பொருளாதார ரிதியாக விளிம்பு நிலையில் இருக்கும் மக்களுக்கு எல்இடி பல்புகளை வழங்குதல், கிராமமக்களுக்கு மின்சாரப் பயன்பாட்டில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது பற்றிய விழிப்புணர்வு ஆகியவற்றை மேற்கொண்டனர். கேரளா எரிசக்தி மேலாண்மை மையம், இந்த மாணவர்களுக்கு நான்கு மணிநேரம் பயிற்சி அளித்து எல்இடி பல்புகள் உற்பத்தி மற்றும் பழுது நீக்கும் பயிற்சி அளித்தார்கள். இந்த முகாம்களில் 15400 தேசிய சேவை அமைப்பு தன்னார்வலர்களும் 308 திட்ட அதிகாரிகளும் பங்கு பெற்றனர்.

---

**- அமரேந்திர குமார் துபே,** செயலாளர், மத்திய இளைஞர் நலம், விளையாட்டுத்துறை

# விவசாயிகள் நலன் : பொறுப்பான முன்னுரிமை

- ஜக்தீப் சக்சேனா

கடுமையாக உழைக்கும் கோடிக்கணக்கான விவசாயிகளே இந்தியப் பொருளாதாரத்தின் ஆதாரம். இருந்தபோதிலும் அவர்களுடைய நலன் பல காலமாக அதிகமாக கவனிக்கப் படாமலேயே உள்ளது. ஆனால், தற்போதுள்ள பொறுப்பான மத்திய அரசு, 2014இல் இந்த முக்கியமான சமுதாயப் பொருளாதார நிலைமையை முன்னிறுத்தியது. அதன்பிறகு, அரசு மேற்கொண்டுள்ள விவசாயிகள் நலம் சார்ந்த திட்டங்களினால் கிராமப் புறமக்களுக்கு அதிகாரமளிக்கப் பட்டு அதனால் உயர்ந்த வருமானமும், வேலை வாய்ப்பும் வளங்களும் மிகுந்துவருகின்றன. இது அல்லாமல், 2022ஆம் ஆண்டு, இந்தியா தன்னுடைய 75ஆம் வருட சுதந்திரத்தைக் கொண்டாடும்போது, விவசாயி களின் வருமானம் இரட்டிப் பாகியிருக்க வேண்டும் என்று பிரதமர் அறைகூவல் விடுத்துள்ளார். இதன் அடிப்படையில், விவசாயம் மற்றும் விவசாயிகள் நலன் அமைச்சகம், ஒரு ஏழு அம்சத் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது. இது, விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கும் முக்கிய நிலைகளை உள்ளடக்கி யுள்ளது. அவைகளாவன: சரியான இடுபொருள் செலவுக்கு ஏற்ற வகையில் குறிப்பிட்ட அளவு நிலத்திலிருந்து உற்பத்தியைப் பெருக்குதல்; அறுவடைக்குப்பின் மதிப்புக்கூட்டுதலும், இழப்பு களைக் குறைத்தலும்; விவசாயப் பொருள்கள் விற்பனையில் சீர்திருத்தங்களை ஏற்படுத்தி இழப்புக்கு எதிரான காப்பு வசதி; விவசாயம் சார்ந்த பிற உபதொழில்களான பழங்கள், காய்கறிகள் உற்பத்தி செய்தல், கால்நடைகள் பராமரித்தல், மீன்கள் வளர்த்தல், தேனீ வளர்த்தல், கோழிப்பண்ணை மற்றும் இதர விவசாயத்தொழில்கள் ஆகியவற்றை மேற்கொள்ளுதல் ஆகியனவாகும்.


### விற்பனைக்கான உத்திகள்

2018-19 மத்திய பட்ஜெட்டில், அரசு ஒரு மிகப்பெரிய நடவடிக்கையை மேற்கொண்டு, 23 முக்கிய ரபி மற்றும் கரிஃப் பருவ காலப்பயிர்களின் அடிப்படை ஆதரவு விலை உற்பத்திச் செலவு அளவிலிருந்து ஒன்றரை மடங்குக்குக் குறையாமல் இருக்கும் என்று அறிவித்திருப் பதாகும். ஆனாலும்கூட, விவசாயப் பொருள்களின் விலைகள் குறையும்போது, குறிப்பிட்ட குறைந்தபட்ச ஆதரவு விலையில் அரசு இந்தப் பொருள்களைக் கொள்முதல் செய்ய முன்வரவேண்டும். இதைக் கருத்தில் கொண்டு, இதைப் போன்ற விவசாயப் பொருள்கள் விலைகுறையும் சமயங்களில் விவசாயிகளின் நலன்களை கருத்தில் கொண்டு மத்திய, மாநில அரசுகள் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வண்ணம் கொள்கைகளை வகுக்க நிதிஆயோக் பணிக்கப் பட்டிருக்கிறது. இது அல்லாமல் உற்பத்தி மிகுந்த காலங்களில், கூடுதல் பொருட்களை வாங்கும் பொறுப்பை அரசு மேற் கொண்டுள்ளது. மத்தியப் பிரதேச அரசு அறிவித்துள்ள ஒரு திட்டத்தின்படி எட்டு விவசாயப் பொருள்களுக்குத் தரமான விலை கிடைக்காத நிலையில், அரசு ஆதரவுத்திட்டம் செயல்படுகிறது. இந்தத்திட்டம், மற்ற மாநிலங் களிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் உள்ளது. இது அல்லாமல், அரசு மேற் கொண்டுள்ள பிற கொள்கைகள் மூலம், விவசாயப் பொருள்களின் நுகர்வோர் தேவை மற்றும் விலைகள் ஆகியவற்றை முன்னமே கண்டறிதல், வலைதளம்சார் எதிர்கால பரிமாற்றங்கள், சேமிப்புக் கிடங்குகள் நவீனமயமாக்கல், ஏற்றுமதி, இறக்குமதி பற்றி தக்க சமயத்தில் முடிவெடுத்தல் சார்ந்த முக்கிய கொள்கை முடிவுகளை மேற்கொள்ள உள்ளது.

நம் விவசாயிகளில் 85 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட சிறு விவசாயிகள் விளிம்பு நிலையில் உள்ளவர்களாக இருப்பதால் அவர்கள் தேவைகள் போக, மீதத்தை விற்பனை செய்வது மிகவும் குறைவு. அதற்கு அவர்கள் செலவிடும் தொகையும் அதிகம். ஆகவே, 2015இல் அரசு, வலைதளம்சார் விற்பனை முறையான தேசிய விவசாயச் சந்தை (e-NAM) என்ற திட்டத்தை அறிவித்து, விவசாயிகள் தங்கள் பொருள்களை விற்பனை செய்வதில் உள்ள பலவகையான செயல்முறைகளைக் குறைத் துள்ளது. இதுவரை, 16 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களில் உள்ள 585 விவசாயப்பொருள்கள், விற்பனைக் குழுக்கள் மூலமும், 90 விவசாயப்பொருள்கள் வலை தளங்கள் மூலமும் வியாபாரம் செய்யப்படுகின்றன. பல இந்திய மொழிகளில் செயல்படும் இந்த கணினிசார் வியாபார முறையில், 99 இலட்சம் விவசாயிகளும் ஒரு இலட்சம் வியாபாரிகளும்

ஈடுபட்டுள்ளனர். ஆனாலும், விவசாயப் பொருள்;கள் விற்பனைக்கூடங்களில் பதிவு செய்யப்படாத விவசாயிகள் இந்த கணிணிசார் வியாபார முறையில் பங்கேற்க முடியவில்லை. சமீபத்தில், அரசு மேற்கொண்ட ஒரு முக்கிய முடிவின்படி, 22,000 கிராமப்புறச் சந்தைகள், கிராமப்புற விவசாயப் பொருள்கள் சந்தையாக மேம்படுத்தப் பட்டுள்ளன. இந்தச் சந்தைகள், வலைதளம் மூலம் e-NAM உடன் இணைக்கப்பட்டு தொலைதூரப் பகுதிகளில் இருக்கும் விவசாயிகள் வலைதளம்சார் வியாபார முறையில் பங்குபெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. விவசாயப் பொருள்கள் சந்தை சார்ந்த உள்கட்டமைப்பு நிதியம் ஒன்றைத் துவக்கி அரசு அதற்கு ரூ.2000 கோடி வழங்கியுள்ளது.

பிரதம மந்திரி விவசாயிகள் வருமான மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை அரசு துவக்கி அதன் மூலம், அடிப்படை விவசாயப் பொருள்களுக்கு மதிப்பூட்டி விற்பனை செய்து, விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்க திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. 2019 - 2020 வாக்கில் இந்தத்திட்டம், 20 இலட்சம் விவசாயிகளுக்குப் பயனளிப்ப தோடு, ஐந்து இலட்சம் பேருக்கு நேரடி - மறைமுக வேலை வாய்ப்புகளை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக, ரூ.31400 கோடி செலவிடப்படும். இந்தத் திட்டத்தின் மூலம் மிகப்பெரிய அளவிலான உணவுப்பொருள்கள் உற்பத்திப் பூங்காக்கள் அமைத்தல்; குளிரூட்டும் கிடங்குகளை நாடெங்கிலும் விஸ்தரித்தல், விவசாயப் பொருள்களுக்கு மதிப்பூட்டத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்; உணவுப் பொருள்களைப் பதனிட்டு, நெடுநாள்களுக்குப் பயன்படுத்தும் விதத்தில் பாதுகாக்கும் வசதிகளைப் பெருக்குதல்; உணவுப் பொருள்கள் சார்ந்த தொழில் நிறுவனக் குழுமங்களுக்



கான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் விவசாயத்திற்குத் தேவையான முன் மற்றும் பின் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் போன்ற திட்டங்களை செயல்படுத்த உள்ளது. உணவுப் பதனீட்டுத் துறைக்கு ஆதரவு அளிக்க அரசு பலவகையான வரிச் சலுகைகளை அளிக்கிறது. இந்தத் துறையில் 100 சதவிகித அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. உணவுப் பதனீட்டுத் தொழில் களுக்கு எளிய கடன் உதவி வழங்க, நாபார்டுக்கு ரூ.2000 கோடி சிறப்பு நிதி வழங்கப் பட்டுள்ளது. நாடெங்கிலும் ஆண்டு முழுவதும் மக்கள் பயன்படுத்தப்படும் தக்காளி, வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு போன்ற அடிப்படை காய்கறிகளை விவசாயிகள் பயிரிட்டுப் பயன்பெறலாம். ஆனால், பருவநிலைக்கு ஏற்ப விளைச்சல் பாதிக்கப்படுவதாலும், வெகுவிரைவில் அழுகி விடுவதாலும் இப்பயிர்களினால் விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் நஷ்டங்கள்தான் அதிகம். ஆகவே, இந்தத் துறையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்த அரசு ரூ.500 கோடி ஒதுக்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம், காய்கறி விவசாயிகள் மற்றும் நுகர்வோர் இரு சாராரும் பயன்பெற அரசு, விவசாய உள்கட்டமைப்பு வசதிகள், பதனீட்டு வசதிகள் மற்றும் திறமையான மேலாண்மையை வளர்க்க திட்டங்கள் வகுத்துள்ளது. இது அல்லாமல், விவசாயப் பொருள்கள் ஏற்றுமதியை ஊக்குவித்து, ஏற்றுமதி சார்ந்த சலுகைகளை வழங்கிவருகிறது.

### விவசாயிகளுக்கு நிதிவசதி

வங்கித்துறையில் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டிருந்தாலும், விவசாயிகள் நிதி நிறுவனங்களிட மிருந்து கடன் பெறுவதில் பல பிரச்சினைகள் உள்ளன. ஆகவே, விவசாயி களுக்கு நிதிநிறுவனங்கள் மூலம், வழங்கும் கடன் அளவு, 2014 - 15இல் ரூ.8.5 இலட்சம் கோடி இருந்தது. தற்போது இது ரூ.11இலட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. சமீப காலத்தில், விவசாயிகள் கடன் அட்டைத் திட்டம், மீன்கள் மற்றும் கால்நடை வளர்ப்பு விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டு, அவர்களுடைய அன்றாட நிதித்தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. கடன் பெறத் தகுதியுள்ள அனைத்து விவசாயிகளும் பிரச்சினைகள் இல்லாமல் தகுந்த நேரத்தில் கடன் வசதி பெற குறுகிய காலப் பயிர்கடன்களுக்கு, வட்டி மானியம், அடமானம் அல்லாத விவசாயக்கடன்கள், மற்றும்

விவசாயக்கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்காக பல விவசாயி களை ஒன்றாக இணைத்தல் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன. விவசாயிகளுக்குக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடன்கள் வழங்குவதை அதிகரிக்க தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்திற்கு அதிக நிதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது, பெரும்பாலான விவசாயிகள், பிறருடைய நிலங்களில் பயிர் செய்யும் குத்தகை விவசாயிகளாகவே உள்ளதால் அவர்கள், பயிர்க்கடன் பெற இயலுவதில்லை. ஆகவே இவர்கள், தனியாரிடமிருந்து கடன்களைப் பெற்று அதற்காக மிக அதிக அளவிலான வட்டி செலுத்தி பிற தொல்லைகளையும் அடைகிறார்கள். இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க, விவசாய நிலங்களை விவசாயத்திற்கு குத்தகைக்கு விடுவது சம்மந்தமான ஒரு புதிய மாதிரி சட்டத்தை உருவாக்க இந்திய அரசின் ஆணையின்படி நிபுணர்கள் குழுவை நிதிஆயோக் அமைத்துள்ளது. இதனால், 2016இல் மாதிரி விவசாய நில குத்தகைச் சட்டம் உருவாக்கப்பட்டு, குத்தகைக்குப் பயிர்செய்யும் விவசாயிகளுக்கு பயன்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஆகவே, தற்போது, விவசாயிகள் நிலங்களை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்வது நிலச்சொந்தக் காரர்களுக்கும், விவசாயிகளுக்கும் இடையே மேற்கொள்ளப்படும் சட்டப்பூர்வமான ஒப்பந்தமாகும். இதனால், குத்தகை விவசாயம் செய்பவர்கள், வங்கிக்கடன்கள், பயிர்க்காப்பீட்டுவசதி, பேரழிவுசார் உதவிகள் ஆகியவற்றை மத்திய மாநில அரசுகளிடமிருந்து பெறமுடியும்.

அரசு, விவசாயப் பொருள்கள் உற்பத்தி நிறுவனங் களின் கூட்டமைப்பையும், தன்னார்வ மகளிர் குழுக்களையும் ஊக்குவித்து அதில் பங்குபெறு வோரின் வருமானத்தைப் பெருக்க மேற்கொள்ளப்படும் செயல்களுக்கு ஊக்கம் அளித்துவருகிறது. இப்படி உருவாக்கப்பட்ட விவசாயப் பொருள்கள் உற்பத்தி நிறுவனங்களின் கூட்டமைப்பு, கூட்டுறவு முறையில் அமைக்கப் பட்டு அவர்களின் ஆண்டு வியாபாரம், ரூ.100 கோடிக்கும் குறைவாகவும் உள்ள நிலையில் அவர்களுக்கு வருமான வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

**பாதுகாப்பான வாழ்வுரிமையை நோக்கி**

பலதரப்பட்ட இயற்கைப் பேரிடர்களும், விவசாயிகளைப் பாதிக்கும் பூச்சிகளும், வியாதிகளும், மாறுபடும் பருவநிலைகளும், விவசாயிகளின் வருமானத்தையும், வாழ்வாதாரத்தையும் பாதிக்கின்றன. இப்படிப்பட்ட ஆபத்துக்களிலிருந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க ஒரு புதிய மதிப்பூட்டப்பட்ட பிரதம மந்திரி பயிர்காப்புத் திட்டம், மிகக் குறைந்த சந்தாவில் பலதரப்பட்ட பயிர்களுக்கு 2016இல் துவக்கப்பட்டது. இதில், ராபி பருவப்பயிர்களுக்கு விவசாயி களின் பங்கு, 1.5 சதவிகிதமாகவும், கரீஃப் பருவப்பயிர்களுக்கு 2 சதவிகிதமாகவும், ஆண்டு முழுவதும் பயிரிடப்படும் பழங்கள், காய்கறிகள் ஆகிய பயிர்களுக்கு அதிகபட்சமாக 5 சதவிகிதமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிர்க்காப்பு வசதியானது, பயிர்கள் அறுவடை செய்தபிறகு, 14 நாட்களுக்கும் அளிக்கப் படுகிறது. ஒவ்வொரு விவசாயப் பகுதிக்கும் வெள்ள பாதிப்பு நிலைமை, இந்தப் பயிர்காப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மின்னணு தொலைதூரத் தகவல் சேகரிப்புத் தொழில்நுட்ப மற்றும் தகவல் தொழில்நுட்ப முறைகளின் பயன்பாட்டால், விவசாயிகளுக்கு அளிக்கப்படும் இழப்பீட்டுத் தொகைகள் துல்லியமாகவும், வெளிப்படையாகவும் வேகமாகவும் வழங்கப்படுகின்றன. இப்படி விவசாயிகள் நலன் சார்ந்த திட்டங்கள் மூலம் பயிர்காப்பீட்டு வசதியை பல மடங்கு அதிகரிக்க 2018 -19இல் இந்த திட்டங்களுக்காக ரூ.13000 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது.

இது அல்லாமல், பல தரப்பட்ட சுற்றுச்சூழல் நிலைமை களில், விவசாயம் செய்யும் விவசாயிகள், பருவநிலை மாற்றம் சார்ந்த சவால்களை எதிர்கொண்டு தங்கள் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்க பயிற்சிகள் அளிக்கப் படுகின்றன. 623மாவட்டங்களில், மாவட்டம் சார்ந்த ஆபத்துக்கள் தடுப்புத்திட்டங்கள் உருவாக்கப் பட்டு, அதில், விவசாயிகள் அடிப்படைப் பங்குதாரர்களாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நாடெங்கிலும் உள்ள க்ரிஷி விக்ஞான் கேந்திரா அமைப்பு, களஅளவில் மாறுபட்டு வரும் பருவநிலைகளுக்கு ஏற்ப தகுந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயம் சார்ந்த பயிற்சிகளையும், மாதிரிப் பண்ணைகளையும் நடத்தி வருகிறார்கள். க்ரிஷி விக்ஞான் கேந்திரா அமைப்பு 151 கிராமங்களை பருவநிலை சார்ந்த மாதிரிப் பண்ணை கிராமங்களாக உருவாக்கியுள்ளது. இது அல்லாமல், நிலைத்து நிற்கும் விவசாய தேசிய இயக்கமும், பருவநிலைமாற்றங்கள் சார்ந்த தகவல்களை விவசாயிகளுக்கு நாடெங்கிலும் வழங்கிவருகிறது.

மிகவும் மோசமான பருவநிலை காலங்களில் கூட விவசாயிகளின் வாழ்வாதாரங் களைப் பாதுகாக்க விவசாயம், காய்கறித் தோட்டங்கள், கால்

நடைபராமரிப்பு, மீன்வளர்ப்பு ஆகிய அனைத்தும் சேர்ந்த ஒருங்கிணைந்த விவசாய நடவடிக்கைகள் பயன் அளிக்கும். இது அல்லாமல், பொதுவாகவே இந்தச் செயல்பாட்டின் மூலம் ஒரு துறையில் இழப்பு இருந்தாலும் மற்றொரு துறையில் வருமானம் இருப்பதால் ஆபத்துக்கள் குறைக்கப்பட்டு, நிலத்திலிருந்து பெறப்படும் வருமானம் சீராக்கப் படுகிறது. பலதரப்பட்ட விவசாய சுற்றுச்சூழல் நிலைமைகளில் உள்ள சிறு, மற்றும் விளிம்பு நிலை விவசாயிகளுக்கு ஏற்ற இப்படிப்பட்ட ஒருங்கிணைந்த விவசாயப்பணிகள் கொண்ட 31 மாதிரிப்பண்ணைகளை அறிவியலாளர்கள் உருவாக்கி யுள்ளார்கள். கிராமப்புற அளவில், செயல்படும் இது போன்ற மாதிரிப் பண்ணைகளில், விவசாயிகளுக்கு விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. இந்த மாதிரித் திட்டத்தில் காய்கறி, பழங்கள் பயிரிடுதல் அடிப்படை அம்சமாக உள்ளது. இந்தத் துறையில் வருமானம் மிக நல்ல முறையில் உள்ளதால் அதையே முக்கிய விவசாயப் பணியாக மேற்கொள்ளவும் ஊக்குவிக்கப் படுகிறது. ஒருங்கிணைந்த காய்கறி, பழங்கள் விவசாய மேம்பாட்டு இயக்கமும், காய்கறி விவசாயத்தை இயந்திர மயமாக்கல், குளிரூட்டு மற்றும் மதிப்பூட்டு அமைப்புகளை உருவாக்கல், விவசாய மேம் பாட்டிற்கான தகுந்த தொழில் நுட்பங்களைத் தேர்ந்தெடுத்து, விவசாய உற்பத்திப் பொருள்க ளோடு வழங்குவது ஆகிய நடவடிக் கைகளை மேற் கொண்டுள்ளது. காய்கறி, பழவகைகளை பலர் சேர்ந்து பயிர் செய்யும் முறையினால் உற்பத்தி முதல் விற்பனை வரை உள்ள அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் எளிதாக உருவாக்கமுடிகிறது.

### இயற்கை வேளாண்மை - பெரும் மாற்றம்

உடல்நலம் சார்ந்த பிரச்சினைகளால் மக்களின் உணவுப் பயன்பாட்டு முறைகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டு மக்கள் இப்போது அதிக அளவில் இயற்கை உரங்கள் மூலம் உருவாக்கப்படும் பொருள்களையே அதிகம் விரும்புகிறார்கள். இந்தப் பழக்கம் இப்போது இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் மிகவும் வேகமாகப் பரவிவருவதால் இயற்கை உர உற்பத்திப் பொருள்களின் விலைகளும் அதிகரித்துவருகின்றன. அதிர்ஷ்டவசமாக, இந்தியாவின் பருவநிலை மற்றும் சமூகப் பொருளாதார நிலைமைகள் இயற்கை உர வேளாண்மைக்கு மிகவும் சாதகமாக இருப்பதால் விவசாயிகளை ஊக்குவித்து அவர்களுக்கு வேண்டிய சந்தை வசதிகளை அளிப்பதன் மூலம் இதை நாம் பெரிதும் விரிவாக்கலாம். இந்த நிலைமையை உணர்ந்து ஏற்றுக்கொண்டு இந்திய அரசு பாரம்பரிய விவசாய மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தி, நாடெங்கிலும் இயற்கை வேளாண் பொருள்களுக்கான சந்தை அமைப்பை உருவாக்கியுள்ளது. 50 விவசாயிகள், 50 ஹெக்டேர் நிலப்பரப்பில் ஒரே சமயத்தில் இயற்கை வேளாண் பொருள்களை உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதன் மூலம் சந்தைக்கு ஏற்ற உணவுப்பொருள்கள் பயிரிடப்படுகின்றன. இதில் சேரும் ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு ஹெக்டேர் நிலத்தில் விவசாயம் செய்ய ரூ.50,000 நிதி உதவி வழங்கப்படுகிறது. இது அல்லாமல், ஒவ்வொரு, குழுவுக்கும் ரூ.1,20,000 நிதி உதவி அளிக்கப்பட்டு பயிரிடப்பட்ட இயற்கை விளைபொருள்களை சந்தைகளுக்கு எடுத்துச்செல்ல உதவி அளிக்கப்படுகிறது. இந்த ஆண்டிற்குள் இது போன்ற 10,000 இயற்கை உர பயிர் வளர்ப்புக் குழுக்களை அமைக்க அரசு ரூ.947 கோடி வழங்கி உள்ளது. இந்த இயற்கை வேளாண் குழுமங்கள் குறிப்பாக பழங்குடியினர் வாழும் பகுதியில் மழை சார்ந்த விவசாயத்தை மேம்படுத்தவும், மலைப்பகுதிகள், தொலைதூர பகுதிகளிலிருக்கும் பின்தங்கியுள்ள விவசாயிகளுக்காகவும் செயல்படுகிறது. இயற்கை உர வேளாண்மை மூலம் 20 சதவிகித செலவு குறைவதால் நிகர இலாபமும் 20 முதல் 25 சதவிகிதம் உயருகிறது.

சாதகமான சூழ்நிலை உள்ளதால் மத்திய அரசு ‘‘வடகிழக்குப் பகுதியில் இயற்கை வேளாண் மதிப்பூட்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டு இயக்கம்’’ என்ற திட்டத்தை 2015-18இல் ரூ.400 கோடி செலவில் உருவாக்குகிறது. 2016இல் இந்தியாவின் முதல் இயற்கை வேளாண் மாநிலமாக சிக்கிமை அறிவித்ததற்கு பின், மற்ற வடகிழக்கு மாநிலங்கள் இயற்கை வேளாண்மையை பெரிய அளவில் மேற்கொள்ள முன் வந்துள்ளன. இந்தியாவின் வடகிழக்குப்பகுதி இயற்கை வேளாண் பொருள்கள் உற்பத்திப் பகுதியாக மிக வேகமாக வளர்ந்து ஏற்றுமதிக்கு நல்ல வாய்ப்பளித்துள்ளது.

### கூடுதல் வருவாய்த் திட்டங்கள்

பல தொழில்நுட்ப ஆய்வறிக்கைகளின் அடிப்படையில் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் அளிக்கும் பல துணை வேளாண் பணிகளில் கவனம் செலுத்திவருகிறது. ஒருங்கிணைந்த தேனீ வளர்ப்பு மேம்பாட்டு மையங்கள் அமைக்க அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் இந்தத்துறைக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு தேன் உற்பத்தி கடந்த 4 ஆண்டுகளில் மிக அதிக அளவு உயர்ந்துள்ளது. சிறு அளவில், 50 பெட்டிகளைக் கொண்டு, மேற்கொள்ளப்படும் தேன் உற்பத்தி மூலம் கூட விவசாயிகளின் நிரந்தர வருமானம் இரண்டு இலட்சம் முதல் 2.5 இலட்சம் வரை உயரும் வாய்ப்புள்ளது. இதைப்போலவே, "பச்சைத்தங்கம்" என்று கூறப்படும் மூங்கில்களும் காடுகள் அல்லாத பகுதிகளில் மரங்களாக கருதப்பட்டதால், விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். காடுகள் அல்லாத பகுதிகளில் வளரும் மூங்கில்கள் புல்வகைப்பயிர்கள் என்று தரம் பிரிக்கப்பட்டுள்ளதால் மக்கள் அவற்றைப் பயிரிட்டு கைவினைப் பொருட்கள் தயாரிப்பதற்காக விற்பதற்கு அரசு வழிவகை செய்துள்ளது. சமீபத்தில், மூங்கில் சார்ந்த துறையை முழுமையாக மேம்படுத்த தேசிய மூங்கில் இயக்கம் ரூ.1290 கோடியில் உருவாக்கப்பட்டுள்ளது. நம்நாட்டிலும், வெளிநாடுகளிலும் காளாண்களுக்கு மிகுந்த தேவையும் நல்ல விலையும் இருப்பதால் காளாண் வளர்ப்பிற்கும் நல்ல வணிக வாய்ப்புள்ளது. வீட்டிற்குள் காளாண் வளர்ப்பதை ஊக்குவிக்க அரசு நிதி மற்றும் தொழில்நுட்ப வசதிகளை வழங்கிவருகிறது. விவசாயிகளின் கூடுதல் வருமானத்திற்காக அவர்கள் வாழும் இடங்களில் கோழிகள், ஆடுகள், பன்றிகள், மீன்வளர்ப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கிறது. "எங்கள் கிராமம், எங்களது கௌரவம்" என்ற ஒரு நவீனத் திட்டத்தின் கீழ் நான்கு விவசாய வல்லுநர்கள் இணைந்து ஐந்து கிராமங்களில் புதிய தொழில் நுட்பங்களை விளக்கிக் காட்டுகிறார்கள். இதன் மூலம் விவசாயிகளுக்கு விவசாயம் சார்ந்த அறிவு, திறமை மற்றும் தகவல்கள் கிடைத்து அவர்களது வருமானமும் உயருகிறது.




ஒரு புதிய முயற்சியாக அரசு விவசாயிகளின் தரிசு நிலங்களில் சூரியசக்தி உற்பத்தியை ஊக்குவித்து வருகிறது. இதனால், சூரியவெப்பத்தால் தயாரிக்கப்படும் மின்சாரத்தால் அவர்களுடைய நிலங்களுக்கு நீர்ப்பாசனத்துக்கான பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கிடைப்பதுடன், உபரி மின்சாரம் மின் தொகுப்பிற்கு வழங்கப்படுவதால் கூடுதல் வருமானமும் கிடைக்கிறது. நல்ல விலையில் இந்த மின் சக்தியை வாங்க தகுந்த அமைப்பை உருவாக்க மாநில அரசுகள் ஊக்கப்படுத்தப்படுகின்றன.

2022க்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க இந்திய அரசு, தகுந்த கொள்கைகளையும் செயல்படக் கூடிய திட்டங்களையும் அதற்குத் தேவையான நிதியையும் ஒதுக்கியுள்ளது. விவசாயிகள் வைத்துள்ள அதே நிலத்திலிருந்து, அதிக வருமானத்தைப் பெற மாநில அரசுகள், கூட்டுறவு சங்கங்கள், விவசாயிகளின் அமைப்புகள், விவசாயம் சார்ந்த தொழில்கள் ஆகிய எல்லா பங்குதாரர்களையும் ஒருங்கிணைத்து ஒரு இயக்கமாக நடத்தினால்தான் அவர்களுக்கான வருமானம் பெருகும்.

**- Dr. ஜக்தீப் சக்சேனா,** முன்னாள் முதன்மையாசிரியர் (ஹிந்தி), இந்திய விவசாய ஆய்வு கவுன்சில், புதுடெல்லி

# இந்தியப்பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில்களின் பங்கு

- எஸ். சிவஞானம்

2006ஆம் ஆண்டு இயற்றப்பட்ட குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் சட்டத்தின்படி குறு, சிறு, நடுத்தரத்தொழில்கள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப் படுகின்றன.

1. நிறுவனங்கள் பொருட்களை உற்பத்திசெய்தல், பதப் படுத்துதல், பாதுகாத்து பராமரித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டால் அவை இயந்திரங் களில் செய்துள்ள முதலீட்டின் படியும். (இதில் நிலம் மற்றும் கட்டிடங்களின் மதிப்பு அடங்காது)
2. நிறுவனங்கள் சேவை வழங்கலில் ஈடுபட்டால், அவை தங்களுக்கு உப கரணங்கள் வாங்குவதற்காக செய்த முதலீட்டின் படியும்.

நம்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங் களின் பங்கானது நிலை நாட்டப்பட்ட ஒரு விஷயமாகும். 12வது ஐந்தாண்டு திட்டத்தின் (2012-2017) குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கான பணிக்குழுவின் அறிக்கையின்படி, இந்தத் துறையானது நாட்டின் மொத்த வளர்ச்சியில் 45 சதவீதபங்கும் ஏற்றுமதியில் 40 சதவீதபங்கும் வகிக்கிறது. 2006ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட 4 வது மக்கள் தொகைக்கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 3.6 கோடி குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் உள்ளன. நாட்டின் தொழில் உற்பத்திக்கு 42 சதவிகிதமும், ஏற்றுமதிக்கு 40 சதவிகிதமும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் எட்டு சதவிகிதமும் இவை பங்களிக்கின்றன.


| உற்பத்தித்துறை | |
|---|---|
| நிறுவன வகை | இயந்திரங்களுக்காக முதலீடு |
| குறு நிறுவனங்கள் | ரூ.25 இலட்சத்திற்கு மிகாமல் |
| சிறு நிறுவனங்கள் | ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ.5 கோடிக்கு மிகாமல் |
| நடுத்தர நிறுவனங்கள் | ரூ.5 கோடிக்கு மேல் ரூ.10 கோடிக்கு மிகாமல் |
| **சேவை வழங்கல்துறை** | |
| நிறுவனவகை | இயந்திரங்களுக்காக முதலீடு |
| குறு நிறுவனங்கள் | ரூ.10 இலட்சத்திற்கு மிகாமல் |
| சிறு நிறுவனங்கள் | ரூ.10 இலட்சத்திற்கு மேல் ரூ.2 கோடிக்கு மிகாமல் |
| நடுத்தர நிறுவனங்கள் | ரூ.2கோடிக்கு மேல் ரூ.5 கோடிக்கு மிகாமல் |

மேலும் 32 சதவிகித நிறுவனங்கள் உற்பத்தித் துறையிலும் 68 சதவிகிதம் சேவை வழங்கல் துறையிலும் ஈடுபட்டுள்ளன. பாரம்பரியப் பொருள்கள் முதல் உயர்தொழில் நுட்பக்கருவிகள் வரை 6000க்கு மேற்பட்ட பொருட்கள் இந் நிறுவனங்களால் தயாரிக்கப் படுகின்றன. தொழிலாளிக்கும் முதலீட்டுக்கும் உள்ள விகிதாச்சாரமும், பெருந் தொழில்களை விட அதிகமாகவே உள்ளது. புவியியல் கூறுகள் படியும் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பரவலாகவே காணப்படுகின்றன.

## தமிழ் நாட்டில் குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களின் நிலை

தமிழகத்தைப் பொறுத்த வரை குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் வியக்கத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளன. அநேகமாக எல்லாத்துறைகள் சார்ந்த பொருட்களையும் தயாரிக்கின்றன. குறிப்பாக, நெசவுத்துறை, மின்னணு சாதனங்கள், இயந்திரவியல்துறை, வாகனஉதிரிபாகங்கள், தோல் பொருட்கள், இரசாயனம், பிளாஸ்டிக், ஜவுளி மற்றும் ஆபரணங்கள் ஆகியன.

மொத்தஎண்ணிக்கையில் 13 இலட்சத்திற்கும் மேலான நிறுவனங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன. 80 இலட்சத்திற்கு மேலான நபர்கள் இந்நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.



குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகள் தொழில் மயமாவதை உறுதிப்படுத்துகின்றன. பட்டியலினத்தோர், பெண்கள், இளைஞர்கள், மாற்றுத் திறனாளிகள் வாழ்க்கைத்தரம் மேம்பட உதவிகரமாக இருக்கின்றன. சமூக மற்றும் வட்டார ஏற்றத் தாழ்வுகளை நீக்கும் கருவிகளாக இருக்கின்றன. தமிழகத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு இத்துறையானது பேருதவியாக இருக்கிறது.

## குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வளர்ச்சி நிலையம் - ஒரு சிறப்புக்குறிப்பு

சென்னையில் இயங்கிக் கொண்டிருக்கும் குறு, சிறு, நடுத்தரத்தொழில்கள் வளர்ச்சி நிலையம் 1956ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்திய அரசின் குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது. குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களை உருவாக்கம் செய்வதும், அவற்றின் வளர்ச்சிக்கு உதவுவதும், இந்நிறுவனத்தின் தலையாய பணியாகும். புதிய தொழில் முனைவோர்களுக்கும், ஏற்கனவே தொழில் நிறுவனங்களை நடத்திக் கொண்டிருப் பவர்களுக்கும் தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் மேலாண்மைக்கான ஆலோசனைகளை வழங்குவது மட்டுமல்லாமல் தொழில் முனைவோர் திறன்மேம்பாடு மற்றும் மேலாண்மைப் பயிற்சி களையும் நடத்துகிறது. கோயம்புத்தூரிலும், தூத்துக் குடியிலும் இந்நிறுவனத்திற்குக் கிளை அலுவலகங்கள் இருக்கின்றன.

குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களுக்கு தொழில் நடத்துவது சம்பந்தமாக அடிப் படைத் தகவல்களை வழங்குவதே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்க மாகும். சரியான பொருளைத் தேர்வு செய்தல், சந்தை வாய்ப்புக்களைக் கண்டறிதல், கச்சாப்பொருள்கள் எளிதாக கிடைக்க வழிசெய்தல், பொருளா தாரரீதியான ஸ்திரத்தன்மை, உற்பத்தி செய்முறைகள், மேலாண்மை உத்திகள் போன்றவை பற்றி தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்படும். இவை தவிர, நவீனமயமாக்கல், தொழில் நுட்பமேம்பாடு, சர்வதேசதரச் சான்றிதழ் பெறுதல், மின்சாரச் சிக்கனம், மாசுக்கட்டுப்பாடு ஆகியவற்றைப் பற்றிய சமீபத்திய தகவல்களும் வழங்கப்படும். குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கான இந்திய அரசின் சிறப்புத் திட்டங்களைப் பற்றி முக்கியத்துவம் கொடுத்து திட்டங்களை செயல்படுத்தியும் தமிழ்நாட்டிலும் புதுச்சேரியிலும் பெருமளவில் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. வளர்ச்சி நிலையத்திலும், அதன் கிளைகளிலும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் நடத்தப்படுகின்றன.

இந்திய அரசின் பொதுக் கொள்முதல் கொள்கையை பயனுள்ள வகையில் செயல் படுத்தும் பொருட்டு குறு சிறு தொழில் நிறுவனங்கள் தங்கள் பொருட்களை கொள்முதல் செய்யும் பெரிய நிறுவனங்களோடு குறிப்பாக மாநில மத்திய அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்க ளோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

இதன் மூலம் சிறிய நிறுவனங்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் உருவாகும். அதே வேளையில் பெரிய நிறுவனங்



களுக்கும் தேவைப்படும் பொருட்கள் தடையில்லாமல் கிடைக்கும். இந்த அரிய வாய்ப்பை இந்நிறுவனங்கள் பெறும் பொருட்டு உள்நாட்டு மற்றும் சர்வதேச தொழில் கண்காட்சிகளில் பங்கேற்க குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வளர்ச்சி நிலையம் வழி வகை செய்கிறது. அதற்குண்டான செலவுகளையும் ஈடுசெய்கிறது.

**குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களுக்கு கீழ்க்காணும் சேவைகளும் வழங்கப்படுகின்றன:**

- தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்
- தொழில் ஊக்குவிப்புமுகாம்
- தரமேலாண்மையை அமல் படுத்துதல்
- அறிவுசார் சொத்துரிமை விழிப்புணர்வு
- விற்பனையாளர் மேம்பாட்டுத் திட்டம்
- ஏற்றுமதிக்கான பொதிகட்டுதல்
- தொழில் முனைவோரின் ஆக்கங்களை வளர்த் தெடுத்தல்.
- தொழில் குழும வளர்ச்சித் திட்டம்
- தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் புதுப்பித்தல்
- சந்தை வாய்ப்புகளை மேம்டுத்துதல்
- இயந்திரவியல் பணிமனை சேவைகள்
- தொழில் கண்காட்சிகள்

இத்தகைய சேவைகள் தவிர, இந்நிலையம் மாநில மற்றும் மத்திய அரசுகளின் இதரத்துறைகளோடும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், வங்கிகள். நிதி நிறுவனங்கள் ஆகிய வற்றோடும் இணைந்து குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங் களுக்குத் தேவையான கொள்கை களையும் உத்திகளையும் தொடர்ச்சியாகவகுக்க பணி புரிகிறது.

- **எஸ். சிவஞானம்,** கூடுதல் தொழில் ஆலோசகர்; சிறு, குறு நடுத்தரத் தொழில்கள், சென்னை.

# அடுத்த இதழில்

# "சமூக அதிகாரம்"

(Social Empowerment)

பற்றிய கட்டுரைகள் இடம்பெறும்.

# காவேரி மேலாண்மை வாரியத்தின் முக்கியத்துவம்

- எஸ்.ரங்கநாதன்

காவேரி நதி நீர் பங்கீட்டுப் பிரச்சினை தொடர்பாக எங்களது கூட்டமைப்பின் சார்பில் 1983ஆம் ஆண்டு போடப்பட்ட வழக்கில் தீர்ப்பளித்தபோது, உச்ச நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு ரங்கநாத் மிஸ்ரா அவர்கள் தெரிவித்த கருத்துக்களை இங்கு நினைவு கூர்வது மிக முக்கியமானதாகும்.

“இது போன்ற தாவாக்கள், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் மக்கள் மத்தியில் கசப்புணர்வை உருவாக்கும் ஆற்றல் கொண்டவையாக உள்ளன. எவ்வளவு காலத்திற்கு இவை நீளுகின்றனவோ அந்த அளவுக்கு கசப்புணர்வும் அதிகமாகிறது. அனைத்து மாநில மக்களின் நலன்களுக்கும் பாதுகாவலனாகத் திகழவேண்டிய மத்திய அரசு இத்தகைய சமயங்களில் அரசமைப்பு எந்திரங்களை செயல்படச் செய்வதற்கு, காலம் தவறாமல் விரைவான நடவடிக்கைகளை நிச்சயமாக மேற்கொள்ள வேண்டும். அதிர்ஷ்டவசமாக, இத்தகைய தாவாக்களை நடுநிலையான தீர்ப்பாயத்தின் மூலம் திறம்படத் தீர்த்துவைக்க வேண்டிய அதிகாரத்தை மத்திய அரசுக்கு அளித்து நாடாளுமன்றம் சட்டம் இயற்றியுள்ளது. எனவே, தாவாக்கள் நீண்டகாலத்திற்கு நீடிப்பதற்கான காரணம் எதுவுமே இருக்க வாய்ப்பில்லை. அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்டப்பூர்வமாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதில் ஏற்படும் காலம் தாமதமானது, உணர்வுகளைத் தூண்டிவிட்டு கசப்புணர்வை மேலும் அதிகமாக்கிவிடும். ஆகவே, தாவாக்கள் தீவிரம் அடைவதற்கு முன்பாகவே சட்டப்பூர்வ அதிகாரத்தைச் செயல்படுத்த வேண்டியது அவசியமாகும். சரியான தருணத்தில் எடுக்கப்படும் பொருத்தமான நடவடிக்கை பலரையும் காப்பாற்றும். இது தனி மனிதனுக்கு மட்டுமின்றி நாடுகளுக்கும் பொருந்தும்.”

காவேரி நதிநீர் ஆணையத்தை அமைத்து ஜூன் 2, 1991இல் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பளித்த நீதியரசர் மேற்காணும் வகையில் ஆணையிட்டிருந்தார்.


காவேரி நதி நீர்ப் பிரச்சினை 1892 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. தீர்வுக்காக மிக நீண்ட காலத்தை எடுத்துக்கொண்டுள்ள பிரச்சினை அநேகமாக இதுவாகத்தான் இருக்கும். பிப்ரவரி, 5, 2007இல் ஒரு இறுதித் தீர்ப்பைப் பெற்று ஒரு முடிவை எட்டுவதற்கு முன்பு, காவேரி நதிநீரைப் பயன்படுத்திக் கொள்ளும் கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய இரண்டு மாநிலங்கள் கசப்புமிக்க 35 ஆண்டுகால நீட்சியைக்கண்டன. இறுதித் தீர்ப்புக்குப் பின்னர் மேலும் 6 ஆண்டுகள் கழித்து 13, பிப்ரவரி 2015இல் இந்த ஆணை அரசிதழில் வெளியிடப்பட்டு மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்தது. இதற்கும், பிப்ரவரி 2018க்கும் இடையே இந்த பிரச்சினை தீர்ப்பாயத்திற்கும், உச்ச நீதிமன்றத்திற்கும் இடையே பல முறை சென்றுவந்தது. இதனால் ஏற்பட்ட கசப்புணர்வினால் பல உயிரிழப்புகளும், சொத்து இழப்புகளும் நேர்ந்தன.

காவேரி நதிநீர்ப் பங்கீட்டு வாரியத்தின் இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்பட்ட டிசம்பர் 1991க்கும், வாரியத்தின் இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்ட பிப்ரவரி 5 2007க்கும் இடையே, இத்தகைய தாவாக்களின் தீர்ப்புகளிலோ அல்லது 1991 டிசம்பர் அரசிதழ் அறிவிப்பிலோ இது போன்று எதுவுமே இதுவரை இருந்திராத நிலையில், இடைக்காலத்தீர்ப்பு என்ற ஒன்றை வழங்குவதன் மூலம் பிரச்சினையைத் தீர்க்க காவேரி நதிநீர்ப் பங்கீட்டு வாரியம் முயன்றது.

1971/72 இல் காவேரி உண்மை அறியும் குழுவின் முயற்சியும் தோல்வி கண்டது. இந்தச் சூழலில், 1993இல் நாங்கள் ஒரு ரிட் மனுவை தாக்கல் செய்தோம். இறுதியில் காவேரி நதிநீர்ப் பங்கீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவர் மாண்புமிகு என்.பி.சிங், அதன் உறுப்பினர்கள் நீதிபதி ஜே. சுதர்சன், நீதிபதி என். எஸ்.ராவ் ஆகியோர் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை 5, பிப்ரவரி, 2007இல் அளித்தனர். அந்தத் தீர்ப்பின் 21அம்சங்களில் ஒரு சிலவற்றை இங்கு ஆராய்வோம்:

மாநிங்களுக்கு இடையேயான நதிநீர் தாவா சட்டம், 1956, ஆறாவது பிரிவின் கீழ் தீர்ப்பாயத்தின் தீர்ப்பு வெளியிடப்பட்ட நாள் முதல், தீர்ப்பாயத்தின் ஆணை அமலுக்கு வரும். தமிழ்நாட்டின் வேண்டுகோளுக்கு இணங்கவும், 25 ஜூன் 1991 அன்று உச்சநீதிமன்றத்தின் தலையீட்டிற்குப் பிறகும் ஆரம்பத்தில் தயக்கத்தோடே இடைக்கால நிவாரணம் வழங்கப்பட்டது. 1892, 1924 ஆகிய ஆண்டுகளில்

மைசூருக்கும், அப்போதைய சென்னை ராஜதானிக்கும்ஏற்பட்ட ஒப்பந்தங்களின் சாதகங்கள் பற்றி கருதாமல் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 12 ஆம் தேதி, 205 டி.எம்.சி தண்ணீரை கர்நாடக அரசு திறந்துவிடவேண்டும்.



ஒவ்வொரு மாதமும் இவ்வளவு தண்ணீர் என்ற அளவில் மாதந்தோறும் தண்ணீர் திறக்கப்படவேண்டும் என்று இடைக்காலத்தீர்ப்பில் ஆணையிடப்பட்டது.

இந்த இடைக்காலத் தீர்ப்பை அரசிதழில் வெளியிடுவதற்கு மத்திய அரசுக்கு 6 மாத காலம் பிடித்தது. இறுதியில் 10, டிசம்பர், 1991இல் அரசிதழில் வெளியிடப்பட்ட பிறகு, கர்நாடகத்தில் அப்பாவித் தமிழர்களின் உயிருக்கும், உடமைக்கும் இழப்புகள் ஏற்பட்டன.

நீர்ப்பாசனத் தேவையில் 75% நீரை ஆற்று நீர்ப்பாசன மாநிலங்களுக்கிடையே அளிக்க வேண்டும் என்ற வழக்கத்திலிருந்து மாறுபட்டு 50% நீரையே வழங்க தீர்ப்பாயம் உத்தரவிட்டது. காவேரி டெல்டா விவசாயிகளுக்கு இது ஒரு பெருத்த அடியாகும்.

எனினும், ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12 முதல் வழங்கப்படவேண்டிய வாராந்திர/ மாதாந்திர நீரின் அளவோடு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கென 10 டி.எம்.சி யும், கடலில் வீணாக கலக்கும் தண்ணீரை ஈடு செய்யும் விதத்தில் 4 டி.எம்.சி நீரும் கூடுதலாக வழங்க உத்தரவிடப் பட்டது.

ஆண்டுதோறும் தமிழ் நாட்டிற்கு தரப்படவேண்டிய நீரின் அளவு 201 டி.எம்.சியில் இருந்து 192 டி.எம்.சி ஆக குறைக்கப்பட்டது.

கர்நாடகாவிலிருந்து மாதந் தோறும் நீர் திறந்துவிடுவது 10தின இடைவெளிகளாக பிரிக்கப்பட்டு அலுவல் ரீதியாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட ஒழுங்குமுறை அதிகார அமைப்பினால் மேற் பார்வையிடப்பட வேண்டும்.

நீர் அதிகம் கிடைக்கும் ஆண்டுகளில் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அவர்களது அணைகளில் நீரை சேமித்து வைக்கவும், நீர் பற்றாக்குறை உள்ள ஆண்டுகளில் பற்றாக் குறைக்கு ஏற்ப நீரை எடுத்துக் கொள்வதற்கு இந்த அதிகார அமைப்பினால் அனுமதியும் தரப்படவேண்டும். காவேரி மேலாண்மை வாரியம் நீர் பற்றாக்குறை அளவைக் கணக் கிட்டு இதனை செய்யவேண்டும்.

தென் மேற்குப் பருவமழைக் காலத்தில் கர்நாடகா தண்ணீர் திறந்துவிட மறுப்பதால் குறுவை சாகுபடி இழப்பு ஏற்பட்டு ஏறத்தாழ ரூ.1250 கோடிக்கு உற்பத்தி இழப்பு உண்டாகிறது. இலட்சக் கணக்கான நிலமற்ற விவசாயக் கூலித்தொழிலாளிகள் கடந்த பத்தாண்டுகளாக தங்கள் குடும்பத்தை விட்டுவிட்டு தினக்கூலி கிடைக்கும் இடங் களுக்கு சென்று வருகின்றனர்.

நீர்ப்பங்கீட்டைத் திறம்படக் கண்காணிப்பதற்கு காவேரி மேலாண்மை வாரியமே சிறந்த தீர்வு என்று கருதிய காவேரி நீர் பங்கீட்டுத்தீர்ப்பாயம் காவேரி மேலாண்மை வாரியத்தை அமைப்பது பற்றி தன்னுடைய பிப்ரவரி, 5, 2007 இறுதித் தீர்ப்பில் 8ஆவது அத்தியாத்தில் விரிவாகப் பேசுகிறது. உச்சநீதிமன்றமும் தனது பிப்ரவரி, 16, 2018 தீர்ப்பில் தனது ஆணையில் காவேரி நதி நீர்ப் பங்கீட்டு வாரியத்தின் இறுதித்தீர்ப்பை, தான் கணக்கில் எடுத்துக்கொண்டதாக தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

**காவேரி மேலாண்மை வாரியத்தை அமைத்தல்:**

இந்த வாரியம் தொடர்ச்சியாக இருந்துவரவேண்டும். யார் மீதும் வழக்கு தொடரவோ, அல்லது வாரியத்தின் மீது வழக்கு தொடரவோ உரிமை உண்டு. இது இந்திய அரசாங்கத்தின் மத்திய நீர்வளத்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இருந்துவரும்.

**காவேரி மேலாண்மை வாரியத்தின் அமைப்பு:**

அ. ஒரு முழு நேர தலைவர். இவர் நீர்ப்பாசனப் பொறியாளராக 20 ஆண்டுகள் பணியாற்றி இருக்கவேண்டும்.

தலைமைப் பொறியாளர் நிலையில் பணிபுரிந்திருக்க வேண்டும். இவரது பதவிக்காலம் 3 முதல் 5 ஆண்டுகள் வரை.

ஆ. இந்திய அரசங்கத்தால் நியமிக்கப்படும் முழு நேர உறுப்பினர்கள் இருவர். ஒருவர் வேளாண் நிபுணராக - குறிப்பாக மண்ணியல் நிபுணராக இருக்கவேண்டும். இவருக்கு 15 ஆண்டுகள் அனுபவம் தேவை.

இ. மத்திய அரசின் பிரதிநிதிகள் இருவர். இவர்கள் பகுதிநேர உறுப்பினர்களாக செயல் படுவார்கள். இவர்களில் ஒருவர் நீர்வளத்துறை அல்லது வேளாண் துறை தலைமைப் பொறியாளர்.

ஈ. மாநில அரசாங்கங்களின் பிரதிநிதிகள். இவர்கள் பகுதி நேர உறுப்பினர்கள்.

கேரளா - 1
கர்நாடகா - 1
தமிழ்நாடு - 1
புதுச்சேரி - 1

உ. உறுப்பினர் காலியிடம் ஏற்படும் பட்சத்தில் அதற்கான அதிகாரம் பெற்றுள்ளவர் புதிய நபர்களை நியமிப்பார்.

ஊ. வாரியத்தின் செயலாளர் ஒரு நீர்ப்பாசன பொறியாளர் இவர் சம்பந்தப்பட்ட எந்த மாநிலத்தையும் சேராதவர். இவர் இயக்குநர்/ கண்காணிப்புப் பொறியாளர் நிலையில் பணிபுரிந்தவராக இருக்க வேண்டும். இவருக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது.

**கூட்டத்திற்குத் தேவைப் படும் குறைந்தபட்ச நபர்களும் வாக்களிக்கும் உரிமைகளும்:**

கூட்டம் நடத்துவதற்கு குறைந்தபட்சம் ஆறு உறுப்பினர்கள் இருக்கவேண்டும். பெரும் பான்மையினரின் ஒப்புதலும் தேவை. உறுப்பினர்களுக்கு சம அதிகாரம் உண்டு.

குறைந்தபட்ச உறுப்பினர்கள் இல்லாத காரணத்தால் கூட்டம் நடக்கவில்லை என்றால் மூன்று நாள்களுக்குள் கூட்டம் மறுபடியும் கூட்டப்படவேண்டும். இதற்கு குறைந்த பட்ச உறுப்பினர்கள் இருக்கவேண்டும் என்ற அவசிய மில்லை.

வாரியத்தின் தலைமை இடம்: சம்பந்தப்பட்ட மாநிலங் களைக் கலந்து ஆலோசித்து முடிவு செய்யப்படும்.

**வாரியத்தின் பணிகள்:**

1. பணிகளுக்கான விதிமுறை களை வகுத்தல்
2. உறுப்பினர், செயலாளர், வாரியத்தின் பிற அலுவலர் களுக்கு வேலைகளைப் பிரித்து அளித்தல்.
3. வாரியத்தின் செயல்பாடுகளின் எந்தப் பகுதியையும் சாதாரண மானதாக வகைப்படுத்துதல்.
4. வாரியம் முடிவெடுக்கவேண்டும் என்று 4 மாநிலங்களில் ஏதேனும் ஒன்று கேட்டுக் கொண்டால் அதுபற்றி வாரியக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட வேண்டும்.
5. மத்திய நீர் ஆணையம், தேசிய நீரியல் கழகம், இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகம் அல்லது பிற முகமைகள், பல்கலைக்கழகங்கள் ஆகிய வற்றை கூட்டங்களுக்கு சிறப்பு விருந்தினர்களாக அழைத்தல் உள்பட பிறவகையான செயல்பாடுகளையும் வாரியம் மேற்கொள்ளும்.
6. வாரியத்திற்குத் தேவைப்படும் அலுவலர்கள் நியமனம், அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள்.
7. கள அளவில் செயல்படும் நிர்வாக அமைப்புச் செலவு, நீர் சேமிப்பு அணைகள் கட்டுதல், மின் ஆற்றல் உற்பத்தி அமைப்புகளை நிறுவுதல், கால்வாய்க் கட்டமைப்பு போன்ற பணிகள் அந்தந்த மாநிலங்களின் பொறுப்பாகும்.
8. வாரியத்தின் செலவில் 40 விழுக்காட்டை கர்நாடகாவும் , 40 விழுக்காட்டை தமிழ்நாடும், 15 விழுக்காட்டை கேரளாவும், 5 விழுக்காட்டை புதுச்சேரியும் பங்கிட்டுக்கொள்ளும்.

**காவேரி நீர் ஒழுங்காற்று ஆணையம் அதன் செயல்பாடுகள்:**

காவேரி நதி நீர்ப் பங்கீட்டுத் தீர்ப்பாயம் வழங்கும் இறுதித் தீர்ப்பை அமலாக்குவது இதன் வேலை. இதில்,

அ. நீர்ப்பாசன முழு நேர உறுப்பினர் ஒருவர் தலைவராக இருப்பார்.

ஆ. கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி ஆகிய ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஒரு உறுப்பினர். முதுநிலைக் கண்காணிப்புப் பொறியாளர் அந்தஸ்தில்.

இ. இந்தியவானிலை துறையி லிருந்து ஒரு பிரதிநிதி இயக்குனர் அந்தஸ்தில் உறுப்பினர்

ஈ. மத்திய நீர் ஆணையத்தின் ஒரு பிரதிநிதி ஆறுகளை அளவை செய்யும் பணியிலிருப் பவர் - உறுப்பினர்

உ. மத்திய வேளாண் அமைச் சகத்திலிருந்து ஒரு பிரதிநிதி மேற்பார்வைப் பொறியாளர் அந்தஸ்தில் - உறுப்பினர்

ஊ. காவேரி மேலாண்மை வாரியத்தின் செயலாளர்- உறுப்பினர் செயலர்.

தினசரி நீர் அளவுகள், ஹேமாவதி, ஹாரங்கி, கிருஷ்ணராஜ சாகர் ஆகிய அனைத்து அணைகளிலும் நீர் வரத்து, நீர் இருப்புக் கண்காணிப்பு, நீர் திறந்துவிடுவதைக் கண் காணிப்பது, இந்த அணைகளில் இருந்து திறந்துவிடப்படும் நீரின் அளவு பற்றிய தரவுகளை 12 மணி நேரத்திற்கு ஒருமுறை சேகரிப்பது, ஏதேனும் மீறல்கள் தென்பட்டால் குழுவின் செயளாலரிடம் தெரிவிப்பது, பாய்ந்தோடும் தினசரி நீரின் அளவு, அணைகளின் மாதந்திர நீர்க்கணக்கு, வானிலைத் துறையின் மழை அளவுகளை வைத்து பருவ மழை நிலவரத்தை வாரியத்திற்குத் தெரிவித்தல் ஆகியவை இதன் பணிகள்.

முக்கியமான அணைகள், திட்டங்கள் ஆகியவற்றின் பொறுப்பாளர்களாக உள்ள மாநிலப் பிரதிநிதிகள் ஒழுங் காற்றுக்குழுவிடம் மழை அளவுகள் பற்றி தொடர்ந்து தெரிவித்து வரவேண்டும். நீர் திறந்துவிடுவதில் மாற்றங்கள் தேவையா என்பது பற்றி தெரிவிக்கவேண்டும். பருவகால, வருடாந்திர அறிக்கைகளை தயார் செய்து, வாரியத்திற்குப் பின்வரும் முறைப்படி அளிக்கவேண்டும்.

தென் மேற்குப் பருவ காலம் ஜூன் 1 முதல் அக்டோபர் 15 வரை.

வடகிழக்குப் பருவகாலம் அக்டோபர் 16 முதல் ஜனவரி 31 வரை.

கடும் வெப்பக் காலம் பிப்ரவரி 1 முதல் மே 31வரை.

### காவேரி மேலாண்மை வாரியத்திற்கு முக்கியமான வழிகாட்டு நெறிகள்:

பருவ மழையின் இயல்பை நீர் ஆண்டின் தொடக்கத்திலேயே கணிப்பது கடினம். ஜூன் முதல் தேதியில் அணைகளின் நீர் இருப்பை வாரியம் கண்டறியும். ஒவ்வொரு பருவத்திலும் ஆறுகளில் எவ்வளவு நீர் வரும் என்பதை அறிவதும் கடினம். ஆண்டுதோறும் கிடைக்கக்கூடிய குறைந்தபட்ச நீர் அளவான 750 டி.எம்.சியில் 50% அளவை நீர்வரத்தாகக் கருதிக் கொள்ளலாம். ஒவ்வொரு மாநிலத்திற்குமான பங்கு இதன் அடிப்படையில்தான் அமைய வேண்டும். திறந்துவிடப்பட வேண்டிய நீரின் அளவை எப்படிக் கணக்கிடுவது என்பது தொடர்பான மிகத்தெளிவான அறிவுறுத்தல்கள் தரப்பட்டுள்ளன.

கேரளாவில் பானசுராசாகர், கர்நாடகாவில் ஹேமாவதி, ஹாரங்கி, கபினி, கிருஷ்ண ராஜசாகர், தமிழ்நாட்டில் கீழ் பவானி, அமராவதி, மேட்டூர் ஆகிய முக்கியமான அணைகள் காவேரி மேலாண்மை வாரியத்தின் வழிகாட்டுதலின் பேரில் ஒன்றிணைந்த முறையில் இயக்கப்படவேண்டும். கூடுதலாக உள்ள நீர் சேமிக்கப்படவேண்டும். காவேரி வடிநிலப்பகுதியில் கணினி அடிப்படையிலான சிறப்பாக வடிவமைக்கப்பட்ட தகவல் தொடர்பு கட்டமைப்பு மூலம் நீரியல் நிலைமைகள், இடர் நேரிடும் காலம் பற்றிய விவரங்களை கட்டுப்பாட்டு அறையில் ஆராய முடியும்.

காவேரி நதி நீர்ப் பங்கீட்டு தீர்ப்பாணையம் வெளியிட்டுள்ள வழிமுறைகள் மிகவும் விரிவானவை, தெளிவானவை. மாநிலங்களுக்கு நீரைப் பங்கிட்டு அளிப்பதில் முற்றிலும் எந்த விதமான ஐயப்பாடும் இல்லாத விதத்தில் வழிகாட்டு நெறி முறைகள் அமைந்துள்ளன. ஒரு மாநிலத்திற்கு அதிகமாகவோ, குறைவாகவோ தவறுதலாக நீர் வழங்கப்பட்டுவிட்டால் அடுத்த முறை நீர் வழங்கும்போது அது சரி செய்துகொள்ளப்படும். ஆகவே நீர் வழங்கலில் நிகழக் கூடிய எந்தவிதமான தவறுதல் களையும் சரிசெய்து கொள்ள முடியும்.

காவேரி நதிநீர் தாவாவில் முதல் முறையாக - காவேரி பற்றாக்குறை நதியாக இருந்த போதிலும் கூட - அந்த நதி நீரின் பங்கீட்டில் மிக அதிகமான கவனம் இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நதிநீர்ப் பங்கீட்டுக் குழு ஆகியவை மிகவும் கவனத்துடன் திட்டமிடப் பட்டு ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன. நீரை முறையாகப் பங்கிட்டு அளிப்பதில் உள்ள பொறுப்புகளை வெற்றிகரமாக நிறைவேற்றும் போது மாநிலங்களிடையே ஒற்றுமையும், புரிந்துணர்வும், ஒத்துழைப்பும் ஏற்படும். நாட்டில் உள்ள நதிகளிலேயே காவேரிதான் பற்றாகுறையுள்ள ஒரே நதி என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். காவேரி நதி நீர்ப் பங்கீட்டு வழிகாட்டுதல் களை நான்கு மாநிலங்களும் முழுமையாகப் படித்துப் புரிந்து கொள்ளும் போது, அவர்கள் மத்தியில் குறிப்பாக கர்நாடகம், தமிழ்நாடு மத்தியில் நிலவும் தவறான புரிதல்கள் மறைந்து போகும்.

- **எஸ்.ரங்கநாதன்,** பொதுச் செயலாளர், தமிழ்நாடு காவேரி டெல்டா விவசாயிகள் நலச் சங்கம், தஞ்சாவூர். ●

# கிராமப்புறங்களுக்கு புத்துயிரூட்ட இந்திய அரசின் முயற்சிகள்

- எம்.சின்னதுரை
- கே.ஆர்.அஷோக்

இந்தியப் பொருளாதார மேம்பாட்டிற்கு ஊரக வளர்ச்சி மிகவும் அவசியம். கிராமப் புறங்களில் வாழ்பவர்களில் பெரும்பாலானோர் தங்களின் வாழ்க்கைக்கு விவசாயத்தையே நம்பியுள்ளனர். ஊரக மேம்பாடு என்பது, விவசாயம் அல்லாத துறைகளின் வளர்ச்சியையும், கிராமப்புறப் பகுதிகளின் உள்கட்டமைப்பு மேம்பாட்டையும் உள்ளடக்கியதாகும். விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகளின் வளர்ச்சி விகிதங்கள் கடந்த பல ஆண்டுகளாக உயர்ந்தும், தாழ்ந்தும் காணப் படுகிறது. 2012-13இல் 1.5 சதவிகிதம், 2013-14ல் 5.6 சதவிகிதம், 2014-15இல் (0.2%) 2015-16இல் 0.7 சதவிகிதம் மற்றும் 2016-17இல் 4.9 சதவிகிதம். இந்தத் துறைகளில் கடந்த சில ஆண்டுகளாக சில அடிப்படை மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. விவசாயத்தின் மதிப்புக்கூட்டப்பட்ட மொத்த தொகையில் கால்நடைகளின் பங்கு, கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்துள்ளது. அதே சமயம், பயிர்களின் பங்களிப்பு மெல்ல, மெல்ல குறைந்து 2011-12இல் 65 சதவிகிதமாக இருந்து, 2015-16இல் 60 சதகிவிதமாக குறைந்தது. 2000மாவது ஆண்டில் அளிக்கப்பட்ட முதலாவது தேசிய விவசாய கொள்கையின்படி, இந்தியாவின் இன்னும் பயன்படுத்தப்படாத வளமிக்க விவசாயத்தை முழுதுமாகப் பயன்படுத்துதல், வேகமான விவசாய மேம்பாட்டிற்கு ஊரக உள்கட்டமைப்பு வசதிகளை வலுவாக்குதல், விவசாயப் பொருட்களின் மதிப்பைக் கூட்டுதல், கிராமப்புறப் பகுதிகளின் வேலைவாய்ப்பை அதிகரிக்க விவசாயம் சார்ந்த வியாபாரத்தின் வளர்ச்சியை அதிகரித்தல். விவசாயத் தொழிலாளிகள் குடும்பங்கள் உள்ளிட்ட அனைத்து விவசாயக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், இவர்கள் நகர்ப்புறங்களுக்குக் குடிபெயர்வதைக் குறைத்தல் மற்றும் பொருளாதார தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கலால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வது ஆகிய குறிக்கோள்கள் உள்ளடங்கியுள்ளன. இந்தக்கொள்கையில் உயர் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடுகள் கிராமப்புறங்களில் மின்சாரவசதி, விவசாய சந்தை உள் கட்டமைப்பு மேம்பாடு, விவசாயப்பொருட்கள் பாழாவதைத் தடுப்பதற்கு விவசாயப் பொருள்களைப் பதனிட்டு, பொருள்களைத் தயாரித்தல், விவசாயப் பொருள்களுக்கு மதிப்புகூட்டி, விவசாயத்தில் நேரடியாக ஈடுபடாதவர்களுக்குக்கூட வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியனவாகும். இந்தக் கட்டுரையில் கிராமப்புற இந்தியாவிற்கு புத்துயிர் அளிப்பதற்கான விவசாய மற்றும் ஊரக மேம்பாட்டுத் திட்டங்களை ஆராய்ந்து இதனால் வளர்ச்சி இனி எப்படி இருக்கும் என்பதை நாம் பார்ப்போம்.

## தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம்

2007-08 இல் இந்திய அரசு தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கத்தைத் துவக்கி அதை 19 மாநிலங்களில் உள்ள 482 மாவட்டங்களில் செயல் படுத்தியுள்ளது. நாட்டில் உணவு பாதுகாப்பை உறுதிசெய்யும் வண்ணம் கோதுமை, நெல் மற்றும் பருப்புகள் உற்பத்தியில் திறன் மேம்பாட்டை அடைய இந்த இயக்கம் முயல்கிறது. நவீன தொழில்நுட்பத்தையும், வேளாண் மேலாண்மைச் செயல்களையும் மேம்படுத்தி இந்தத் தானியங்களில் உற்பத்தித் திறனில் உள்ள இடைவெளியை நிறைவு செய்வுது இதன் நோக்கமாகும். 2017-18 இல் இந்தத்திட்டம், ரூபாய் 521கோடி முதலீட்டில் செயல் படுத்தப் பட்டுள்ளது. இந்த இயக்கம் செயல்பட்ட மாவட்டங்களில் உணவு உற்பத்தி அதிகரித்துள்ளது. இதனால், நெல் கோதுமை மற்றும் பருப்புகள் உற்பத்தியில் நல்ல மகசூல் கிடைத்துள்ளது.

### தேசிய விவசாய மேம்பாட்டுத் திட்டம்

விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகளில் மத்தியஅரசு மேற்கொண்டுள்ள மற்றொரு முனைப்புத்திட்டம், தேசிய விவசாய மேம்பாட்டுத் திட்டம். இது 2007இல் துவங்கப் பட்டது. இதன், இறுதி நோக்கம் விவசாய உற்பத்தியில் திறனை மேம்படுத்துவது மற்றும் விவசாயி களுக்குக் கிடைக்கும் பலன்களை அதிகரிப்பதாகும். இந்தத் திட்டத்தின் மூலம் மாநில அரசுகள் விவசாயம் மற்றும் அதை சார்ந்த துறைகளுக்கான முதலீட்டை அதிகப்படுத்துவதற்கும், அந்தந்த மாநிலங்களுக்கு உண்டான விவசாய மற்றும் பருவ நிலை களுக்கு ஏற்ப மாவட்ட அளவிலான விவசாய செயல்திட்டங்களை வகுப்பதற்கும் தேவையான தொழில்நுட்ப மற்றும் இயற்கை வளங்களை வழங்கவும், நிலைமைகளுக்கு ஏற்ப பயிர்களை மேம்படுத்தவும் முறையான குறுக்கீடுகள் மூலம் முக்கியமான பயிர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்தவும் ஊக்குவிக்கப் படுகிறார்கள். 2017-18ஆம் ஆண்டின் இந்த திட்டத்திற்கான முதலீடு ரூ.4750 கோடியாகும்.

### பிரதம மந்திரி பயிர்காப்புத் திட்டம்

பயிர் விளைச்சல் குறை வால் ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்யவும், விவசாயிகளுக்கு நிரந்தரமாக ஒரு நல்ல வருமானம் கிடைக்கச் செய்யவும், ஒரு முழுமையான பயிர்க் காப்பீட்டு திட்டத்தை 2016இல் இந்திய அரசு பிரதமமந்திரி பயிர்க்காப்புத்திட்டம் என்ற பெயரில் துவக்கியது. இந்தத் திட்டத்தின் மூலம் விவசாயிகள் நவீன விவசாய பழக்கவழக்கங்களை மேற் கொள்ளவும், விவசாயத்துறைக்கு கடன் வசதிகள் கிடைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளன. இந்தத்திட்டம், 3,66,64,000 விவசாயிகளுக்கு (26.5%) பயன்பட்டு ரூ.1,41,339 கோடி அளவுக்கு பயிர்காப்பு 388.62 இலட்சம் ஹெக்டேரில் விளைந்த பயிர்களுக்கு வழங்கப்பட்டது. இதற்கு முன்பு இருந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டங்களினால் விவசாயிகளுக்கு முழுப்பயன் கிடைக்காத நிலையில் அரசு இந்த புதியதிட்டத்தை வடிவமைத்துச் செயல்படுத்தியது. இந்தப் புதிய திட்டத்தினால் உணவுப்பாதுகாப்பு, பல வகையான பயிர்களின் விவசாயம், உயர்ந்த அளவு மகசூல் போன்றவைகளும் விவசாயத்துறை போட்டிமிக்கதாகவும், விவசாயத்தில் அதிக இழப்பீடுகள் இல்லாமல் இருக்கவும் உதவியிருக்கிறது. 2017-18இல் இந்தத்திட்டம், ரூ.13240 கோடி அளவில் செயல்படுத்தப் பட்டுள்ளது.

### தேசிய விவசாயச் சந்தை

தேசிய விவசாயச் சந்தை என்ற அமைப்பு நாட்டில் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் விவசாயப் பொருட்கள் வியாபார மண்டிகளை மின்னணு வலைதளம்சார் முறையின் மூலம் ஒரு தேசிய விவசாயச் சந்தையாக உருவாக்கி யுள்ளது. இந்த வலைதளத்தின் மூலம் விவசாயப் பொருள்கள் விற்பனை மற்றும் அதைச் சார்ந்த சேவைகள் அனைத்தும் ஓரிடத்தில் கிடைக்கும். பொதுவாக, விவசாயப் பொருட்கள் விற்பனையை மாநில அரசுகள் அவர்கள் இயற்றும் சட்டங்களின் மூலம் ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு விவசாயப் பொருட்கள் சந்தையென செயல்படுத்துகின்றன. இப்படி விவசாய சந்தை பல கூறுகளாக செயல்படுவதால் விவசாயப் பொருட்கள் ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு செல்வது தடைபட்டு விவசாயிகளிடமிருந்து கடைசியாக பயனீட்டாளர்களுக்கு செல்லும் வரையில் பல கட்டங்களாக விற்பனை செய்யப்பட்டு அதனால் விலையும் அதிகமாகக் கூடுகிறது. இந்தக் குறைகளை நீக்க, தேசிய விவசாயப் பொருட்கள் சந்தை வலைதளம் மூலமாக மாநில மற்றும் தேசிய அளவில் ஒரே சந்தையையும், ஒரே வகையான நெறிமுறைகளையும், பொருள்களை விற்பவர்கள், வாங்குபவர்கள் இருவருக்கும் ஒரே மாதிரியான தகவல்களை அளித்திட வகை செய்யப்பட்டது. ஒரு நேரத்தில் நாடு முழுவதிலும் வாங்கும் கொள்ளளவு விற்கும் கொள்ளவுக்கு ஏற்ப விலை நிர்ணயமும், பொருட்களை ஏலம் விடுவதில் வெளிப்படைத் தன்மையும், விவசாயிகள் தங்கள் பொருள்களை நாடெங் கிலும் யார் விரும்புகிறார்களோ அவர்களுக்கு விற்கவும், தங்கள் பொருள்களின் தரத்திற்கு ஏற்ற விலை வலைதளம் மூலமாகவே பண பரிவர்த்தனை செய்யப்படுவதால் தரமான பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது. இந்தத்திட்டம், 2017-18இல் ரூ.200 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது.

## மண் வள மேலாண்மை

நிலைத்து நிற்கும் விவசாய உற்பத்தி தேசிய இயக்கம் என்ற திட்டம் விவசாயத்தை மேலும் திறன் மிக்கதாகவும், நிலைத்து நிற்கும் வகையிலும் இயற்கை வளங்களை பாதுகாக்க பருவ நிலைக்கு ஏற்றதாகவும், மண் வள மேலாண்மையை நவீன மயமாக்கவும், நீர்வளத்தை மிகச் சிறந்த வகையில் பயன்படுத்தவும் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின்கீழ் மண் வள மேலாண்மை மிகவும் முக்கிய மானதாகும். இந்தத் திட்டத்தின்கீழ் இரசாயன உரங்களையும், இயற்கை உரங்களையும் ஒருங்கே பயன்படுத்தி விவசாய உற்பத்தித் திறனை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக ஆங்காங்கே மண் மற்றும் உரங்களை பரிசோதிக்கும் நிலையங்கள் அமைக்கப்படும். இதனால், மண் வளத்தை மேம்படுத்தவும், உரங்களின் தரங்களைக் கட்டுப்படுத்தவும் உரங்கள் கட்டுப்பாடு சட்டம் 1985இன் படி இயற்கை வளங்களை உபயோகிக்கவும், ஒவ்வொரு விவசாயிக்கும் ஏற்றவாறு பரிந் துரைகள் செய்யப்படும். மேலும், மண்வள ஆய்வுக் கூடங்களில் பணியாற்றுபவர்கள், விவசாயத் துறையில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் விவசாயிகளின் திறன் களை மேம்படுத்தவும் பயிற்சிகள், மாதிரிப்பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்படும். இந்தத்திட்டம் 2017-18இல் ரூ.2092 கோடி செலவில் செயல்படுத்தப் பட்டுள்ளது.



## பிரதம மந்திரி விவசாயப் பாசனத்திட்டம்

பிரதம மந்திரி விவசாயப் பாசனத்திட்டத்தின் முக்கிய நோக்கம், பாசனத்திட்டங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்தல், உறுதி செய்யப்பட்ட பாசன வசதி கொண்ட விவசாய நிலங்களின் அளவைக் கூட்டுவது, விவசாயத்திற்கு பயன்படும் நீரை சிக்கனமாக பயன்படுத்துவது, ஒவ்வொரு பயிருக்கும் ஏற்ற நுண் பாசன தொழில்நுட்பத்தை மேற் கொள்ளுவது, நிலத்தடி நீரை அதிகரிப்பது, கழிவு நீரை சுத்தப்படுத்தி அதை விவசாயத்திற்குப் பயன்படுத்துவது மற்றும் நுண் விவசாயத் திட்டங்களில் அதிக தனியார் முதலீடுகளை ஈர்ப்பது ஆகியவையாகும். 2017-18இல் இந்தத்திட்டம் ரூ.7375 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. பிரதமமந்திரி விவசாயப் பாசனத்திட்டம் ஏற்கனவே உள்ள நீர்வள அமைச்சகத்தின் துரிதமாக்கப்பட்ட பாசனப்பயன் திட்டம், மண்வளத்துறையின் ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு மேலாண்மைத்திட்டம், ஆறுகள் மேம்பாடு மற்றும் கங்கை புத்துணர்வுத்திட்டம் மற்றும் விவசாயம் மற்றும் கூட்டுறவுத் துறையின் விவசாய நீர் மேலாண்மைத்திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கி திருத்தியமைக்கப் பட்டதாகும்.

## பாரம்பரிய விவசாய மேம்பாட்டுத் திட்டம்

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு மண்ணும், நீரும் மிக அவசியம் என்பதால் அவற்றை வளப்படுத்த இந்தியஅரசு பாரம்பரிய விவசாய மேம்பாட்டுத் திட்டத்தை துவக்கியுள்ளது. இந்தியாவின் பாரம்பரிய இயற்கை உர விவசாயத்தை அரசு ஆதரித்து, மேம்படுத்துகிறது. கூட்டு விவசாய முறையில் குறைந்தது 50விவசாயிகளும், 50ஏக்கர் நிலப் பரப்பும் உள்ள இடங்களில் இயற்கை உர விவசாயம் ஊக்கு விக்கப்படுகிறது. அடுத்த மூன்று ஆண்டுகளில் இது போன்ற 10,000 கூட்டு விவசாயப் பகுதிகள் மூலம் விவசாயம் செய்யப்படக்கூடிய 5,00,000 ஹெக்டேர் நிலங்களில் இது செயல்படுத்தப்படும்.

2017-18ஆம் ஆண்டில் ரூ.350 கோடி செலவில் இந்தத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

### பிரதம மந்திரி ஜனதன் திட்டம்

பிரதம மந்திரி ஜனதன் திட்டம், 2014இல் துவக்கப்பட்டது. எல்லா மக்களுக்கும் வங்கி சேமிப்புக் கணக்குகள், கடன்கள், காப்பீடு திட்டங்கள், ஓய்வூதியங்கள் ஆகியவை கிடைக்கும் வண்ணம் இந்தத்திட்டம் அமைக்கப் பட்டுள்ளது. இந்தக் கணக்கை எந்த வங்கியிலும் எந்தக் கிளையிலும் துவக்கலாம். இந்தக் கணக்குகளில் குறைந்தபட்ச நிலுவைத் தொகை தேவையில்லை. இந்தத்திட்டத்தின் முக்கிய நோக்கம், நிதிச்சேவைகள் எளிதாக பெறமுடியும் என்ற நிலைமையிலும் குறைந்த செலவிலும் இருக்கவேண்டும் என்பது. இந்தத் திட்டம் வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கும், ஏற்கனவே வங்கிக்கணக்கு இல்லாதவர் களுக்கும் பயனளிக்கும். இந்தத்திட்டம் துவக்கிய 18 மாதங்களில் 21 கோடிகளுக்கு மேற்பட்ட வங்கிக்கணக்குகள் துவக்கப்பட்டுள்ளன.

### தீனதயாள் அந்தியோதயா திட்டம்

2011இல் இந்திய அரசு, தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கத்திட்டத்தை ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் மூலம் துவக்கியது. 2015இல் இந்தத் திட்டம், தீன்தயாள் அந்தியோதயா திட்டம் என்று பெயர் மாற்றப்பட்டது. ஓரளவுக்கு உலக வங்கியின் உதவியோடு துவக்கப்பட்ட இந்தத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமப்புற ஏழை மக்களுக்கு சிறந்த அமைப்புகளை உருவாக்கி, நிலைத்து நிற்கும் வாழ்வாதாரத் திட்டங்கள் மூலம் அவர்களின் குடும்ப வருமானத்தைப் பெருக்குவதும், அனைத்து நிதிசார் சேவைகளும் அவர்களுக்குக் கிடைப்பதுமாகும். தன்னார்வத் தொண்டு நிறு வனங்கள் மூலமாகவும், கூட்டு அமைப்புகள் மூலமும் செயல் படுத்தப்படும் இந்தத்திட்டம், 600 மாவட்டங்களில் உள்ள 6000 ஊராட்சி ஒன்றியங்கள் மூலமும் 2.5இலட்சம் கிராமப் பஞ் சாயத்துக்கள் மூலமும், 6,00,000 கிராமங்கள் மூலமாகவும் செயல்படுத்தப்பட உள்ளது. அங்கு வாழும் ஏழை மக்களுக்கு அடுத்த 8 முதல் 10 ஆண்டுகளுக்கு வாழ்வாதாரங்கள் அதிகரிக்கப் படும். 2017-18இல் இந்தத்திட்டம் ரூ.4814 கோடியில் செயல்படுத்தப் பட்டது. இது அல்லாமல், ஏழை மக்களின் உரிமைகள் நிறைவு பெறவும், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய எல்லா பொதுச் சேவைகளும் கிடைக்கச் செய்யவும், அதிகாரமளிக்கப்பட்டு அனைத்து சமூக நிலைமைகளிலும் வளம் பெறவும் திட்டங்கள் செயல்படுத்தப்படும். ஏழை மக்களின் சுய திறமைகளை பயன்படுத்தி அவர்களுக்கு தகவல், கல்வி, செய்திறமை, கருவிகள், நிதி மற்றும் கூட்டமைப்பை உண்டாக்கி வலுப்படுத்தி மேம்பட்டு வரும் பொருளாதாரத்தில் பங்கு அளிக்கப்படும்.

### தேசிய கிராம தன்னாட்சி இயக்கம்

தேசிய கிராம தன்னாட்சி இயக்கம், பஞ்சாயத்துராஜ் முறைகளை வலுப்படுத்தி அதில் இருக்கும் குறைபாடுகளை நீக்க முயல்கிறது. இந்தத்திட்டத்தின் மூலம் கிராமப் பஞ்சாயத்துக்கள் மற்றும் கிராமசபைகளின் திறமைகளும், செயல் திறமைகளும் வலுவாக்கப்பட்டு, இந்த அமைப்புகளில் ஜனநாயக முறையிலான பங்கேற்கும் முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டு, அவர்களுடைய திறமைகள் வலுவாக்கப்பட்டு, அரசின் மேல் மட்டங்களிலிருந்து அதிகாரங் களும், பொறுப்புக்களும், அரசியல் அமைப்புச்சட்டம் மற்றும் பஞ்சாயத்துராஜ் சட்டங்களும் பரிந்துரைத்துள்ளதுபடி அளிக்கப்படும். இது அல்லாமல், கிராம சபைகள் அடிப்படை நிலையில் மக்களின் உணர்வுப் பூர்வமான எண்ணங்களை வெளிப்படையாக வெளிப்படுத்தும் வண்ணமும் அந்த சபைகள் தங்களுக்குள்ள பணிகளை செயல்படுத்துவதற்கான உறுதி அளிக்கும் வகையிலும், பஞ் சாயத்து அமைப்புகள் இல்லாத இடங்களிலும், ஜனநாயக உள்ளாட்சி முறைகளை அமைக்கும் வகையிலும் வலுப்படுத்தப்படும். இந்த திட்டம், ரூ.655 கோடி செலவில் வலுப்படுத்தப் பட்டுள்ளது.

### அந்தியோதயா இயக்கம்

அந்தியோதயா இயக்கம் மூலம் அரசின் எல்லா செயல்திட்டங்களும் ஒருங் கிணைக்கப்பட்டு மக்களின் வாழ்வாதாரங்கள் மாற்றியமைக் கப்பட்டுள்ளனவா என்று ஆராயப் படுகிறது. அப்படி எல்லா திட்டங்களையும் ஒருங்கிணைத்துப் பார்ப்பதன் மூலமாகத்தான் ஏழ்மையின் எல்லா அம்சங் களையும் நாம் எதிர்கொள்ள முடியும். மாநில அரசுகளின்



கூட்டு முயற்சியால் செயல்படுத்தப்படும் இந்தத்திட்டத்தின் மூலம் ஏழை மக்களுக்கு பலவகையான வாழ்வாதாரத் திட்டங்களைச் செயல்படுத்துவதாகும். இந்தத்திட்டத்தின் மூலம், ஏழ்மையின் எல்லா அம்சங்களையும் எதிர்கொள்ளும் வண்ணம் அனைத்து வளங்களையும் நிதி மற்றும் மனித வளங்கள் ஒருங்கிணைத்து மாற்றங்களைக் கொண்டு வருவதாகும். மனிதவள மேம்பாடு, சமூகமேம்பாடு, சுற்றுச்சூழல் மேம்பாடு, பொருளாதார மேம்பாடு ஆகியவற்றை முழுமையாக உருவாக்கி, 2022க்குள் ஏழ்மையற்ற இந்தியாவை உருவாக்குவது இந்தத் திட்டத்தின் கனவாகும். இந்தத்திட்டம், 5,000 ஊரகப்பகுதிகளைக் கொண்ட 50,000 கிராம பஞ்சாயத்துக்கள் மூலம் குறிப்பிட்ட வாழ்வாதாரத் திட்டங்களைச் செயல்படுத்தி இந்தியாவிலிருந்து ஏழ்மையை அகற்றுவதாகும். 2017-18இல் இந்தத் திட்டம் ரூ.48,000 கோடியில் செயல்படுத்தப்பட்டது.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித்திட்டம்**

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச்சட்டம் 2005இன்படி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் துவக்கப்பட்டு, பிறகு மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் என்று பெயர் மாற்றப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம், மக்களின் வேலை செய்யும் உரிமை உறுதியாக்கப்பட்டுள்ளது. ஒரு நிதியாண்டில், ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிலுள்ள வேலை செய்யத் தகுதியுள்ளவர்களுக்கு குறைந்தபட்சம் 100 நாட்கள் வேலை உறுதி அளிப்பதன் மூலம் அவர்களுடைய வாழ்வாதாரப் பாதுகாப்பு உயர்த்தப்படுகிறது. இந்தத் திட்டம், கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு, மழைநீர் சேமிப்பு, வறட்சி மற்றும் வெள்ள நிவாரணத் திட்டங்கள் போன்ற உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் திட்டங்களில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் ஆண்டொன்றிற்கு சுமார் 1.5 கோடி வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2017-18ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் ரூ.48,000 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது. இந்த செயல்பாட்டுக்கள் மூலமாக, 2 கோடிக்கும் மேலான புதிய சொத்துக்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

**முடிவாக**

ஊரக வளர்ச்சி என்பது, கிராமப்புற மக்களுக்கு பொருளாதார மேம்பாடு வழங்குவது மட்டுமல்லாமல், சமுதாய மாற்றங்களையும் ஏற்படுத்தவேண்டும். கிராமப்புற மக்களுக்கு பொருளாதார மேம்பாட்டு வாய்ப்புக்கள் அளிக்க துடிப்பான விவசாயத்துறையும், கிராமப்புற மேம்பாட்டுத் திட்டங்களில் அம்மக்களுக்கு அதிகமான பங்களிப்பும், சந்தைகளில் அவர்களுக்கு அதிகமான இணைப்பும் இருக்கவேண்டும். கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், கிராமப்புற, நகர்ப்புற மக்களுக்கு இடையே உள்ள இடைவெளியை நிவர்த்தி செய்யவும் இந்திய அரசு பலமுனைத் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டங்கள் மூலம், 10 ஆண்டுகளுக்கு முன்பு கிராமப்புற மக்கள் இருந்த நிலைமை தற்போது மிகவும் உயர்ந்துள்ளது.

---

**- டாக்டர். எம்.சின்னதுரை,** இயக்குநர், விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சிசார் ஆய்வு மையம். தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் - 641003.

**- டாக்டர். கே.ஆர்.அஷோக்,** பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், விவசாயம் மற்றும் ஊரக மேலாண்மைத்துறை, விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சிசார் ஆய்வு மையம். தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641003.

# சென்னையில் நீடித்த போக்குவரத்து புதியதொரு முன்னுதாரணத்தை நோக்கி

- சாய்ரத்னா சைதன்யா குருகுபெல்லி

இந்திய நகரங்களில் நகர் மயமாதல் தவிர்க்க இயலாதது. உலகமக்கள் தொகை நிலைமை பற்றிய ஐக்கிய நாடுகளின் ஆய்வு (2007) இந்தியாவின் 40% மக்கள் 2030ஆம் ஆண்டு வாக்கில் நகரங்களில்தான் வசிப்பார்கள் என்று கணக்கிட்டுள்ளது. நகர்ப்புறமக்கள் தொகைப் பெருக்கத்தில் பெருமளவு நம் நாட்டில் உள்ள பெருநகரங்களில் எதிரொலிக்கும். நகர்புறங்களில் மேற்கொள்ளப்படும் பயணங்களில் பத்தில் ஒருபங்கிற்கும் கீழாக தனிநபர் பயன்படுத்தும் கார்கள் உள்ளன. மூன்றில் இரண்டு பங்கு நீடித்துவரக் கூடிய பயண முறைகளாக - நடை, மிதிவன்டி, பொதுப் போக்குவரத்து ஆகியன உள்ளன. இந்திய நகரங்கள் காகிதத்தில் நன்றாகத் தெரிகின்றன. நடைமுறையில் அவை வேறுபட்டுக் காணப் படுகின்றன.

இந்திய நகரங்களில் பொதுப்போக்குவரத்து இடத்துக்கு இடம் வித்தியாசப்படுகிறது. தில்லி, மும்பை சென்னை போன்ற பெருநகரங்களில் நகரப் பேருந்துகள், நகரப்புறத் தொடர் வண்டிகள், மெட்ரோ ரயில் போன்ற பலபோக்குவரத்து வசதிகள் உள்ளன. சிறு நகரங்களில் பொதுப்போக்குவரத்து மிகக் குறைவான நிலையிலோ அல்லது அறவே இல்லாத நிலைலோ உள்ளன. ஷேர் ஆட்டோக்கள் போன்ற வசதியும், பாதுகாப்பு அற்ற சேவைகளுமே இங்கு காணப்படுகின்றன. நடந்து செல்வது, மிதிவண்டியில் செல்வது போன்றவை அதிகம் இல்லை. மாறாக, தனிநபர் சொந்த வாகனங்களின் பயன்பாடு ஒவ்வொரு பத்தாண்டிற்கும் இரண்டு மடங்காக அதிகரித்துக் கொண்டே போகிறது. மக்கள் தொகைப் பெருக்கத்தின் வேகத்தை விடவும் இது அதிகம். இதன் விளைவாக, நம்முடைய நகரங்கள் போக்குவரத்து நெரிசலாலும், சுற்றுச்சூழல் மாசினாலும் திக்கு முக்காடி வருகின்றன.

நகரங்களில் போக்கு வரத்தை எளிதாக்குவதற்காக அரசாங்கம் சாலைகளை விரிவாக்கியும், பாலங்களைக் கட்டியும் வருகின்றது. இதனால் நெரிசல் குறைந்த போதிலும் அதுவெகு நாள்களுக்கு நீடிப்பதில்லை. சாலையை விரிவு படுத்துவது வேகமாக செல்வதற்கு தொடக்கத்தில் வழிவகுக்கிறது. இந்தவசதி இன்னும் அதிகமான மக்களை சொந்த வாகனங்களில் செல்வதற்குத் தூண்டுகிறது. அதனால் விரிவானசாலை மீண்டும் பழைய நெரிசல் நிலைக்கே திரும்பி விடுகிறது. உண்மையில் இதனால் போக்குவரத்து நெரிசலில் மேலும் அதிக எண்ணிக்கையிலான வாகனங்கள் சிக்குகின்றன.


சென்னைப் பெருநகரத்தின் மக்கள் தொகை ஐக்கியநாடுகளின் வளர்ச்சி வாய்ப்புகள் கணக்கின்படி 2015ஆம் ஆண்டில் 99 இலட்சம். பத்து ஆண்டுகளில் புறநகரில் ஏற்பட்டிருக்கும் மக்கள் தொகை வளர்ச்சி 27%. சென்னை நகரத்தின் மையப்பகுதியில்



பணி நேரங்களில் சென்னை பழைய மகாபலிபுரம் சாலையில் எப்போதும் காணக்கூடிய போக்குவரத்துக் காட்சி

மக்கள் தொகை வலர்ச்சி 8%. புறநகர்ப்பகுதிகளில் மக்கள் தொகை அதிகரிப்பதால் சென்னையில் மக்கள் தொகை பெருகிவழிகிறது எனலாம். இதற்குக் காரணம் கல்வி, வேலை வாய்ப்பு நிறுவனங்கள் இங்கு அதிகமாக இருப்பதுதான்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் இரண்டாவது பெருந்திட்டத்தின் படிபார்த்தால், சென்னைப் பெருநகரப் பகுதியில் 2026 ஆம் ஆண்டில் மக்கல் தொகை 126 இலட்சமாக உயர்ந்திருக்கும். நகர்மயமாதல் அதிகரிப்பினால் நகரில் போக்குவரத்து ஒரு கடுமையான பிரச்சினையாகத் தொடர்கிறது. சென்னையில் தற்போது மூன்றில் இரண்டு பங்கு




**சென்னையில் போக்குவரத்து வகைகளின் விகிதம்**
**Chennai's travel mode share**

போக்குவரத்து நடை, மிதிவண்டி, பொதுப் போக்குவரத்து ஆகியவற்றின் மூலம் நடைபெற்று வருகிறது. ஆனால் நகரத்தின் போக்குவரத்து இதனை பிரதிபலிப்பதாக இல்லை. சாலைகளில் தனிநபர் வாகனங்களே விஞ்சி நிற்கின்றன.

தெற்கு இரயில்வே இயக்கி வரும் மின்சார இரயில்கள் 10 இலட்சம் பேர் புறநகர்ப் பகுதிகளில் இருந்து தினமும் பயணம் மேற்கொள் வதற்கு உதவுகின்றன. கூடுதலாக 19 கிலோ மீட்டர் நீள பறக்கும் இரயிலும் தெற்கு ரயில்வேயினால் இயக்கப்பட்டு வருகிறது. இந்தப் பாதை நகரத்தின் கிழக்கு பகுதி ஓரமாக செல்கிறது. நாள்தோறும் இதில் 80 ஆயிரம் பயணிகள் பயணிக்கின்றனர். நகரத்திற்கு சேவை புரியும் இன்னொரு பொதுப்போக்குவரத்து சென்னை மெட்ரோவாகும். இது 2015 முதல் கோயம்பேடு ஆலந்தூர் இடையே இது செயல்படுகிறது. மெட்ரோ இரயிலின் முதலாவது கட்டம் 45 கிலோ மீட்டர் நீளத்திற்கு இருவழிப் பாதையைக் கொண்டுள்ளது. இதில் ஏறத்தாழ 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு இரயில் சேவை இருக்கிறது. இந்தப் பாதையில் 32 இரயில் நிலையங்கள் இருக்கின்றன. இரண்டாவது கட்டத்தில் இன்னும் 100 கிலோ மீட்டர் தூரத்திற்கு மெட்ரோ இரயிலை நீடிக்கும் திட்டம் உள்ளது.

புறநகர் ரயில்கள், MRTS, மெட்ரோ இரயில் ஆகியவை விரைவாக செல்வதற்கு உதவுகின்றன. சென்னையில் பெரும் பகுதி பொதுப்போக்கு வரத்து பெருநகரப் போக்கு வரத்துக்கழகப் பேருந்துகள் மூலமாகவே நடைபெற்று வருகிறது. பேருந்துகள் தினமும் 50 இலட்சம் பயணிகளை ஏற்றிச் செல்கின்றன. ஒரு பேருந்தில் 1300 பயணிகள் ஒருநாளைக்கு பயணம் செய்கின்றனர். 4000 பேருந்துகள் உள்ளன. இவை 3900 சதுர கிலோ மீட்டர் பகுதிக்கு சேவை செய்கின்றன.

சென்னை போன்ற நகரங்களும், இந்தியாவின் பிறபெருநகரங்களும் ஓரிடத்தி லிருந்து இன்னொரு இடத்திற்கு தனது மக்களை கொண்டு சேர்ப்பதில்தான் சவால்களை சந்தித்து வருகின்றன. இதனை சமாளிப்பதற்கு நகர்ப்புற போக்கு வரத்து திட்டமிடலில் முறையான கவனம் செலுத்தப்பட வேண்டும். சென்னையில் உள்ள அனைத்து வகையான பொதுப் போக்கு வரத்துகளையும் ஒருங்கிணைப்பது, மாறி மாறி விரைவாகப் பயணிக்க உதவும். பேருந்திற்கும், இரயிலுக்கும் பொதுவான கட்டணத்தை செலுத்தி ஒரே அட்டையைக் கொண்டே பயணிப்பது பற்றி MTCயும், Metro இரயிலும் ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. பொதுவான கட்டணம் என்பதைத் தவிரவும் மெட்ரோ இரயில் நிலையங்கள், புறநகர் இரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைப்பது பற்றி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆய்வு செய்து வருகிறது.

சென்னை தனது மக்களுக்கு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை சீர்குலைக்காமல் பாதுகாப்பான, திறமையான, நம்பகமான போக்குவரத்துத் தீர்வுகளை வழங்குவதில் சவால்களை சந்தித்து வருகிறது. இதற்கான பொறுப்பு பல முகமைகளிடம் இப்போது வந்து சேர்ந்திருக்கிறது. இத்தகைய சவால்களுக்குத் தீர்வுகாணும் நோக்கத்தோடு ஒருங்கிணைந்த சென்னைப் பெருநகர போக்குவரத்து ஆணையம் (Chennai Unified Metropolitan Transport Authority -

CUMTA) நவம்பர் 2010இல் உருவாக்கப்பட்டது. சென்னை நகரத்தின் பல்வேறு போக்குவரத்து முறைகளையும் திட்டமிட்டு, செயல்படுத்தி, கண்காணித்து வரும் ஒற்றை அமைப்பாக இருந்து செயல்படுவதற்காக, இதற்கு புத்துயிர் அளிக்க வேண்டியது அவசியமாகும்.

மாநகர இரயில் போக்குவரத்து நகரம் முழுவதையும், புறநகர்ப் பகுதிகளையும் தழுவியதாக இல்லை. பேருந்து சேவைகளின் தரம் நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வருகிறது. பேருந்துகளில் கூட்ட நெரிசலும், சாலைகளில் வாகன நெரிசலால் தாமதமும் நேர்கின்றன.




**புனேயில் 'வானவில்' பேருந்து விரைவுப்போக்குவரத்து**

விரைவான பேருந்து போக்குவரத்து சேவை வழங்குவதற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்கு ஒரு ஆலோசகரை தமிழக அரசு நியமித்துள்ளது. இந்த திட்டத்தின் படி பேருந்துகள் மற்ற வாகனங்களுடன் கலந்து செல்லாமல் சாலையின் மத்தியில் தனி வழியில் விரைவாக பயணிக்கும். விரைவான பேருந்து போக்குவரத்து சேவை (Bus Rapid Transit System - BRTS) யுடன், இரண்டாம் கட்ட மெட்ரோ இரயிலும் வரும் போது சென்னையில் பொதுப்போக்குவரத்து கணிசமாக மேம்படும்.

எனினும், இந்த விரைவுப் பாதையை பயன்படுத்துவதில் இன்னமும் பிரச்சினைகள் உள்ளன. சிற்றுந்து வசதிகள் குடியிருப்புப் பகுதிகளில் இருந்து முக்கியமான பேருந்து/இரயில் நிறுத்தங்களுக்கு மக்கள் வருவதற்கு உதவுகிறது. நடந்து செல்வதையும், மிதிவண்டிப் பயணங்களையும் நகரத்தில் அதிகரிக்கச் செய்து அருகில் உள்ள பொதுப்போக்குவரத்தை நாட உதவ வேண்டும். பல சாலைகளில் நடைபாதை வசதிகள் பாதுகாப்பானதாக இல்லை. இந்த நகரம் தான் தானியங்கி வாகனங்கள் சாராக போக்குவரத்துக் கொள்கையை பாராட்டத்தக்க விதத்தில் இந்தியாவிலேயே முதன் முதலாக துணிவுடன் வெளிக் கொண்டு வந்தது.

இந்தக்கொள்கையின் படி, போக்குவரத்திற்கான நிதியில் குறைந்தபட்சம் 60 விழுக்காடு நடைபாதைகளையும், மிதிவண்டிப் பாதைகளையும் உருவாக்குவதற்காக செலவிடப்படவேண்டும். பல ஆண்டு கால ஆய்விற்குப் பிறகு 50 கிலோமீட்டர் நீளத்திற்கான, நடந்து செல்லும் வசதி கொண்டுள்ள பாதைகளை கண்டறிந்த பிறகு, இரண்டாம் கட்டமாக கூடுதலாக 50 கிலோ மீட்டர் பாதையை வடிவமைப்பதற்கு முன்முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

இந்தியாவிலும், உலக நாடுகள் பலவற்றிலும் - சண்டிகரிலிருந்து நைரோபி வரை சென்னையின் போக்குவரத்துக் கொள்கை போற்றப்படுகிறது. இதற்காக சென்னை மாநகராட்சிக்கு 2015ஆம் ஆண்டின் நீடித்து நிலவல் விருது (2015 Sustainia Award), டானிஷ் நாட்டு சிந்தனையாளர் அமைப்பினால் வழங்கப்பட்டுள்ளது

நன்றாக பிணைக்கப் பட்டுள்ள ஒருங்கிணைந்த நகரம் என்பது நன்கு சிந்தித்து திட்டமிடுதலின் மூலமாக மட்டுமே உருவாகும். தற்போது மக்கள் எப்படி பயணித்து வருகிறார்கள் என்பதை அறிந்து கொள்வதிலிருந்தே இது தொடங்குகிறது. தற்போதிருக்கும் பொதுப் போக்குவரத்தை சீரமைத்து மாற்றங்களைக் கொண்டுவந்து பயணிகளை ஈர்க்கவேண்டும். அதே நேரத்தில், போக்குவரத்து வசதிகளை எல்ல இடங்களுக்கும் விரிவாக்குவதும்; நடை, மிதிவண்டி, பொதுப்போக்குவரத்து ஆகிய நீடித்துவரக்கூடிய வசதிகளை உற்சாகப்படுத்துவதும் தனியார் வாகனங்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்தும்.

---

**-சாய்ரத்னா சைதன்யா குருகுபெல்லி**, ஆராய்ச்சி இணையர், போக்குவரத்து திட்டமிடல், நகர்ப்புற பணிகள் நிறுவனம், சென்னை. ●

# குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் - ஓர் அறிமுகம்

- வே. அமுதவல்லி

**'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்.**
**எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்**
**இளைப்பில்லை காண் என்று கும்மியடி'**

என்று பாடி பாரதியார் பெருமிதம் கொள்கிறார்.

குடும்பத்தில் கணவரையும், பிள்ளைகளையும், கணவரைச் சார்ந்த உறவுகளையும் அரவணைத்து செம்மையாக குடும்பத்தை வழிநடத்தி வந்த பெண்களில் பலர் இன்று கல்வியாலும், திறமையாலும் முன்னேறி பல்வேறு அலுவலகங்களில் பல நிலைகளில் பணிபுரிந்து வருகின்றனர். ஆனாலும் அவர்கள் வீட்டிலும் பணிபுரியும் இடங்களிலும், பொது இடங்களிலும் பல விதமான இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர். இவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண தமிழக அரசு என்ன செய்கிறது என்பதைப் பொது மக்களுக்கு எடுத்து கூறுவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

குடும்பப் பெண்கள் மற்றும் பணி புரியும் பெண்களுக்கான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் சமூக நலத்துறை மூலம் பெண் குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் பல நலத்திட்டங்களை தமிழக அரசு செயல் படுத்தி வருகிறது.

தொண்ணூறுகளில் சேலம் மற்றும் மதுரை மாவட்டங்களில் நடைபெற்ற பெண் சிசுக் கொலையைத் தடுப்பதற்காக துவங்கப்பட்ட தொட்டில் குழந்தைத் திட்டம் முதல், இன்று பட்டதாரிப் பெண்களுக்கு எட்டு கிராம் தங்கமும், ஐம்பதாயிரம் ரூபாய் பணமும் வழங்க கூடிய திருமண நிதி உதவித் திட்டம் வரை பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசின் சமூக நலத்துறை செயல்படுத்தி வருகிறது.

இது போன்ற நலத்திட்டங்கள் மட்டுமின்றி சமூகநீதியை நிலை நாட்டும் வகையில், வரதட்சணை தடுப்புச் சட்டம், குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம், குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம், பெற்றோர் மற்றும் முதியோர் பராமரிப்புச் சட்டம், பணிபுரியும் இடத்தில் பெண்களுக்கான பாலியல் தொல்லை தடுப்புச்சட்டம் ஆகியவற்றையும் இத்துறை செயல்படுத்திவருகிறது. தமிழ்நாடு அரசு சமூக நலத்துறை மூலம் செயல்படுத்தி வரும் பல சட்டங்கள் இருந்தபோதிலும், இந்தக் கட்டுரை மூலம் குடும்ப வன்முறை தடுப்புச்சட்டம் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசியலமைப்பு சட்டம் விதி 21 மக்கள் வாழ்வுரிமைக்கும், தனி மனித சுதந்திரத்திற்கும், கண்ணியமாக வாழ்வதற்கும் உத்திரவாதம் அளிக்கிறது. பெண்களின் மீது ஏவப்படும் வன்முறை, அவர்களின் வாழ்வுரிமை மற்றும் கண்ணியமான வாழ்வுக்கான உரிமை மீறலாகக் கருதப்படவேண்டும் என்ற போதிலும், தனி மனித குடும்ப வன்முறைகளைத் தடுப்பது மிகவும் கடினமான செயல் ஆகும். தனி மனித செயல்பாடுகள் அல்லது வன்முறைச் செயல் என்ன என்பதை சட்டம் தெளிவாக விளக்கினால் மட்டுமே இத்தகைய வன்முறைகளைத் தடுக்கமுடியும்.

ஒவ்வொரு குடும்பத்திலும் பெண்களே ஆணி வேராகவும், விழுதுகளாகவும் குடும்பத்தைத் தாங்குபவர்களாகவும் இருக்கின்றனர், இத்தகைய பெண்களுக்கு ஏற்படும் குடும்ப வன்முறையைத் தடுப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

குடும்ப அமைப்பில் பெண்களுக்கு அவர்களின் இரத்த பந்தங்களாலும், திருமண உறவுகளாலும் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாவதைத் தடுக்கும் பொருட்டு, அந்தத் துன்பங்களில் இருந்து பெண்களையும், குழந்தை களையும் காக்கவும், அவர்களுக்கு தேவையான நிவாரண உதவி களை உறுதி செய்யவும் குடும்ப வன்முறை தடுப்புச்சட்டம் 2005ஆம் ஆண்டிலும், இதற்கான விதிகள் 2006ஆம் ஆண்டிலும் தமிழ்நாடு அரசால் உருவாக்கப் பட்டன. இந்தச் சட்டம் சமூக நலத்துறை மூலம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இந்தச் சட்டத்தின் கீழ் வன்முறை என்றால் என்ன என்பதை முதலில் பார்ப்போம்.

குடும்ப வன்முறை என்பது வீட்டில் வசிக்கும் பெண்களுக்கு உடல் ரீதியாகவோ, வார்த்தை ரீதியாகவோ பொருளாதார ரீதியாகவோ, பாலியல் ரீதியாகவோ சங்கடத்தை ஏற்படுத்தக்கூடிய

ஒவ்வொரு செயலுமே வன்முறை என்று இந்த சட்டம் விளக்குகிறது.

- உடலில் காயம் ஏற்படுத்தும் விதத்தில் செய்யப்படும் செயல்கள், உடல் ரீதியான வன்முறை ஆகும்.
- பாலியல் ரீதியாக அவமானப் படுத்துதல், தரக்குறைவாக நடத்துதல், கட்டாய பாலியல் உறவு கொள்ளுதல், ஆபாசப் படங்களைப் பார்க்கத் தூண்டுதல் போன்றவை பாலியல் ரீதியான வன்முறை என்று வகைப் படுத்தலாம்.
- மனதைப் புண்படுத்தும் வகையிலான வார்த்தைகளைப் பேசுவதும் வன்முறை என்ற வகையிலேயே சேர்க்கப்படும்.
- சுயமான சம்பாத்தியம் இல்லாத பெண்ணைப் பராமரிக்க மறுத்தல், மதிப்பு மிக்க அந்தப் பெண்ணின் உடைமைகளைப் பறித்துக் கொள்ளுதல், அடகுவைத்தல், அல்லது விற்றுவிடுதல் ஆகியவை பொருளாதார வன்முறை என்ற வகையில் சேர்க்கப்படும்.

சமுதாயத்தில் வன்முறை இல்லாத குடும்பங்களில் பெண்கள் வசிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் பல சிறப்பு அம்சங்களை உள்ளடக்கிய சட்டம் "குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம்" ஆகும். பெண்களுக்கு, அவர்கள் வசிக்கும் வீட்டில் ஏற்படும் வன்முறையைத் தடுப்பதற்காக இயற்றப்பட்ட இந்தச் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பாதுகாப்பு அலுவலர், மற்றும் சென்னை மாவட்டத்திற்கு மட்டும் இரண்டு பாதுகாப்பு அலுவலர்கள் என மொத்தம் 33 பாதுகாப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு உள்ளார்கள். இந்தப் பாதுகாப்பு அலுவலர்கள் ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் சமூக நலத்துறை அலுவலரின் கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள். இந்த அதிகாரிகளுக்கு வன்முறையாளர் மீது நேரடியாக வழக்கு தொடரவும் குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்கு நடத்தவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## இந்த சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- இந்த சட்டத்தின் கீழ் பெண்கள் மட்டுமே மனு செய்யமுடியும்.
- பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவிடவும், நீதித்துறை நடுவர்களுக்கு வழக்கு விசாரணையில் உதவி செய்யவும் பாதுகாப்பு அலுவலர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.
- மனுதாரருக்கும், எதிர் மனுதாரருக்கும் இடையே வேறு குற்றவியல் அல்லது சிவில் நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் இருந்தாலும் இந்தச் சட்டத்தின் கீழ் நிவாரணம் பெற முடியும்.
- நீதிமன்றத்தில் மனுக்கள் பெறப்பட்ட 60 நாட்களுக்குள் வழக்கினை முடிக்க வேண்டும்.
- பாதிக்கப்பட்ட நபர் கோரும் பட்சத்தில், விசாரணையை இரகசியமாக நடத்தவும் நீதிபதி ஆணையிட முடியும்.
- பாதிக்கப்பட்ட நபருக்கு நீதிமன்றத்தில் வாதிட அவரால் வழக்கறிஞரை நியமனம் செய்ய முடியாத சூழ்நிலையில், பாதுகாப்பு அலுவலர் மூலம், அல்லது சட்ட உதவி மையம் மூலமாக இலவசமாக வழக்கறிஞரை நியமனம் செய்து கொள்ளமுடியும். இதற்கு பாதுகாப்பு அலுவலர்கள் உதவி செய்வார்கள்.

## குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழ் பெண்களுக்குக் கிடைக்கக்கூடிய நிவாரணங்கள்

இந்தச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் பாதிக்கப்பட்ட பெண்கள் பல நிவாரணங்களைப் பெறமுடியும்.

பிரிவு 18 இன் கீழ் பாதுகாப்பு ஆணையை பெறலாம். அதாவது வேலைக்கு செல்லும் பெண்கள் பணியிடத்திற்குச் செல்லும் பொழுது வழியிலோ, அல்லது பணி இடத்திலோ, அல்லது தொலைபேசி மூலமோ தொந்தரவு செய்தல், மற்றும் யாரையாவது பார்க்கக்கூறியோ அல்லது பார்க்கக்கூடாது என்றோ கட்டாயப் படுத்துதல் ஆகியவற்றில் இருந்து பாதுகாப்பு ஆணை பெறலாம்.

பிரிவு 19இன் கீழ் வீட்டை விட்டு பெண் விரட்டி அடிக்கப்படும் பட்சத்தில், அதே வீட்டிலேயே தொடர்ந்து வசிக்கும் உரிமை அல்லது வாடகை வீட்டில் தங்க ஏற்பாடு செய்யும் பட்சத்தில் அந்த வாடகைத் தொகையைக் கோரிப் பெறும் உரிமை ஆகிய ஆணை களைப் பெறமுடியும்.

பிரிவு 20இன் கீழ், தனது சுய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், குழந்தைகளின் உணவு, உடை, படிப்பு ஆகிய தேவைகளுக்குமான தொகையைப் பெறமுடியும். குழந்தை களை மனைவியிடம் விடுவதற்கு கணவர் மறுக்கும் போது, பிரிவு 21இன் கீழ் தன் பாதுகாப்பில் குழந்தைகளை வளர்க்கும் உரிமையைப் பெறமுடியும்.

பிரிவு 22இன் கீழ் பாதிக்கப் பட்ட பெண் தன்னுடைய கணவனின் சம்பாத்தியத்தில் ஒரு பகுதியை இழப்பீடாகப் பெறவும் சட்டத்தில் வழிவகை செய்யப் பட்டுள்ளது.

### எங்கு புகார் அளிக்கலாம்?

பாதிக்கப்பட்ட பெண்கள், ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் இருக்கும் மாவட்ட சமூக நல அலுவலரின் அலுவலகத்தில் உள்ள பாதுகாப்பு அலுவலரிடம் நேரடியாக புகார் மனு அளிக்கலாம். இது தவிர, அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும், சேவை அளிக்கும் நிறுவனத்தின் மூலம் நீதிமன்றத்தில் நேரடியாகவும் புகார் மனுக்களை அளிக்கமுடியும். மாநில மகளிர் ஆணையம், முதலமைச்சரின் தனிப்பிரிவு, மக்கள் குறை தீர்க்கும் முகாம்கள், ஆகியவற்றின் மூலமாகவும் பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் மனுக்களை அளிக்கமுடியும்.

### யார் மீது புகார் அளிக்கலாம்?

குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள், தனது கணவர், மற்றும் கணவரைச் சார்ந்த உறவினர்கள் மீதும், திருமணமாகாத பெண்ணாக இருக்கும் பட்சத்தில் அவருடைய இரத்தத் தொடர்புடைய உறவுகள் மீதும் புகார் அளிக்கமுடியும். இந்தச் சட்டம் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதிய பாதுகாப்பை வழங்குவதுடன் சில நிவாரணங்களையும் வழங்க வழிவகை செய்துள்ளது.

### சேவை அமைப்பு என்றால் என்ன?

ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக செயல்படும் சிறப்பான தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் சேவை அமைப்பினர்களாக அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நடத்தும் தொண்டு நிறுவனங்களில் பாதுகாப்பு இல்லங்களும் செயல்பட்டு வருகின்றன. இவர்கள் மூலம் பாதிக்கப்பட்ட பெண் களுக்கு சட்ட உதவி, மருத்துவ உதவி, மற்றும் அவர்களுக்குத் தேவைப்படும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### நீதி மன்ற ஆணைகளின் செயல்பாடு

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் மனுக்கள் மீதான ஆணைகள், எதிர் தரப்பில்லா ஆணை, இடைக்கால ஆணை, இறுதிஆணை என்று மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. இந்த ஆணைகளை, சேவை நிறுவனத்தின் உதவி, மற்றும் உள்ளூர் காவல் நிலையங்களின் துணையுடன் நடைமுறைபடுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பாதுகாப்பு அலுவலர்கள் மேற்கொள்வார்கள். நீதிமன்ற ஆணையை மீறும் எதிர் மனுதாரர்களுக்கு நீதி மன்றத்தால் தண்டனை வழங்கப்படும் நிகழ்வுகளும் இந்த சட்டத்தின் கீழ் அரங்கேறி உள்ளன. பாதிக்கப்பட்ட பெண்கள் பாதுகாப் பாகத் தங்குவதற்கு 33 உறை விடங்கள் தமிழகம் எங்கும் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகிறது.

இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் மட்டுமே பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. பெண்களின் பாது காப்பு மற்றும் உரிமைகளை நிலைநாட்ட மாநில மகளிர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஆணையத்தில் குடும்ப வன்முறை மட்டுமில்லாமல் பாலியல் பிரச்சினைகள், பெண்கள் கடத்தப்படுதல், மற்ற வகை குடும்பப் பிரச்சினைகள், வரதட்சணைத் தடுப்பு போன்ற பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு களைப் பெற இந்த ஆணையம் உதவிவருகிறது.

'மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம்' என்ற முன்னோர் மொழிப்படியும், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற நெறிப்படியும் மக்கள் அனைவரும் வாழ்ந்தால் சட்டங் களுக்கு வேலை இல்லை. இருப்பினும் அத்தகைய நிலை இல்லாத சூழலில், சமூக நலத்துறை மூலம் செயல் படுத்தப்படும் திட்டங்கள் பற்றிய கூடுதல் விபரங்களுக்கு tnsocialwelfare.org என்ற வலைத்தளத்தை பார்க்கலாம். அல்லது ஒவ்வொரு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் இருக்கும் மாவட்ட சமூக நல அலுவலரை அணுகலாம்.

பெண்கள் எதிர்கொள்ள வேண்டிய பிரச்னைகளைத் தீர்க்க தமிழ்நாடு அரசும், சமூக நலத்துறையும் பல நடவடிக் கைகளை மேற்கொண்டுவருகிறது. பெண்களின் பாதுகாப்பிற்காக இயற்றப்பட்ட சட்டங்களை முறையாகத் தெரிந்துகொண்டு சரியான வகையில் செயல்பட்டால் பெண்களின் வாழ்க்கையில் ஏற்றம் வரும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

---

- **வே. அமுதவல்லி இ.ஆ.ப.,**
ஆணையர், சமூக நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

# இந்தியாவின் சிறு நகரங்களுக்கு விமானச்சேவை - உதான் திட்டம்

- சிந்து பட்டாச்சாரியா

''செயல்படாத'' விமான நிலையங்கள் இந்தியாவில் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன என்பது குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அம்சமாக உள்ளது. ஆனால் இந்த விமான நிலையங்கள் விமானச் சேவையை இயக்கும் வாய்ப்புள்ளவையாகவே எப்போதும் இருந்து வருகின்றன. ஆனால் பல்வேறு காரணங்களால் அவை பயன்படுத்தப்படாமல் அப்படியே செயலற்றுப் போய் உள்ளன. ஒட்டுமொத்தமாக நம் நாட்டில் சுமார் 400 விமான நிலையங்களும், விமான நிலைய வசதிகள் இல்லாத விமான ஓடுபாதைகளும் உள்ளன. ஆனால் இவற்றில் 75 மட்டுமே கடந்த ஆண்டு வரையில் பயன்பாட்டில் இருந்தன. இத்தகைய செயல்படாத விமான நிலையங்களில் சில முதலாம் உலகப்போருக்கும், இரண்டாம் உலகப்போருக்கும் இடைப்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்டவை ஆகும். பிறகு அவை உபயோகத்தில் இல்லாமல் முடங்கிப் போயின. சில விமான நிலையங்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் உள்ளன. ஆனால் இவற்றைச் செயல்பட வைக்க நிறைய முதலீடு தேவைப்படும். இவற்றில் சில, எந்தவிதமான வர்த்தக இலாபமும் இல்லாமல் அரசியல் காரணங் களுக்காக மட்டுமே கட்டப்பட்டன. அத்தகைய விமான நிலையங் களில் இருந்து எப்போதுமே விமானம் புறப்படவோ அல்லது வந்து சேரவோ இல்லை. ஏனெனில் இந்த வழித்தடங்கள் இலாபம் தருபவவையாக இல்லை என்பதே காரணம் ஆகும். இந்தியாவில் இப்போது விமானப் பயணச் சந்தை உலகளவில் மிக வேகமாக வளர்ந்து வருகின்றது. அத்தகைய சூழலில், பெரும் பான்மையான விமானப் போக்கு வரத்து என்பது மிகப் பெரும் நகரங்களில் உள்ள விமான நிலையங்களிலேயே மேற் கொள்ளப்படுகின்றது. தில்லி, மும்பை, பெங்களூர், சென்னை, கொல்கத்தா மற்றும் ஹைதராபாத் ஆகிய ஆறு விமான நிலையங் களில் மட்டுமே நாட்டின் விமானப் போக்குவரத்தில் பயணிகள் பயணிக்கும் எண்ணிக்கையானது மூன்றில் இரண்டு பங்காக உள்ளது.

அதே போன்று விமானங்கள் வந்து செல்லும் எண்ணிக்கை யானது 60 சதவிகிதம் அளவிற்கு இந்த ஆறு விமான நிலையங் களிலேயே நடைபெறுகிறது. இந்திய விமான நிலையங்கள் ஆணையம் தரும் தரவுகளின் அடிப்படையில் இது கூறப்படுகிறது. இந்த விமான நிலையங்கள் ஏற்கனவே முழுத்திறனையும் அடைந்து விட்டன.

விமானப்பயணம் என்பது பெரும்பாலும் பெரிய நகரங்களி லேயே செயல்பட்டு வருகிறது. அதே சமயம் சிறிய விமான நிலையங்கள் செயலற்று உள்ளன. இத்தகைய மிகப்பெரிய போக்கு வரத்து ஏற்றத்தாழ்வைச் சரிசெய்ய வேண்டுமென்று அரசு விரும்புகிறது. இதன் நோக்கம் என்னவென்றால் "ரப்பர் செருப்பு" போட்டிருக்கின்ற எளிமையான நபரும் கூட செலவு செய்யக்கூடிய அளவில் விமானக்கட்டணம் இருக்கக்கூடிய நிலையை ஏற்படுத்துதலே ஆகும். அதாவது இதன் அர்த்தம் என்னவெனில் நிலை II மற்றும் நிலை III நகரங்களில் விமானச் சேவையைத் தொடங்குவதும் விமானக் கட்டணங்களைச் சிக்கனமான நிலையில் வைத்திருப்பதுமே ஆகும். இது தேவைக்கு அதிகமாக உள்ள விமான நிலைய உள்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிப்பதோடு இந்தியாவின் தொலைதூர இடங்களுக்கு வர்த்தகப்பிரிவினர் மற்றும் தனிநபர்கள் பயணிக்க வான்வழி இணைப்பையும் தருகிறது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ''உதான்'' திட்டம் தொடங்கப்பட்டது. இதுவரை விமானப் போக்குவரத்தையே கண்டிராத சிறுநகரங்கள், அணுகு வதற்கு கடினமான மலைப் பிராந்தியங்கள் மற்றும் நாட்டின் வடகிழக்குப் பகுதிகள் ஆகியவை இப்போது உதான் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்தியாவின் வான்வழிப் பயண வரைபடத்தில் இந்தப் பகுதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. உதான் (UDAN) என்பதன் விரிவாக்கம் நாட்டின் சாதாரண குடிமக்களும் விமானத்தில் பறக்கலாம் ("Ude Desh Kaa Aam Naagrik") என்பதாகும். இந்தத்திட்டம் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் தேதி தொடங்கப்பட்டது. சிம்லா தில்லி இடையிலான விமானச்

சேவையைக் கொடி அசைத்து பிரதம மந்திரி தொடங்கிவைத்தார். இந்தச் சேவையை அல்லையன்ஸ் ஏர் நிறுவனம் இயக்குகிறது. அதே நாளில் பிரதம மந்திரி நான்டெட்-ஹைதராபாத், கடப்பா-ஹைதராபாத் ஆகிய வான் தடங்களிலும் விமானச் சேவையைத் தொடங்கி வைத்தார். உதான் திட்டத்துக்காக விருப்ப முள்ள விமான நிறுவனங்களுக்கு இடையில் இரண்டு சுற்று ஏலம் நடந்து முடிந்துள்ளது. இயங்காத நிலையில் உள்ள 31 விமான நிலையங்களுக்கு உயிர் கொடுத்து செயல்பட வைப்பது முதல் சுற்றுக்கான இலக்காகும். அதே போன்று இரண்டாம் சுற்றுக்கான இலக்கு என்பது இயங்காத நிலையில் உள்ள 29 விமான நிலையங்களுக்கு விமானங்கள் வந்து போகச் செய்வதாகும்.

சிம்லா விமானத்தை எடுத்துக் கொண்டால் முதலில் இது வாரம் ஐந்து நாட்கள் மட்டுமே செயல்படுவதாகத் திட்டமிடப்பட்டது. அதற்காக இந்த விமானத்தில் தில்லி-சிம்லா பயணத்துக்கு 35 இருக்கைகள் ஒதுக்கப்பட்டன. சிம்லா விமான நிலையத்தின் கட்டுப்பாடுகள் காரணமாக சிம்லாவுக்குத் திரும்பிவரும் பயணத்தின் போது 15 இருக்கைகள் மட்டுமே ஒதுக்கப்பட்டன. இதில் சிக்கனமான பயணக்கட்டம் உள்ளது. சிம்லா விமான நிலையம் 2012ஆம் ஆண்டு முதல் செயல்படாமல் இருந்தது. வர்த்தக ரீதியில் இலாபம் இல்லை என இது முடக்கப்பட்டிருந்தது. இந்த விமான வழித்தடத்தில் வருமானம் நிலையற்றதாக இருப்பது தெரிந்த நிலையிலும் கூட, ஏர் இந்தியா ஏன் சிம்லாவில் விமானச்சேவையை மீண்டும் தொடங்கியது? புதிய உதான் திட்டத்தின் கீழ் மாநிலஅரசும், மத்தியஅரசும் மானியம் தர கடமைப்பட்டுள்ளன. அதாவது ஏற்கனவே நிர்ணயித்த பொருளா தார நிலைபேறு இடைவெளியை நிரப்பும் நிதியம் என்ற அம்சத்தின் கீழ் மானியம் வழங்கியாக வேண்டும். தில்லி-சிம்லா விமானச் சேவையானது இங்கு மீண்டும் விமானப் பயண நடவடிக்கைகள் இயங்க வழிவகுத்தது.

இந்த விமானத்தின் பொருளாதார நிலையை அறிந்து கொள்வது என்பது சுவாரஸ்யமான விஷயமாக இருக்கும். இந்த விமானத்துக்கான மானியம் ஒரு இருக்கைக்கு ரூ.3,300க்குச் சற்று கூடுதலாகும். உதான் திட்டத்தின் கீழ் செயல்படும் விமானங் களுக்காக நிர்ணயிக்கப்பட்ட, பொருளாதார நிலைபேறு இடைவெளியை நிரப்பும் நிதியம் ஃபார்முலாவின்படி, ஒவ்வொரு விமானத்திலும் 50 சதவிகித இருக்கைகளுக்கு மானியம் உண்டு. மூன்று ஆண்டுகளுக்கு அந்த விமான வழித்தடத்தில் ஒரே விமான நிறுவனம் செயல்பட அனுமதிக்கப்படுகிறது. தரை இறங்கும் விமான நிலையங்களில் இதர சலுகைகளும் கிடைக்கும் (விலை குறைவாக எரிபொருள், விமான நிலையக் கட்டணம் இல்லாதது போன்ற சலுகைகள்). இதற்கு பிரதிபலனாக, விமான நிறுவனமானது ஒரு மணி நேரத்திற்கு ஒரு இருக்கைக்கு அல்லது 500 கி.மீ தூரம் பறப்பதற்கு ஒரு இருக்கைக்கு ரூ.2,500க்கு மிகாமல் கட்டணத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவேண்டும்.

பொருளாதார இடை வெளியை நிரப்பும் நிதியத்திற்கு (Viable Gap Funding-VGF) எவ்வாறு நிதி தரப்படுகிறது? நெருக்கடி நிறைந்த மெட்ரோ விமான நிலையங்களில் இருந்து புறப்படும் ஒரு விமானம் ஒவ்வொரு முறை புறப்படும் போதும் அரசுக்கு ரூ.5.000 செலுத்தவேண்டும். இதனால் உதான் விமானக் கட்டணங்களுக்கான மானியம் சாத்தியம் ஆகும். அரசாங்க அதிகாரிகள் கூற்றுப்படி "இலாபகரமான" வழித்தடங் களுக்கு மட்டுமே இந்தக் கட்டணம் பொருந்தும். இத்தகைய கட்டணத்தின் மூலம் உதான் திட்டத்தின் முதலாம் ஆண்டில் ரூ.300 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி மத்திய மற்றும் மாநில அரசுகள் முறையே ரூ.60 கோடி மற்றும் ரூ.200 கோடி வழங்கியுள்ளன. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் ரூ.560 கோடி VGF நிதியத்துக்குச் சேர்ந்துள்ளது. உதான் திட்டத்தின் முதல் 12 மாதங்களுக்கு இந்த நிதியானது மானியமாக வழங்கப்படுகிறது. தொடங்கியதில் இருந்து முதல் 12 மாதங்களில் சிம்லா-தில்லி விமானம் ஒட்டு மொத்தமாக 12,000 பயணிகளை ஏற்றிச் சென்றுள்ளது. அதாவது சராசரியா க பயணிகள் நிரம்புதல் 90 சதவிகிதம் ஆகும் (நிரம்புதல் சதவிகிதம் ஒதுக்கக் கூடிய மொத்த இருக்கைகளில் எத்தனை இருக்கைகளில் பயணிகள் இருக்கிறார்கள் என்பதை வைத்து கணக்கிடப்படுகிறது). இந்த விமானத்தில் உதான் பயணக் கட்டணம் ஒரு நபருக்கு சராசரியாக ரூ.1970 ஆகும். அதேசமயம் உதான் திட்டத்தில் இல்லாவிட்டால் சாதாரணமாக இந்த விமானத்தில் பயணக்கட்டணம் சராசரியாக ரூ.4,000 என இருக்கும்.

உதான் திட்டத்துக்கான மற்றொரு முக்கியமான அம்சம் இங்கே தரப்படுகிறது: கிழக்கு சிக்கிமில் உள்ள பாக்யாங்க், விரைவில் நம்நாட்டின் விமானப்

போக்குவரத்து வரைபடத்தில் இடம் பெற உள்ளது. ஸ்பைஸ்ஜெட் நிறுவனம் பம்பார்டியர் கியூ 400 விமானத்தை சிக்கிமில் இருந்து தில்லிக்கு இயக்க உறுதி அளித்துள்ளது. சிக்கிம் தலைநகரான கேங்க்டாக் நகரில் இருந்து 35 கி.மீட்டர் தூரத்தில் உள்ள பாக்யாங்க் விமான நிலையத்தில் இருந்து தில்லிக்கு விமானச் சேவையை அளிப்பதுடன் கௌஹாத்தி மற்றும் கொல்கத்தாவுக்கும் விமானம் இயக்க இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதுவரை செயல்படாமல் இருந்து உதான் திட்டத்தின் கீழ் இப்போது உயிர்பெற்று செயல்பட இருக்கும் விமான நிலையங்களில் பஞ்சாப் மாநிலத்தின் ஆதம்பூர், பாட்டின்டா, பதன்கோட்; ராஜஸ்தான் மாநிலத்தின் பிக்கானேர், ஜெல்சல்மார்; குஜராத்தில் ஜாம்நகர், முந்த்ரா ஆகிய விமான நிலையங்களும் அடங்கும். இந்தப் பட்டியல் மேலும் நீள்கிறது. உதான் திட்டத்தின் கீழ் செயல் படாத விமான நிலையங்கள் மட்டும் பயன் பெறவில்லை. குறைந்த அளவில் விமானச் சேவைகள் நடைபெறும் விமான நிலையங்களும்கூட இந்தத் திட்டத்தின் கீழ் பலன் அடைந்து வருகின்றன.

உதான் திட்டத்தின் கீழ் செயல்படாத அல்லது குறைந்த சேவை உள்ள விமான நிலையங்களை முழுவீச்சில் செயல் பாட்டுக்குக் கொண்டுவர மத்தியஅரசு ஏற்கனவே ரூ.4,500 கோடி ஒதுக்கியுள்ளதாக இந்திய விமான நிலையங்கள் ஆணையத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். பல ஆண்டுகாலமாக பயன்படுத்தப் படாமல் உள்ள விமான நிலையங்களை, விமானச் சேவைகளைத் திரும்ப இயக்கும் நிலைக்குக் கொண்டு வரவேண்டும். இதற்கு விமானங்கள் பறப்பதற்கு முன்பு பயணியர் விமானப்போக்குவரத்து தலைமை இயக்குநர் (DGCA) இடம் இருந்து உரிமம் பெற்றாக வேண்டும். சட்டீஸ்கர் மாநிலத்தில் உள்ள ஜகீதல்பூர் விமானநிலையம் விமானச் சேவைக்குத் தயாராகி தற்போது டிஜிசிஏயிடம் இருந்து உரிமம் பெற்றுள்ளது. அம்பிகாபூர் விமான நிலையம் உரிமத்துக்காகக் காத்திருக்கிறது. பிலாஸ்பூரில் விமான நிலையத்தை இயக்கும் நிலைக்கு கொண்டு வருவதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஒடிசா மாநிலத்தின் உத்கேலா மற்றும் ஜெய்போரில் இருந்து விமானங்கள் பறக்கத் தொடங்கியுள்ளன. ஜார்சகூடாவில் இருந்து விமானச் சேவை முன்பே தொடங்கப்பட்டுவிட்டது.

உள்நாட்டு விமானச் சேவைக்கான சந்தை உலகளவில் இந்தியாவில்தான் வேகமாக வளர்ச்சி பெற்றுவருகிறது. இந்த வளர்ச்சியைத் தக்க வைத்துக் கொள்ள பிராந்திய இணைப்பு என்பது மிக முக்கியமானது ஆகும். மெட்ரோ நகரங்களில் விமான நிலையத்தின் கையாளும் திறனை அதிகரிப்பதும் முக்கிய மானது ஆகும். அதேசமயம் அதிக வளர்ச்சியை எட்ட, பிராந்திய இணைப்பை மேம் படுத்துவதே நம் முன்னுள்ள வழியாகும். உதான் திட்டத்தின் கீழ் உள்ள VGF அம்சமானது முன்பே பிரபலமான விமான நிறுவனங்களைக் கவர்ந்ததோடு, ஏர் டெக்கான் மற்றும் ஏர் ஒடிசா போன்ற புதிய விமான நிறுவனங்களையும் கவர்ந்துள்ளது. முதல் கட்டத்தில் இந்த விமான நிறுவனங்கள் மண்டல இணைப்புத் திட்டம் (Regional Connectivity Scheme-RCS) வழித் தடங்கள் பலவற்றைக் கையகப் படுத்தி உள்ளன. இப்போது இதற்குள் பெரிய நிறுவனங்களும் கால்பதிக்கத் தொடங்கியுள்ளன. உதான் திட்டத்தில் சேர இன்டிகோ, ஸ்பைஸ்ஜெட், ஜெட் ஏர்வேஸ் ஆகிய விமான நிறுவனங்களும் முன் வந்துள்ளன.

எந்த ஒரு குறிக்கோள் சார்ந்த இணைப்புத் திட்டத்திலும் எதிர்பார்க்கப்படுவது போன்று உதான் திட்டத்தின் கீழும் அனைத்துச் செயல்பாடுகளும் ஆரம்பத்தில் திட்டமிட்டது போன்று நடக்கவில்லை. இயங்க வைக்க வேண்டிய விமானச் சேவை இல்லாத அல்லது குறைவான விமானச்சேவை உள்ள அனைத்து விமான நிலையங்களும் இந்தத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு புதுப்பிக்கப்படவில்லை. அதே போன்று விமான நிறுவனங்கள் முன்வைத்த விலைப் புள்ளிகள் விமான வழித்தடங்களில் (புதிய மற்றும் ஏற்கனவே இருக்கின்ற வழித் தடங்கள்) எல்லாம் இயக்கப்பட ஆரம்பிக்க வில்லை. மேலும் இதுவரை உதான் திட்டத்தின் கீழ் ஹெலிகாப்டர் சேவை எதுவும் தரப்படவில்லை.

உதான் திட்டத்தின் கீழ் செயல்படத் தொடங்கியுள்ள சில விமான நிறுவனங்களுக்கு முன் அனுபவம் குறைவாக உள்ளது அவற்றுக்கு நிதிப் பற்றாக்குறையும் உள்ளது தொலைதூர இடங்களில் இருந்து இணைப்பு வழங்குவதில் அவை பொருளாதார ரீதியிலும், போக்குவரத்து வசதி ரீதியிலும் சிரமப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. விலைப்புள்ளி கோருதலுக்கான முதல் சுற்று முடிந்த பிறகு, ஐந்து விமான நிறுவனங்களுக்கு 128 வழித்தடங்கள் வழங்கப்பட்டன. இவை அனைத்தும் 2017ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதிக்குள் இயக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஓராண்டுக்குப் பிறகு, இப்போது இந்த



வழித்தடங்களில் பாதி அளவு வழித்தடங்களில்தான் விமானச் சேவை இயக்கப்படுகிறது. ஏற்கனவே பிரபலமான அல்லையன்ஸ் ஏர், ஸ்பைஸ்ஜெட், ட்ரூஜெட் போன்ற விமான நிறுவனங்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட வழித்தடங்கள் அனைத்திலும் அல்லது பெரும்பான்மையான வழித்தடங்களில் விமானங்களை இயக்குகின்றன. ஏர் ஒடிசா மற்றும் ஏர் டெக்கான் போன்ற சிறிய நிறுவனங்கள் முதல் சுற்றில் நான்கில் மூன்று பங்கு வழித்தடங்களைப் பெற்றிருந்தன. ஆனால் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் 15 சதவிகித அளவு வழித்தடங்களில் மட்டுமே இவற்றால் சேவைகளைத் தொடங்க முடிந்துள்ளது. தனக்கு வழங்கப்பட்ட 50 வழித்தடங்களில் ஏர் ஒடிசா எட்டு வழித்தடங்களில் மட்டுமே சேவையைத் தொடங்கியுள்ளது. அதேபோன்று ஏர் டெக்கான் தனக்கு வழங்கப் பட்ட 34 வழித்தடங்களில் 10 வழித்தடங்களில் மட்டுமே சேவையைத் தொடங்கியுள்ளது. இந்த மாத இறுதியில் ஜெட் நிறுவனம் உதான் செயல்பாடுகளைத் தொடங்க உள்ளது. இன்டிகோ மற்றும் ஸ்பைஸ்ஜெட் ஆகியன ஜூலையில் தங்களது சேவையைத் தொடங்க உள்ளன.

மேலும் உதான் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விமானச் சேவை எதிர்பார்த்த அளவில் இல்லை. ஏப்ரல் மாதத்திற்கான டி.ஜி.சி.ஏ தரவுகளின்படி ஏர் ஒடிசா மற்றும் ஏர் டெக்கானின் உதான் விமானங்களில் முறையே நான்கில் ஒரு பங்கும், மூன்றில் ஒரு பங்கும் மட்டுமே இருக்கைகள் நிரம்பின. உள்ளூர் விமான நிறுவனங்கள் அனைத்தோடும் இதனை ஒப்பிட்டுப் பார்க்க இந்த இரண்டு விமான நிறுவனங்கள் சேவைகளை ரத்து செய்யும் விகிதம் அதிக அளவில் இருந்தது. அதனால் பயணிகளின் புகார்களும் அதிகபட்சமாக இருந்தன. இந்தப் புதிய விமான நிறுவனங்கள் உள்கட்டமைப்புப் பிரச்சினைகளால் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. எனவே பயணிகளிடம் இருந்து போதுமான தேவையை உருவாக்க இவை மேலும் சிறிது காலம் காத்திருக்கவேண்டும்.

உதான் திட்டத்திற்கு மற்றொரு தடையாக இருப்பது ஹெலிகாப்டர் சேவைகளை இதுவரை ஆரம்பிக்காததே ஆகும். பற்றாக்குறையான VGF ஆல் முதல் சுற்றில் யாருமே விலைப்புள்ளிகளைக் கோரவில்லை (விலைப்புள்ளி கோரும் வாய்ப்புள்ளவர்கள் பின்னூட்டமாகத் தெரிவித்த தகவல் இதுவாகும்). இப்போது, இரண்டாவது சுற்றிலும் நிர்ணயிக்கப்பட்ட ஹெலிகாப்டர் சேவை குறித்த நெறிமுறைகளை நெறிமுறைப்படுத்தும் அமைப்பு நெறிமுறைகளை இன்னமும் உருவாக்கிக் கொண்டே இருக்கிறது. இன்றுவரை நாட்டில் எங்குமே திட்டமிட்ட, நிர்ணயிக்கப் பட்ட ஹெலிகாப்டர் சேவை இல்லை என்பதையும் இந்தத் தருணத்தில் ஞாபகத்தில் கொள்ள வேண்டும். மேலோட்டமான வழிகாட்டுதலில் இருந்து கறாரான விதிமுறைகள் உருவாக்கப்பட்டாக வேண்டும்.

இறுதியாகச் சொல்வதென்றால், உதான் வழித்தடங்களுக்கான அனுமதியை தங்களின் விருப்பத்துக்கேற்ப பெற்ற விமானம் இயக்கும் நிறுவனங்கள், VGF காலகட்டமான மூன்று ஆண்டுகள் முடிந்ததும் தங்களின் சேவையைத் தொடர்வது மிகவும் கடினமாகவே இருக்கும். குறிப்பாக எண்ணெய் விலை அதிகரித்துக் கொண்டே வரும் சூழலில் சேவையைத் தொடர்வது என்பது சிரமமே ஆகும். உதான் விமானங்களுக்கு பயணிகளை ஈர்ப்பதற்காக, அரசு ஏற்கனவே உள்ள மூன்று ஆண்டு பிரத்யேக சட்டக் கூறுகளை விலக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. விமான வழித்தடத்தில் விமானம் இயக்கும் நிறுவனம் ஆட்சேபணை தெரிவிக்காவிட்டால் இந்த விலக்கல் நடைமுறைப் படுத்தப் படும். எனினும் நீண்ட காலம் இலாபகரமாக, வெற்றிகரமாக இயக்க முடியுமா என்ற சந்தேகம் இன்னமும் தீராமல்தான் உள்ளது.

---

- **சிந்து பட்டாச்சாரியா,** கடந்த 24 ஆண்டுகளாக வர்த்தகம் மற்றும் கொள்கை தொடர்பான இதழியலாளராக உள்ளார். •

## செய்தித்துளிகள்

உயிரி எரி பொருள்கள் பற்றிய தேசியக் கொள்கைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. விவசாயிகளிடம் உள்ள உயிரி எரிபொருள்களின் கூடுதல் கையிருப்பை பொருளாதாரப் பயன்தரும் விதத்தில் பயன்படுத்திக் கொள்ளவும், எண்ணெய் இறக்கு மதிக்கு வெளிநாடுகளைச் சார்ந்து இருப்பதைக் குறைத்துக் கொள்ளும் விதத்திலும் இந்தக்கொள்கை இருக்கும். இரண்டாம் தலைமுறை (அதிக முன்னேற்றம் கண்டுள்ள) எத்தனால் உயிர்ப்பொருள் எண்ணெய் சுத்திகரிப்பாலைகள் சிறப்பாகச் செயல்படும் வாய்ப்பு நிலையை உருவாகுவதற்காக ஆறு ஆண்டு களில் ரூ.5000 கோடி நிதியை அளிக்கவும் இதுவழிவகை செய்கிறது. இதுதவிர, வரி ஆதாயங்களும், வாங்கும் விலையில் அதிகரிப்பும் செய்யப்பட உள்ளன.

***

பசுமைத் திறன்கள் மூலம் 2021 ஆம் ஆண்டில் ஐந்து இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கு வதற்காக பசுமைத்திறன் வளர்ச்சித் திட்டத்தின்படி (Green Skill Development Programme - GSDP) 30 அதி திறன் படிப்புகளை மத்திய அரசு வழங்குகிறது. இதற்குப்பதிவு செய்து கொள்வதற்கான கைபேசி செயலி உருவாக்கித்தரப்பட்டுள்ளது. டேராடூனில் உள்ள வனவிலங்குக் கழகம் (Wild Life Institute of India, Dehradun), மும்பையில் உள்ள இயற்கை வரலாற்றுக் கழகம் (omabay Natural History Society), புனேயில் உள்ள தாவரக் கணக்கெடுப்பு அமைப்பு (Botanical Survey of India), தில்லியில் உள்ள இயற்கைப்பாதுகாப் பிற்கான உலகு தழுவிய நிதியம் (World Wide Fund for Nature - WWF Delhi) ஆகியவை உள்ளிட்ட 80 நிறுவனங்கள் 30 வகையான படிப்புகளை வழங்க இருக்கின்றன. இத்தகைய படிப்புகளுக்கு ஆகும் செலவை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் ஏற்றுக்கொள்ளும்.

***

நுண்நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் இன்னும் அதிகமான நிலப்பரப்பைக் கொண்டு வருவதற்கு ரூ.5000 கோடி நிதியை அளிக்க அரசாங்கம் ஒப்புதல் தந்துள்ளது. பிரதம மந்திரி விவசாயிகள் நலத்திட்டத்தின் (Prathan Mantri Krishi Sinchayee Yojana-PMKSY) கீழ் விவசாய உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் இந்த நிதி பயன்படுத்தப்படும். ஊரகவளர்ச்சிக்கான தேசியவங்கி நபார்ட் (NABARD) இடம் இந்த நிதி இருக்கும். மாநிலங்களுக்கு சலுகைவட்டியில் நுண்நீர்பாசன மேம்பாட்டிற்காக இதிலிருந்து நிதி தரப்படும். நுண்நீர்ப் பாசனவாய்ப்பிருக்கும் 70 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பில் 10 மில்லியன் ஹெக்டேர் நிலத்திற்கு இந்த நிதி பயன்படும்.

***

அடல் ஓய்வூதியத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிந்துள்ள நிலையில் ஒரு கோடிக்கும் அதிகமான சந்தாதாரர்கள் இதில் சேர்ந்துள்ளனர். மே9, 2015இல் இந்தத்திட்டத்தை பிரதமர் கொல்கத்தாவில் தொடங்கிவைத்தார். அடல் ஓய்வூதியத்திட்டத்தில் தற்போது ஒரு கோடியே 10இலட்சம் பேர் சேர்ந்திருக்கின்றனர். உழைக்கும் மக்களில் 85% பேர் முறைசாராப் பணிகளில் உள்ளனர். இவர்கள் நிலையான ஓய்வூதியத்தைப் பெறும் விதத்தில் அடல் ஓய்வூதியத்திட்டம் அமைந்துள்ளது.

***

மாண்புமிகு பிரதமரின் டிஜிட்டல் முன்முயற்சிகளின் வழியில் இந்திய இரயில்வே முதல் முறையாக புகார் நிர்வாக முறையை, முற்றிலும் மின்னணு மயமாக்கியுள்ளது. இரயில்வே மற்றும் நிலக்கரித்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் "இரயில் மதத்" என்ற புதிய செயலியை 11.06.2018 அன்று தொடங்கி வைத்தார். இந்த செயலி பயணிகள் குறைதீர்ப்பை துரிதப்படுத்தி முறைப்படுத்துகிறது. பதிவு செய்யப்படும் புகாரைத் தொடர்ந்து உடனடியாக குறுஞ் செய்தி மூலம் பதிவு எண் ஒன்றை பயணி பெறுவார். புகார்களுக்கான குறைதீர்ப்பு நிலைமை எவ்வாறு உள்ளது என்பது அவ்வப்போது பயணிக்கு தொடர்ந்து தெரிவிக்கப்படும். புகார் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறுஞ் செய்தி மூலம், இரயில்வே துறையால் அனுப்பப்படும். இதன் மூலம், பயணிகள் குறைதீர்ப்பு நிலையை உயர்நிலை நிர்வாகம் தொடர்ந்து கண்காணிக்க முடியும். அதே போல் தூய்மை, உணவு வழங்குதல், பிறவசதிகள் களஅலகுகளிலும் / இரயில்களிலும் / இரயில் நிலையங்களிலும் செயல்படும் விதம் குறித்து மதிப்பீடு செய்யவும் இயலும். குறைதீர்க்கும் செயல்களை மேற்கொள்வதில் பலவீனமான / குறைபாடுடைய, மந்தநிலையில் உள்ள இரயில்கள் / இரயில்நிலையங்களை இது அடையாளம் காணும்.

பாதுகாப்பு, குழந்தை களுக்கான உதவி, போன்ற பல்வேறு உதவிகளுக்கான தொலைபேசி எண்களையும் இரயில் மதத் கொண்டிருக்கும். எளிதான முறையில் உடனடி உதவிக்கு இந்த எண்களில் நேரடியாக தொடர்பு கொள்ளலாம்.

தெரிவு செய்யப்பட்ட இரயில்/ இரயில் நிலையத்தில் தூய்மை மற்றும் பிற வசதிகள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பதன் மீதான போக்குகளை அறிந்து பகுப்பாய்வு செய்யமுடியும். இதன் மூலம் மிகவும் துல்லியமாகவும், பயன்தரும் வகையிலும் நிர்வாக முடிவு எடுக்க இயலும்.

***